REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 15 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 219 | Friday 15, September, 2023 | 20 பக்கங்கள் | 50/-

## இலங்கை பரீட்சை திணைக்களத்தில்
# மாணவர்களுக்கு தினகரனின் சேவை
### 071 490 1089 இலக்கத்தை நாடவும்

இலங்கை பரீட்சை திணைக்களத்தில் மாணவர்களுக்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுக்க 'தினகரன்' பத்திரிகை முன்வந்துள்ளது. அதற்காக +94 71 490 1089 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மாணவர்கள் 06

## நியூயோர்க் நகரில் ஆரம்பமாகவுள்ள
# ஐ.நா பொதுச்சபை கூட்டத் தொடர் 21 இல், ஜனாதிபதி விசேட உரை



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

"2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தல், நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்" என்ற தொனிப்பொருளில், இம்மாநாடு செப்டெம்பர் 18 முதல் 21 வரை நடைபெறும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21ஆம் திகதி மாநாட்டில் உரையாற்றவுள்ளார். 2030 ஆம் ஆண்டிற்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கை 06

# வேலைநிறுத்த பேரணியில் சிக்கிக் கொள்ளாது நாட்டுக்காக பொறுப்புடன் செயலாற்றுங்கள்
## ரயில்வே ஊழியர்களுடனான சந்திப்பில் அமைச்சர் பந்துல வேண்டுகோள்

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன, இரத்மலானையில் உள்ள ரயில்வே பிரதான இயந்திர பொறியியல் அலுவலகம் மற்றும் வேலைத்தளத்தில் விசேட கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்டார். அமைச்சர் நிறுவன வளாகத்தில் ஒவ்வொரு திணைக்களத்தின் பங்களிப்பையும் அவதானித்து நிறுவன ஊழியர்களுடன். சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய அமைச்சர்,

பெருமளவான பயணிகளுக்கு திறமையான சேவையை வழங்க தற்போதைய என்ஜின்கள் போதாது. சுமார் 100 ரயில்கள் தேவைப்பட்டாலும் தற்போது எழுபது மட்டுமே உள்ளன. புதிய என்ஜின்கள், தண்டவாளங்கள் மற்றும் உதிரிப் பாகங்களைப் பெற வெளிநாட்டுக் கடன் பெறுவது சிரமமாகும். வெளிநாட்டு கடனைப் பெறாமல் புதிய என்ஜின்கள் மற்றும் பெட்டிகளை வாங்க முடியாது.

இரத்மலானை ரயில் இயந்திர வேலைத்தளத்தில் நிலவும் பல பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இந்த நிறுவனத்தை திறம்பட நடத்த, ஜெர்மன் ரயில்வே தொழில்நுட்ப நிறுவனத்தில், ஏற்கனவே உள்ள பழைய என்ஜின்கள் மற்றும் இயந்திரங்களைப் புதுப்பிக்க பயிற்சி பெற்ற சுமார் நூறு இளைஞர்கள் மற்றும் யுவதிகளை வேலைக்கு அமர்த்த வேண்டும். அந்நியச் செலாவணி நெருக்கடியால் பெற முடியாத உதிரி பாகங்கள் மற்றும் பகுதிகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

இதன்படி, அமைச்சரவையின் அங்கிகாரம் மற்றும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அனைவரின் பங்களிப்புடன், சுமார் ஆறுமாத கால துரித வேலைத்திட்டத்தின் கீழ் இருபது புதிய என்ஜின்களை ஈடுபடுத்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த தொழிற்சாலையில் சுமார் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் தொழிலாளர்கள் வேலை 06



## ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்
# தவறான தகவல்களுடன் இலங்கை குறித்து அறிக்கை
### அரசு கவலை தெரிவித்து முற்றாக மறுப்பதாக ஐ.நாவின் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க தெரிவிப்பு




(லோரன்ஸ் செல்வநாயகம்)

தவறான தகவல்களுடன் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் முன்வைத்துள்ள அறிக்கை தொடர்பில், இலங்கை அரசாங்கம் அதன் கவலையை வெளியிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச பாதுகாப்பு அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இலங்கை, முழுமையான விசாரணையை மேற்கொண்டு நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இருந்த போதும் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி தாக்குதல் தொடர்பில் தவறான விடயங்களை முன்வைத்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிலுள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க தெரிவித்துள்ளார். மேற்படி அறிக்கை தொடர்பில் தெரிவித்துள்ள அவர், அந்த அறிக்கை தவறான விடயங்களுடன் உறுதிப்படுத்தப்படாத மற்றும் பாரபட்சமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஐ.நா சபை மற்றும் மனித உரிமைகளுக்கான 06

# கொரியாவில் இலங்கையருக்கு அதிகளவு தொழில் வாய்ப்புகள்
### அமைச்சர் மனுஷவிடம் கொரிய அமைச்சர் உறுதி



கொரியாவில் இலங்கைப் பணியாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கும் தற்போது வழங்கப்படும் கொரிய வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென கொரிய தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் லீ ஜன்ங் சிக் (14) அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் உறுதியளித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் 06

# எரிபொருள் நிலையங்களில் விரைவில் தானியங்கி பம்பிகள்
### அறவீட்டு உபகரணங்களை பொருத்தவும் ஏற்பாடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டிலுள்ள சகல எரிபொருள் நிலையங்களிலும் தானியங்கி எரிபொருள் பம்பிகள் மற்றும் பணம் அறவீட்டு உபகரணத்தை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அடுத்த வருடம் முதல் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 06

# க.பொ.த.உயர்தர பரீட்சை நவ.27 முதல் டிசம்.21 வரை
### பரீட்சைக்கான அட்டவணை வெளியீடு

லோரன்ஸ் செல்வநாயகம்

2023 இல் நடத்தப்படவுள்ள கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ளது.

அதற்கிணங்க கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளதுடன் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி பரீட்சை நடவடிக்கைகள் நிறைவுபெறும் என்றும் 06

# நெடுந்தீவு கடற்பரப்பில் 19 இந்திய மீனவர்கள் கைது



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 19 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இதன்போது இவர்களிடமிருந்து மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் நேற்று (14) இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இவர்களை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# 15,000 US $ பரிசுத் தொகையை மைதான பணியாளர்களுக்கு வழங்கிய ரோஹித் சர்மா
### இந்திய அணித் தலைவருக்கு பலரும் பாராட்டு



இந்திய–பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆசிய கிண்ணத்துக்கான போட்டியில் கிடைத்த வெற்றித் தொகையை இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோஹித் சர்மா, மைதானப் பணியாளர்களுக்கு வழங்கியுள்ளார். கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில், கடந்த திங்கட்கிழமை 06



03
போதகர் ஜெரோமின் வங்கி கணக்கில் 1,226 கோடி ரூபா
நீதிமன்றத்தில் உறுதியானது



03
ஒரு வருடத்தில் மட்டும் 60 விமானிகள் இராஜினாமா
விரைவில் வெளிநாட்டு விமானிகள் சேவைக்கு



03
யாழ்.ஆஸ்பத்திரியில் துண்டிக்கப்பட்ட
சிறுமியின் கை, ஆய்வுகளுக்காக கொழும்புக்கு அனுப்ப உத்தரவு

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பு!

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்றுக்கொள்ளப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்கான விண்ணப்பங்களை Online ஊடாக அனுப்பி வைக்க முடியுமென, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். www.ugc.ac.lk 06

# பகிடி வதையை அறியப்படுத்த தொலைபேசி இலக்கம் அறிமுகம்!
## 0765453454



பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் பகிடி வதை சம்பவங்கள் தொடர்பில் அறியப்படுத்துவதற்காக, பொலிஸ் திணைக்களம் விஷேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, 076 545 3454 என்ற கையடக்க தொலைபேசி இலக்கத்துக்கு இது தொடர்பான தகவல்களை வழங்க முடியுமென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் ஜீவனின் அழைப்பில் ஐ.நா.வதிவிட பிரதிநிதி விரைவில் மலையகம் விஜயம்



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ், மலையகப்பகுதிக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அமைச்சரின் அழைப்பையேற்று அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக இ.தொகா நேற்று தெரிவித்தது. 06

# IMF இன் கடன் தவணை முதலாவது மீளாய்வு அமர்வு நேற்று ஆரம்பம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு தொடர்பான முதலாவது மீளாய்வு அமர்வு, நேற்று ஆரம்பமானதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மேற்படி மீளாய்வு அமர்வில் பங்கேற்பதற்காக சர்வதேச நாணயத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று, நாட்டுக்கு விஜயம் செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த வகையில் நேற்று முற்பகல் 06

# பழுதடைந்த கேக் விற்பனை
# பேக்கரிக்கு எதிராக முறைப்பாடு வவுனியாவில் சம்பவம் பதிவு



வவுனியாவில் பழுதடைந்த கேக் ஒன்றை விற்பனை செய்ததாக பேக்கரி ஒன்றுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் இந்த கேக் விற்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் இதுபற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த பேக்கரியில் விற்பனை செய்யப்பட்ட 06

## இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

ஜயவீர முதியன்சேலாகே தமித் குமார ஜயவீர ஆகிய நான், நாகஹகந்த மாவத்தகமவில் நடத்திச் செல்லப்படுகின்ற சுமித் செவ்விளநீர் விற்பனை நிலையத்தில் உணவுப் பரப்பளவை கட்டளையை மீறிய குற்றத்தினை மேற்கொண்டமைக்காக 2023.09.13ம் திகதிய வழக்கு இல. 98139/2023 இன் கீழ் பீலெஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தினால் குற்றத்திற்காக ரூ. 10,000/= தண்டத் தொகை விதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.



கொழும்புக்கு கல்விச் சுற்றுலா வந்திருந்த நாத்தாண்டிய சாஹிரா கல்லூரி மாணவர்கள் லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட வந்திருந்த போது எடுக்கப்பட்ட படம்.
(படம் ரஞ்சித் அசங்க)

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

**விலை கூறல் இல. : P/PROC/2023/186**

**அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 200,000 Visa இரட்டை இடைமுக (Dual Interface) கொடுப்பனவு அட்டைகளை வழங்குதல்**

1. அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 200,000 Visa இரட்டை இடைமுக (Dual Interface) கடன் கொடுப்பனவு அட்டைகளை இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கென ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களைக் கீழ்க் காணும் நிபந்தனைகளுக்கு இணங்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

### தகுதி அளவுகோல்கள்

**முதன்மை / உண்மை உபகரண உற்பத்தியாளர் (OEM)**

i. விலை கூறுபவர் 2023.08.31தினத்தன்று முடியும் கடந்த இரண்டு வருடங்களினுள் ஏதேனுமொரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வங்கிக்குக் குறைந்தபட்சம் 200,000 இரட்டை இடைமுக Visa அட்டைகளை ஒற்றை ஒப்பந்தத்தில் விநியோகித்திருக்க வேண்டும்.

ii. உற்பத்தியாளர், வழங்கப்பட்ட உற்பத்திகள் (சிப் வன்பொருள் மற்றும் இயக்கு தளம் OS) எந்தவொரு சர்வதேச புலமைசார் சொத்துக்களினதும் (Intellectual Property) விதிகளை மீறவில்லை எனும் சத்தியக் கடதாசி ஒன்றை வழங்க வேண்டும்.

**ஏலவிலை கூறுபவர்**

i. ஏலவிலை கூறுபவர் உண்மையான உபகரண உற்பத்தியாளராக (OEM) அல்லது உற்பத்திப் பொருளின் உரிமையாளராக அல்லது அவர்களின் அதிகாரம் அளிக்கப்பட முகவராகக் காணப்பட வேண்டும்.

ii. ஏலவிலை கூறுபவர் உண்மையான உபகரண உற்பத்தியாளரல்லாதவிடத்து, ஏலவிலை கூறுபவர் குறைந்தபட்சம் ஒரு ஆண்டாவது EMV அட்டைகள் தொடர்பில் உற்பத்தியாளரின் அனுமதி பெற்ற முகவராக இருந்திருக்க வேண்டும். (முகவராகச் செயற்பட உற்பத்தியாளரிடமிருந்து பெற்ற அனுமதிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

iii. ஏலவிலை கூற ஆர்வமுடையவரின் அல்லது அவரது நிறுவனத்தின் வருடாந்தப் பணப் புரள்வு கடந்த மூன்று தொடர் நிதி ஆண்டுகளில் [(2019/20, 2020/21, மற்றும் 2021/22) அல்லது (2020, 2021 மற்றும் 2022)] ஆகக் குறைந்தது ரூ.150 மில்லியனாகக் (அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயமாக) காணப்பட வேண்டியதுடன் நிறுவனமானது தேறிய மதிப்புடைய இலாபமீட்டும் நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

iv. ஏலவிலை கூறுபவர் தவறான ஒப்பந்தக்காரராக இலங்கை அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் ஒரு அரசாங்க நிறுவனத்தின் அல்லது இலங்கை வங்கியின் பட்டியலில் காணப்படாதவராக இருக்க வேண்டும்.

v. ஏலவிலை கூறுபவர் இலங்கைக்குள் வங்கியின் வர்த்தகக் களம் தொடர்பில் நலன்சார் முரண்பாடுடையவராக இருத்தலாகாது.

(ஏலவிலை கூறுபவர் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிபந்தனைக்குமான உரிய ஆதார ஆவணங்களை ஏலவிலை கூறல்களுடன் இணைக்க வேண்டும்.)

2. ஏலவிலை கூறலுக்கான ஆவணங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு, 14ஆம் மாடி, தலைமை அலுவலகம், இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியிலுள்ள பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1500 மணி வரை 2023.10.05ஆம் திகதி வரை இலவசமாகப் பார்வையிடமுடியும்.

3. ஏலவிலை கூற ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலை கூறல் ஆவணத் தொகுதியை திருப்பிச்செலுத்தாக் கட்டணம் ரூபா.16,000/- (வரி உள்ளடங்கலாக) (கட்டணம் செலுத்தும் முறை-பணம்) அல்லது USD.51/- (கட்டணம் செலுத்தும் முறை-SWIFT) செலுத்தி மேற்குறித்த அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம்.

Swift code : BCEYLKLX
கணக்கின் பெயர் மற்றும் இலக்கம் : Properties Dept. Non-Refundable Tender Deposit, 52401015

**குறிப்பு :**

i. SWIFT கட்டணம் மற்றும் அனைத்து வங்கித் தொடர்புக் கட்டணங்களும் ஏலவிலை கூறுபவரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். வங்கியானது மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக USD 51 என்ற தேறிய தொகையைப் பெற வேண்டும்.

ii. SWIFT செய்தியின் விபரத்தில் "Non-Refundable Tender Deposit fee-P/PROC/2023/186" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை (இலங்கை வங்கி தவிர்ந்த வேறொரு) அனுமதி பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து பெற்ற 2024.02.02ஆம் திகதி வரை செல்லுபடியாகும் 1.28 மில்லியன் ரூபாய் அல்லது USD 4040 பெறுமதிக்குப் பெற்றுக்கொண்ட வங்கி உத்தரவாதம் / விலை கூறல் பிணையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். ஐக்கிய அமெரிக்க டொலரிலான விலைகூறல் பிணைமுறியெனின் அது இலங்கை வங்கியின் முகவர் வங்கி ஒன்றிடமிருந்து பெறப்பட்டு இலங்கையில் உள்ள அனுமதி பெற்ற வணிக வங்கி ஒன்றினால் ஒப்பமிடப்பட்டதாக இருத்தல் வேண்டும். விலைகூறல் பிணை முறிக்குப் பதிலாக பண வைப்புகள் / கொடுப்பனவுக் கட்டளைகள் / வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

| | | |
|---|---|---|
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும் | : | 2023.10.05 1500 மணி வரை |
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம் | : | 0900 மணி முதல் 1500 மணி |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் | : | 2023.09.26ஆம் திகதி 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகத்தின் 14ஆம் தளத்தில் |
| ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | : | 2023.10.06 1000 மணி |
| ஏலவிலை கூறல்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் | : | ஏலவிலை கூறல்கள் மூடப்பட்டவுடன் திறக்கப்படும் |

இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமை அலுவலகம்
இலங்கை வங்கிச் சதுக்கம்
இல. 01. இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.
தொலைபேசி : 0112 204260, 0112 544310
தொலைநகல் : 011 2449629
மின் அஞ்சல் : procofficer1@boc.lk

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## கோப்பாய் கலாசாலையின் நூற்றாண்டுகால ஒன்றுகூடல்



யாழ். கோப்பாய் ஆசிரியர் கலா சாலையின் நூற்றாண்டுகால ஒன்று கூடல் நிகழ்வின் சிறப்புரை தொடர் நிகழ்வு கலாசாலையில் நேற்று வியாழக்கிழமை (14) நடைபெற்றது.

கலாசாலையின் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கல்வி அமைச்சு அதிகாரியும் சட்டத்தரணியுமான கோதை நகுலராஜா 'ஆசிரியத்துவத்தின் பெருமை' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

அத்துடன், அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் சிவலோஜினி சுரேந்திரனும் நிறைவுரையை பிரதி அதிபர் த.கோபால கிருஷ்ணனும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் முன்னாள் விரிவுரையாளர் கோதை நகுலராஜாவை ஆசிரிய கலாசாலை சமூகத்தினர் கௌரவித்தனர். நிகழ்வை ஆசிரிய கலாசாலையில் முதலாம் வருடத்தில் இரண்டாம் மொழியாக தமிழ் பாடத்தை கற்கும் ஆசிரிய மாணவி புத்திக நெறிப்படுத்தினார்.

## கிளிநொச்சி மத்திய கல்லூரிக் காணி இராணுவத்தினரால் விடுவிப்பு



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் காணி இராணுவத்தினரால் நேற்று வியாழக்கிழமை (14) உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் இரத்தினபுரம் பிரதேசத்தின் வீதிப் பக்கமாக இருந்த காணியே இவ்வாறு இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மத்திய கல்லூரியின் இந்தக் காணியானது, கடந்த 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த நிலையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியை விடுவித்தமையை உறுதி செய்வதற்கான ஆவணப் பத்திரத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் இராணுவ அதிகாரி உத்தியோகபூர்வமாகக் கையளித்து வைத்தார். இந்தக் காணியை விடுவிப்பதற்கான நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கரைச்சி பிரதேச செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இளைஞன் சடலமாக மீட்பு

நோர்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெஹல்கமு கந்த பகுதியில் 17 வயதான இளைஞன் ஒருவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பில் நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இளைஞன் தனது வீட்டின் அறையில் தற்கொலை செய்துகொண்டுள்ளார். காதல் விவகாரம் காரணமாக ஏற்பட்ட மனவேதனையால் இளைஞன் தற்கொலை செய்துகொண்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அறியமுடிகின்றது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்

**(தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது)**

**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்திற்காக (SLSI) CCTV CAMERA முறைமையொன்றை வழங்கல், ஓப்படைத்தல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்**

இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்திற்காக CCTV CAMERA (IP Camera) முறைமையொன்றை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன. 2023.09.18 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 இலங்கை ரூபா மற்றும் SSCL மற்றும் பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர், கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா இடம், 17 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவன நிருவாகப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 2023.09.27 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு நிறுவனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

விலைமனுக்கோரல்கள் 2023.10.09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா இடம்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**

**தொலைபேசி : 0112 671567-72**

## மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிப்பு



**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் அவிசாவளை கிரிவன்தல பகுதியில் நேற்று முன்தினம் இரவு மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் அவ்வீதியினூடான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அவிசாவளை கிரிவன்தல பகுதியில் நேற்று முன்தினம் (13.09.2023) இரவு 7.30 மணியளவில் பாரிய மரமொன்று சரிந்து பிரதான வீதியில் வீழ்ந்தமையால் அவ்வீதியினூடான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மரம் அவ்வீதி ஊடாக பயணித்த முச்சக்கர வண்டியொன்றின் மீதும் மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீதும் முறிந்து விழுந்துள்ளது. இதில் முச்சக்கரவண்டியில் பயணித்த மூவரும், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



ஊவா மாகாண உல்லாசத் துறை அமைச்சு மற்றும் ஹல்துமுல்லை பிரதேசசபையின் ரூ.32 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட பெறகல, பிலக்வூட் கடைத்தொகுதி என்பன நேற்றுமுன்தினம் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. ஊவா மாகாண சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இக்கடைத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் நிஹால் குணரத்ன,மாகாண ஆணையாளர்.ஏ.எல்.எச்.திசாநாயக, ஹல்துமுல்ல பிரதேசசபை செயலாளர்.வை.எம்.யூ.பீ.யாபா,முன்னாள் சபைத் தவிசாளர்.ஏ.அசோக்குமார் ஆகியோரால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.
(படம் ஊவா சுழற்சி நிருபர்)

# சவாலான காலகட்டத்திலும் லேக்ஹவுஸ் வீழ்ச்சியுறவில்லை



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டின் சவால் மிகுந்த காலகட்டத்திலும் வீழ்ச்சியடையாத நிறுவனமாக லேக்ஹவுஸ் நிறுவனம் செயற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சி தருவதாக, ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 25 வருட சேவை நிறைவை நினைவுகூரும் ஊழியர்களுக்கு தங் கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

தனியார் நிறுவனமாக செயற்பட்டபோதும், அரசுடைமையாக்கப்பட்ட பின்னும் லேக்ஹவுஸ் நிறுவனமானது சிறப்பாக இயங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது.

நாடு பெரும் வீழ்ச்சியடைந்து, அரச நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்தபோதும் லேக்ஹவுஸ் நிறுவனம் சிறந்த நிலைமையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். சவாலான காலகட்டத்தில் இந்த நிறுவனத்தை பொறுப்புடன் திறம்பட முன்னெடுத்துச் சென்ற முன்னாள் நிறுவனத் தலைவர் அனுஷ பெல்பிட்ட, ஜயந்த நவரத்ன, தற்போதைய தலைவர் ஹரேந்திர காரியவசம் உள்ளிட்டவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

நாட்டின் நெருக்கடியான மற்றும் சவாலான காலத்தில் சவால்களை

06

# ஒரு வருடத்தில் மட்டும் 60 விமானிகள் இராஜினாமா

## விரைவில் வெளிநாட்டு விமானிகள் சேவைக்கு



ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானிகள் அறுபது பேர்,கடந்த ஒருவருட காலப் பகுதியில் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.இதனால், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் புதிதாக விமானிகளை பணிக்கு அமர்த்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவைப்படின், வெளிநாட்டு விமானிகளை பணிக்கு அமர்த்துவதற்கான அனுமதியையும் அரசாங்கத்திடமிருந்து ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் பெற்றுள்ளது.

இதனை ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிச்சர்ட் நட்டால் உறுதி செய்துள்ளார்.

ஏற்கனவே, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நட்டத்தில் இயங்கியது. இலங்கை கடந்த வருடம் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. இதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானிகள் பலர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

நாட்டின் அந்நியச் செலவாணி நெருக்கடியும் உயர் வரிகளை

06

## யாழ். ஆஸ்பத்திரியில் துண்டிக்கப்பட்ட

# சிறுமியின் கை, ஆய்வுகளுக்காக கொழும்புக்கு அனுப்ப உத்தரவு

**யாழ். விசேட நிருபர்**



யாழ். போதனா வைத்தியசாலையில் துண்டிக்கப்பட்ட சிறுமியின் கையை, மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமியின் கையில், தாதி ஒருவரால் பொருத்தப்பட்ட "கானுலா" உரிய முறையில் பொருத்தப்படாததால் சிறுமியின் இடது கை, மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம், மத்திய சுகாதார அமைச்சு என்பன விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.சிறுமியின் பெற்றோரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, பொலிஸார்

06

# போதகர் ஜெரோமின் வங்கி கணக்கில் 1,226 கோடி ரூபா

## நீதிமன்றத்தில் உறுதியானது



பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் கணக்கில் 1,226 கோடி ரூபா வைப்பிலிடப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜெரோமுக்கு சொந்தமான கட்டுநாயக்கவில் அமைந்துள்ள Miracle Drome நிறுவனத்தில் பொருத்தப்பட்டுள்ள 267 சிசிடிவி கமராக்கள் தொடர்பிலான காட்சிகளை தனியார் தொடர்பாடல் நிறுவனம் ஒன்றிடம் கோரியுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நேற்று முன்தினம் நீதிமன்றத்துக்கு அறிவித்தது. இது தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை

06


# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

**விலை கூறல் இல. : P/PROC/2023/208**

**அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 300,000 MasterCard இரட்டை இடைமுக (Dual Interface) கொடுப்பனவு அட்டைகளை வழங்குதல்**

1. அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 300,000 Mastercard இரட்டை இடைமுக (Dual Interface) கடன் கொடுப்பனவு அட்டைகளை இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கென ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களைக் கீழ்க் காணும் நிபந்தனைகளுக்கு இணங்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**தகுதி அளவுகோல்கள்**

**முதன்மை / உண்மை உபகரண உற்பத்தியாளர் (OEM)**

i. விலை கூறுபவர் 2023.08.31தினத்தன்று முடியும் கடந்த இரண்டு வருடங்களினுள் ஏதேனுமொரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வங்கிக்குக் குறைந்தபட்சம் 300,000 இரட்டை இடைமுக MasterCard அட்டைகளை ஒற்றை ஒப்பந்தத்தில் விநியோகித்திருக்க வேண்டும்.

ii. உற்பத்தியாளர், வழங்கப்பட்ட உற்பத்திகள் (சிப் வன்பொருள் மற்றும் இயக்கு தளம் OS) எந்தவொரு சர்வதேச புலமைசார் சொத்துக்களினதும் (Intellectual Property) விதிகளை மீறவில்லை எனும் சத்தியக் கடதாசி ஒன்றை வழங்க வேண்டும்.

**ஏலவிலை கூறுபவர்**

i. ஏலவிலை கூறுபவர் உண்மையான உபகரண உற்பத்தியாளராக (OEM) அல்லது உற்பத்திப் பொருளின் உரிமையாளராக அல்லது அவர்களின் அதிகாரம் அளிக்கப்பட முகவராகக் காணப்பட வேண்டும்.

ii. ஏலவிலை கூறுபவர் உண்மையான உபகரண உற்பத்தியாளரல்லாதவிடத்து, ஏலவிலை கூறுபவர் குறைந்தபட்சம் ஒரு ஆண்டாவது EMV அட்டைகள் தொடர்பில் உற்பத்தியாளரின் அனுமதி பெற்ற முகவராக இருந்திருக்க வேண்டும். (முகவராகச் செயற்பட உற்பத்தியாளரிடமிருந்து பெற்ற அனுமதிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

iii. ஏலவிலை கூற ஆர்வமுடையவரின் அல்லது அவரது நிறுவனத்தின் வருடாந்தப் பணப் புரள்வு கடந்த மூன்று தொடர் நிதி ஆண்டுகளில் [(2019/20, 2020/21, மற்றும் 2021/22) அல்லது (2020, 2021 மற்றும் 2022)] ஆகக் குறைந்தது ரூ.225 மில்லியனாகக் (அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயமாக) காணப்பட வேண்டியதுடன் நிறுவனமானது தேறிய மதிப்புடைய இலாபமீட்டும் நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

iv. ஏலவிலை கூறுபவர் தவறான ஒப்பந்தக்காரராக இலங்கை அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் ஒரு அரசாங்க நிறுவனத்தின் அல்லது இலங்கை வங்கியின் பட்டியலில் காணப்படாதவராக இருக்க வேண்டும்.

v. ஏலவிலை கூறுபவர் இலங்கைக்குள் வங்கியின் வர்த்தகக் களம் தொடர்பில் நலன்சார் முரண்பாடுடையவராக இருத்தலாகாது.

(ஏலவிலை கூறுபவர் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிபந்தனைக்குமான உரிய ஆதார ஆவணங்களை ஏலவிலை கூறல்களுடன் இணைக்க வேண்டும்.)

2. ஏலவிலை கூறலுக்கான ஆவணங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு, 14ஆம் மாடி, தலைமை அலுவலகம், இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியிலுள்ள பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1500 மணி வரை 2023.10.05ஆம் திகதி வரை இலவசமாகப் பார்வையிடமுடியும்.

3. ஏலவிலை கூற ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலை கூறல் ஆவணத் தொகுதியை திருப்பிச்செலுத்தாக் கட்டணம் ரூபா.20,000/- (வரி உள்ளடங்கலாக) (கட்டணம் செலுத்தும் முறை-பணம்) அல்லது USD.64/- (கட்டணம் செலுத்தும் முறை-SWIFT) செலுத்தி மேற்குறித்த அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம்.

Swift code : BCEYLKLX
கணக்கின் பெயர் மற்றும் இலக்கம் : Properties Dept. Non-Refundable Tender Deposit, 52401015

**குறிப்பு :**

i. SWIFT கட்டணம் மற்றும் அனைத்து வங்கித் தொடர்புக் கட்டணங்களும் ஏலவிலை கூறுபவரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். வங்கியானது மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக USD 64 என்ற தேறிய தொகையைப் பெற வேண்டும்.

ii. SWIFT செய்தியின் விபரத்தில் "Non-Refundable Tender Deposit fee-P/PROC/2023/208" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை (இலங்கை வங்கி தவிர்ந்த வேறொரு) அனுமதி பெற்றவர்த்தக வங்கியிடமிருந்து பெற்ற 2024.02.02ஆம் திகதி வரை செல்லுபடியாகும் 1.92 மில்லியன் ரூபாய் அல்லது USD 6060 பெறுமதிக்குப் பெற்றுக்கொண்ட வங்கி உத்தரவாதம் / விலை கூறல் பிணையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். ஐக்கிய அமெரிக்க டொலரிலான விலைகூறல் பிணைமுறியெனின் அது இலங்கை வங்கியின் முகவர் வங்கி ஒன்றிடமிருந்து பெறப்பட்டு இலங்கையில் உள்ள அனுமதி பெற்றவர்த்தக வணிக வங்கி ஒன்றினால் ஒப்பமிடப்பட்டதாக இருத்தல் வேண்டும். விலைகூறல் பிணை முறிக்குப் பதிலாக பண வைப்புகள் / கொடுப்பனவுக் கட்டளைகள் / வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் ஏலவிலை கூறுபவரால் வரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

| | | |
|---|---|---|
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும் | : | 2023.10.05 1500 மணி வரை |
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம் | : | 0900 மணி முதல் 1500 மணி |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் | : | 2023.09.26ஆம் திகதி 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகத்தின் 14ஆம் தளத்தில் |
| ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | : | 2023.10.06 1000 மணி |
| ஏலவிலை கூறல்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் | : | ஏலவிலை கூறல்கள் மூடப்பட்டவுடன் திறக்கப்படும் |

இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமை அலுவலகம்
இலங்கை வங்கிச் சதுக்கம்
இல. 01. இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.
தொலைபேசி : 0112 204260, 0112 544310
தொலைநகல் : 011 2449629
மின் அஞ்சல் : procofficer1@boc.lk

1975 BOC
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
## பந்தயம் மற்றும் சூதாட்டம் நடாத்துபவர்களுக்கான அறிவித்தல்

**2023 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்டச் சட்டத்திற்கான திருத்தங்கள்**

2023 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்டசட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம், இலங்கை பந்தயம் மற்றும் சூதாட்ட வியாபாரத்திற்கு கீழ்வரும் மாற்றங்கள் 2023, ஏப்ரில் 01 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1. பதிவு**

**(அ) சீட்டாட்டத் தொழிலை முன்னெடுக்கும் ஆட்கள்**

- 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமத்தினை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராகும் சீட்டாட்டத் தொழிலை முன்னெடுக்கும் ஒவ்வொரு ஆளும் "அவ் உரிமம் வழங்கப்பட்டு ஒரு மாத காலத்தினுள்" உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் (இதனகத்துப் பின்னர் "உ.இ.தி." என குறிப்பீடு செய்யப்படும்) பதிவு செய்துகொள்ள தேவைப்படுத்தப்படுகின்றனர்.
- அத்தகைய உரிமத்தினை பெற்றுக்கொண்டு உ.இ.தி. உடன் பதிவு செய்துகொள்ளாத ஆள் எவரேனும், 2023, ஆகஸ்ட் 21 ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்துனுள் (2023, செப்தம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர்) உ.இ.தி. உடன் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழிலை முன்னெடுக்கும் ஆட்கள்

- குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழிலை முன்னெடுக்கும் ஒவ்வொரு ஆளும் அத் தொழிலை ஆரம்பித்து ஒரு மாத காலத்தினுள் உ.இ.தி. உடன் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.
- 2023, ஆகஸ்ட் 21 ஆம் திகதிக்கு முன்னர் குதிரைப் பந்தய பணயக்காரர் தொழிலை ஆரம்பித்த எவரேனும் நபர் 2023, ஆகஸ்ட் 21 ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்துனுள் (2023, செப்தம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர்) உ.இ.தி. உடன் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

**2. குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழில் மற்றும் சீட்டாட்டத் தொழில் மீதான விதிப்பனவின் மொத்த சேகரிப்பு**

குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழில் மற்றும் சீட்டாட்டத் தொழிலின் மொத்த சேகரிப்பு மாதமொன்றுக்கு ரூபா 1 மில்லியனை விஞ்சும் மொத்த சேகரிப்பில், 2023, ஏப்பிரல் 1 ஆரம்பிக்கும் ஆண்டிலிருந்து எந்தவொரு ஆண்டுக்கும் வரி வீதமானது பதினைந்து சத வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**3. சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டினை அகற்றுதல் (SSCL)**

மொத்த சேகரிப்பு விதிப்பனவினை செலுத்த பொறுப்புடைய எவரேனும் ஆள், 2023, ஆகஸ்ட 21 ஆம் திகதி முதல் சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டினை செலுத்த பொறுப்புடைவராகமாட்டார்.

**4. சீட்டாட்டத் தொழில் நுழைவு அறவீடு**

2023, ஏப்பிரல் 01 செயல்வலுப்பெறும் வகையில்

- இலங்கையில் சூதாட்ட தொழிலை முன்னெடுக்கும் ஒவ்வொரு ஆளும், வியாபார நிலையத்திற்குள் பிரவேசிக்கும் இலங்கை பிரசையிடமிருந்து ஐம்பது அமெரிக்க டொலர் அல்லது வேறு ஏதேனும் மாற்றீடு செய்யப்படக்கூடிய வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை நாணயத்தில் அதற்கு சமமான தொகையினை நேரடியாகவோ அல்லது இணையதளத்தினூடாகவோ சூதாட்ட நுழைவு அறவீடாக அறவிடுதல் வேண்டும்.
- இலங்கை பிரசையல்லாதோருக்கு சூதாட்ட நுழைவு அறவீடு ஏற்புடையதன்று

**5. சூதாட்ட தொழில் மீதான வருடாந்த விதிப்பனவு**

2023, ஏப்பிரல் 01 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் ருஹினோ அடங்கலாக சூதாட்ட தொழிலை முன்னெடுக்கும் ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு தொகையானது ரூபா ஐநூறு மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**6. குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழில் மீதான வருடாந்த விதிப்பனவு**

2023, ஏப்பிரல் 01 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழிலை முன்னெடுக்கும் ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு தொகையானது கீழே குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்பட்டுள்ளது.

அ) நேரடி அலைபரப்பு வசதிகளுடன் அல்லது அவ் வசதி இல்லாது, முகவர் ஒருவரினூடாக அல்லது இணையத்தினூடாக தொழிலை நடாத்தும் குதிரைப் பந்தய பணயக்காரரினால் செலுத்தப்படற்பாலதான வருடாந்த விதிப்பனவானது ரூபா ஐந்து மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது

ஆ) நேரடி அலைபரப்பு வசதிகளை பயன்படுத்தி தொழிலை முன்னெடுக்கும் குதிரைப் பந்தய பணயக்காரரினால் செலுத்தப்படற்பாலதான வருடாந்த விதிப்பனவானது ரூபா ஒரு மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது

இ) நேரடி அலைபரப்பு வசதிகள் இல்லாது தொழிலை முன்னெடுக்கும் குதிரைப் பந்தய பணயக்காரரினால் செலுத்தப்படற்பாலதான வருடாந்த விதிப்பனவானது ரூபா எழுபத்தையாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது

**07. "குதிரைப் பந்தய பணயக்காரரின்" வரைவிலக்கனத்தில் மாற்றம்**

குதிரைப் பந்தய பணயக்காரரின் வரைவிலக்கனம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. "குதிரைப்பந்தய பணயக்காரர்" என்பவர்

(அ) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ
(ஆ) பணமாகவோ அல்லது பற்றாகவோ அல்லது
(இ) இணையவழியாக

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே நடந்து கொண்டிருக்கும் அல்லது நடக்கவிருக்கும் குதிரைப் பந்தயங்களுக்கு பந்தயங்களை பெற்றுக்கொள்ளுபவர் அல்லது பேசிமுடிப்பவர் என பொருள்படும்.

பந்தயம் மற்றும் சூதாட்ட தொழிலை முன்னெடுப்போர், 2023, செப்தம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் மேலே குறிப்பிட்டுள்ளவாறு பதிவுசெய்துகொள்ள தேவைப்படுத்தப்படுத்தப்படுகின்றனர். விண்ணப்பமானது உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். பதிவிற்கு சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பிலான விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முத்திரைத் தீர்வை மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்ட அலகில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளப்படலாம். (www.ird.gov.lk)

**தெளிவுபடுத்தல்களுக்கு,**

பிரதி ஆணையாளர் நாயகம் (வரி மூலம்) – 011-2135300
சிரேஷ்ட ஆணையாளர் பந்தயம் மற்றும் சூதாட்டம்) – 011-2134960

ஆணையாளர் (முத்திரைத் தீர்வை, பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு,
மூலதன ஈட்டுகை வரி) - 011-2135171
வரிகள் – வளமான எதிர்காலத்திற்கு
செயலகம்: 011-2135402 / 011-2135410 / 011-2135413 / 011-2135412 / 011-2135430

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
www.ird.gov.lk https://www.facebook.com/irdcolsl

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 29

### குறள் தரும் சிந்தனை



எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

*யாராயிருந்தாலும் அவர்களிடத்தில் எளிமையாகப் பழகினால், அதுவே பண்புடைமை என்கிற சிறந்த ஒழுக்கத்தைப் பெறுவதற்கு எளிதான வழியாக அமையும்.*

# போலி பொலிஸார் நடமாட்டம்; விழிப்புடன் இருக்க கோரிக்கை!

'நாட்டில் போலி பொலிஸாரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்' என வேண்டுகோள் விடுத்துள்ள பொலிஸ் தலைமையகம், 'தமது உத்தியோகபூர்வ அடையாளத்தை உறுதிப்படுத்தாத வரைக்கும் அவர்கள் சோதனைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டாம்' எனவும் கேட்டுள்ளது.

நேற்று வெளியான இந்த அறிவுறுத்தலுக்கு பல தேசிய ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளன. உண்மையில் மக்கள் அறிவூட்டப்பட வேண்டிய விடயம் இது. ஏற்கனவே பதிவாகியுள்ள சில சம்பவங்களின் அடிப்படையில்தான் இந்த அறிவுறுத்தலை பொலிஸ் தலைமையகம் விடுத்திருக்கின்றது. இந்த அறிவுறுத்தலை மக்களும் வரவேற்றுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் என தம்மை தெரிவித்துக் கொள்ளும் சிலர் வீடுகளிலும் நிறுவனங்களிலும் பாரிய மோசடிகளை மேற்கொண்டிருப்பதும் ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. இது தொடர்பிலான முறைப்பாடுகளும் பொலிஸ் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டுதான் பொலிஸ் திணைக்களம் இந்த அறிவுத்தலை விடுத்திருக்கின்றது. அதனால் இது கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக்கூடிய அறிவுறுத்தல் அல்ல.

மோசடி மற்றும் ஏமாற்றுச் செயல்களில் ஈடுபடுவதற்காக சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள், அதற்காகத் தமக்கு சாதகமான அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்தவே செய்வர். அந்த வழிமுறைகளை அவர்கள் தவிர்த்துக் கொள்ளவே மாட்டார்கள். இதற்கு பல உதாரணங்கள் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளன. அதனால் பொலிஸ் உத்தியோகத்தர் எனக் கூறிக்கொள்பவர் என்றாலும் தமது உத்தியோகபூர்வ அடையாளத்தை முதலில் உறுதிப்படுத்தும் வரைக்கும் சோதனைகளை மேற்கொள்ளவோ வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ இடமளிக்கக் கூடாது. அவ்வாறான நபரிடம் தமது உத்தியோகபூர்வ அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு முதலில் கோர வேண்டும். அதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் பெரும்பாலும் தமது உத்தியோகபூர்வ உடையுடன்தான் கடமையில் ஈடுபடுவர். சிலர் சிவில் உடையில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆன போதிலும் இவர்களுக்கு உத்தியோகபூர்வ அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதனால் வீட்டையோ, நிறுவனத்தையோ, வாகனத்தையோ சோதனை செய்ய வேண்டுமென பொலிஸார் எனக்கூறிக் கொண்டு வருபவரிடம் தமது உத்தியோகபூர்வ அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கோருவது அவசியமானது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் நபர் சோதனைகளை மேற்கொள்ள இடமளிக்கலாகாது. அவர்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினருக்கு உடனடியாக தகவல் வழங்க வேண்டும். அதன் ஊடாக இவ்வாறான போலி பொலிஸாரை விரைவாகவும் வேகமாகவும் சட்டத்தின் முன் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

இதைவிடுத்து பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள இந்த அறிவுறுத்தலைக் கருத்தில் கொள்ளாது பொலிஸ் உத்தியோகத்தர் எனக் கூறிக் கொள்பவருக்கு ஒத்துழைப்புடன் செயற்படும் போது இழப்புகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுக்க நேரிடுவதைத் தவிர்க்க இயலாது. அவ்வாறான துரதிர்ஷ்ட நிலைக்கு முகம்கொடுப்பதற்கு எவரும் துணை போகக்கூடாது.

அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் போலி பொலிஸார் குறித்து ஒவ்வொருவரும் விழிப்புடன் செயற்பட வேண்டும். அதனைத் தவிர்த்துக் கொள்ளவே கூடாது.

அதேநேரம் போலி பொலிஸாரின் நடமாட்டம் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினரும் கூடுதல் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். பொலிஸ் உத்தியோகத்தர் என்ற போர்வையில் சட்டத்தைக் கையில் எடுக்க எவருக்கும் இடமளிக்கலாகாது. இவ்வாறான செயலில் ஈடுபடுபவர்களை விரைவாகக் கைது செய்து சட்டத்தின் முன் ஆஜர்படுத்த வேண்டும். அதற்காக மக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதன் ஊடாக போலி பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது துரிதமாகும். மக்களை ஏமாற்றி மோசடி செய்யும் இவ்வாறானவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நவடிக்கையானது, இவ்விதமான செயலில் வேறொருவர் ஈடு பட எண்ணிப் பார்க்காத நிலையை ஏற்படுத்த வேண்டும்.

எந்தவொரு சந்த ர்ப்பத்திலும் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் தரப்பினருக்கு அப்பால் வேறு எவரும் சட்டத்தைக் கையில் எடுக்க இடமளிக்கவே கூடாது. அதுவே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஆனந்தா முஸ்லிம் மாணவனிடமிருந்து சிந்திக்கக் கிடைத்த அனுபவப்பதிவுகள்

மகாத்மா அரசியல்வாதியாக பிரபலம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பத்திரிகையில் பத்தி எழுத்தாக எழுதிய கட்டுரைகள் சித்தமு( சிந்திப்போம்) என்னும் பெயரில் நூலாக வெளி வந்துள்ளன.

இலங்கை பாராளுமன்றத்தின் உரைகளின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் விரல்களை நீட்டி ஊழல் குற்றச்சாட்டுகளை தெரிவிக்கின்றார்கள். சிலருக்கு எதிராக போலி பிரசாரங்கள் மற்றும் குற்ற நடவடிக்கைகள் தொடர்பாக மோசமான குற்றச்சாட்டுகள் உள்ளன.





நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என குற்றம்சாட்டப்பட்டவர்கள் தொகுதிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளில் ஏதேனும் உண்மை காணப்பட்டால் அது விடயத்தில் தாய்நாட்டை நேசிப்பவர்கள் கடும் அவதானம் செலுத்துவர்.

இத்தகைய பாத்திரங்களுக்கிடையே தனது ஞானத்தைப் பயன்படுத்தி, மோசமான பிரச்சினைகள் குறித்து சிந்தித்து, அவற்றைத் தெளிவுபடுத்தி தீர்வுகளை வழங்க காலத்தை அர்ப்பணித்த ஒருவரை சந்தித்தமை புத்துணர்ச்சி அளிப்பதாகும். அவருடைய கருத்துகள் மற்றும் சார்புநிலை ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவற்றில் காணப்பட்ட நேர்மை மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்ட வேண்டும்.

இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்கள் ஆனந்தா கல்லூரியில் என்னை விட பல வருடங்கள் குறைந்த கனிஷ்ட பிரிவு மாணவராக இருந்தார். அவரது முகத்தில் காணப்படும் புன்சிரிப்பு, அனைவரையும் கவரும் பேச்சாற்றல் மற்றும் ஆக்கபூர்வமான கட்டுரைகள் எனக்கு ஞாபகத்தில் வருகின்றன.

அவர் பௌத்த மதத்தைப் பற்றி நல்ல புரிந்துணர்வுள்ள முஸ்லிம் மாணவர் என்பதுடன், சிங்கள மொழியில் பேச்சு, எழுத்து ஆகிய இரண்டிலும் பெரும் ஆற்றல் கொண்டவர்.

அவரின் அரசியல் பயணம் இலங்கைக்கே உரிய பாரம்பரியத்துக்குப் பொருத்தமானதல்ல. நான் அறிந்த வரையில் அவருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டும் இல்லை. பகிரங்கப்படுத்த வேண்டிய மறைவான செல்வம் அவரிடம் இல்லை. உறவினர்களுக்காக தனது அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்பது தொடர்பான குற்றச்சாட்டுகளும் இல்லை

அதற்குப் பதிலாக உன்னத மனிதரின் பெறுமதி வாய்ந்த கருத்துக்கள் 'சித்தமு' நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனை உலகில் உள்ள அனைத்து தேசப்பற்றாளர்களும், விசேடமாக தீய வன்னாவாசிகளும் வாசிக்க வேண்டுமென்று நான் பரிந்துரை செய்கின்றேன்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் அனைத்து விடயங்களிலும் எமது நாடு தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டமையை தெளிவுபடுத்துவது இலகுவானதல்ல. அதிக பேராசை, ஊழல் மற்றும் சட்டம், சமாதானத்தை அகௌரவப்படுத்தியமை போன்றன அதற்குக் காரணமான சில விடயங்கள் மாத்திரமேயாகும்.

ஆனால் சர்வதேச ரீதியாக நாம் முழங்காலிட்டுள்ளோம். இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், இந்தக் குகை முடிவுறுவதற்கான எதுவித ஒளியும் கண்ணுக்குத் தென்படவில்லை.

இலங்கை தன்னுடைய இருப்பை உறுதிசெய்து கொள்ள வேண்டுமென்றால் இந்த விடயங்களை முன்னெடுத்து விவாதங்களை மேற்கொள்ளும் ஆற்றல் மிக்கோர் அவசியம். இவ்வாறானவர்களை ஊக்குவிப்பதற்காக தனது நேரத்தை அர்ப்பணிப்பு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களின் கருத்தை காது கொடுத்து கேட்க வேண்டியது முக்கியமாகும்.

இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் அவ்வாறான ஒருவராவார். அரசியல் பேதத்துக்கு அப்பால் சிந்தித்துள்ள அவருடைய கருத்து 'சித்தமு' நூலில் மிகத்தெளிவாகத் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

**ஏ.எம்.மைத்திரி பனாகொட...**
*இணைந்த பேராசிரியர், நோற்றிடேம் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா* (தமிழில்: வீ.ஆர்.வயலட்)

# மலேசியாவில் வள்ளலார் 200 ஆவது ஆண்டு முதலாவது உலக மாநாடு

மலேசியாவில் கோலாலம்பூர் மலாயா பல்கலைக்கழக மண்டபத்தில் மலேசியா அருட்பேரொளி சமூகநல சமரசப் பேரவையின் சார்பாக 200 ஆவது ஆண்டு திருஅருட்பிரகாச வள்ளலார் நாளை முன்னிட்டு முதலாவது உலக அருட்பேரொளி அருட்பெருஞ் ஜோதி பக்தி நெறி மாநாடு 09/09/10 சனிக்கிழமை மற்றும் 10/09/2023 ஞாயிற்றுக்கிழமை இரண்டு நாட்கள் மலேசியா இந்து பாபாஜி தலைமையில் நடைபெற்றது.





சுவாமி பத்மேந்திரா கலந்து கொண்டு ஆசி உரை

மேற்படி வள்ளலார் உலக மாநாட்டில் அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரம் மற்றும் பிரார்த்தனையை மலேசியா டொக்டர் செல்வமாதரசி நடத்தினார். அருட்பெரும்ஜோதி பக்திநெறி மாநாட்டினை மலேசியா முன்னாள் துணை முதல்வர் டொக்டர். பி. ராமசாமி மற்றும் மலேசி யா இந்து சங்கத் தலைவர் சிவநெறி ச்செல்வர் ஸ்ரீ காசி சங்கப்பூஷன் தங்க கணேசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

தமிழ்நாடு வள்ளலார் பேரவை மாநிலத் தலைவர் சுவாமி பத்மேந்திரா மற்றும் இமயஜோதி ஞானானந்தா சுவாமிகள், சிங்கப்பூர் குருகடாக்சம் நடராஜா ஆனந்த பாபா ஆகியோர் கலந்து கொண்டு அருளாசியுரை வழங்கினார்கள்.



மாநாட்டுக்கான சிறப்பு அழைப்பாளராக வருகை தந்த சிங்கப்பூர் சிங்கைராஜா பாபா, பெரம்பலூர் பிரம்மரிஷிமலை தர்மச்சாலை மகா சித்தர்கள், அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ரோகிணி மாத்தாஜி இராஜகுமார், தவயோகி இரா. தவசிநாதன் சுவாமிகள் மற்றும் வடலூர் கருங்குழி வில்லிசை வேந்தர் மு.கிஷோர் குமார் ஆகியோர் மலேசியா பரதநாட்டியக் கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

திருவருட்பா இசைஞானி மழையூர் சதாசிவம், தமிழ்நாடு திரைப்படப் பாடகர் பிரபாகர், கியோரின் திருவருட்பா இன்னிசை நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் வள்ளலார் 200 சிறப்பு விழாக்குழு உறுப்பினர்கள் வள்ளலார் வழித்தோன்றல் கி. உமாபதி, மெய் அருள்நந்தி சிவம் மற்றும் திருக்கோவிலூர் வழக்கறிஞர் ஜீவ. சீனிவாசன் ஆகியோர் அறிமுக உரையாற்றினார்கள். சிறப்புச் சொற்பொழிவாளர் ஈரோடு கதிர்வேல், சேலம் குப்புசாமி, திருவண்ணாமலை ஜானகிராமன் மற்றும் விருத்தாச்சலம் க. முத்துக்குமரன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். மேலும் இவ்விழாவில் தமிழ்நாடு, உலக நாடுகள் சுத்த சன்மார்க்க சாதுக்கள், சான்றோர், கலைஞர்களும் கலந்து கொண்டார்கள்.

வள்ளலார் உலக மாநாட்டினை மலேசியா இந்து பாபாஜி தலைமையில் கி.திருமலை நாயக்கன், வனிதா திருமலை நாயக்கன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தார்கள். விழா நிகழ்ச்சிகளை மலேசியா விக்னேஸ்வரி தொகுத்து வழங்கினார்.

# அரசியலில் மாபெரும் ஆளுமையாக விளங்கியவர் எம்.எச்.எம். அஷ்ரப்

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலின் தோன்றாமை நன்று' என்பதற்கொப்ப வாழ்ந்து மறைந்த அரிதானவர்களில் ஒருவரே எம்.எச்.எம்.அஷ்ரஃப் ஆவார்.

கல்முனைக்குடி மீராலெப்பைப் போடியார் முகம்மது ஹுசைன், சம்மாந்துறையை உமர்லெப்பை மதீனா உம்மா தம்பதிகளின் புதல்வராக 1948 ஒக்டோபர் 23இல் சம்மாந்துறையில் அவர் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கல்முனைக்குடி ஆண்கள் பாடசாலையில் தொடர்ந்தார். புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீனின் அவர்களால் பேச்சாற்றல்மிக்க ஒரு மாணவராக இனங்காணப்பட்டார்.

6 ஆம் தரத்தினை கல்முனை பற்றிமா கல்லூரியில் தொடர்ந்தார். அக்கல்லூரியில் ஆசிரியப்பணி செய்த கிறிஸ்தவப் பாதிரியான டானியல் அவர்களால் குருளைச்சாரணர் தெரிவு இடம்பெற்ற போது அதில் அஷ்ரஃபும் உள்வாங்கப்பட்டார். 1961இல் 7ஆம் வகுப்பு மாணவனாக கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் இணைந்து கொண்டார். தமது தலைமைத்துவப் பண்பினாலும், பேச்சாற்றலினாலும் சாரணிய இயக்கம், ஆங்கில இலக்கிய மன்றம், முதலுதவிப்படை, தமிழ்மன்றம், நாடக மன்றம், விஞ்ஞான மன்றம், மாதிரிப் பாராளுமன்றப் பிரதமர் எனப் பல தலைமைத்துவப் பதவிகளை வகித்தார்.

அவர் 1966 வரை 15 இற்கு மேற்பட்ட குழந்தைக் கவிதைகளை எழுதினார். ஆங்கிலத்தில் இளம் வயதிலிருந்தே நாட்டம் கொண்ட அஷ்ரஃப் 1968 இல் வெளியான மாணவ ஆங்கிலப் பத்திரிகையில் கவிதை எழுதினார். கொழும்பு அலொக்சான்றா கல்லூரியில் இணைந்து உயர்கல்வியைத் தொடர்ந்தார்.

இதன் பின்னர் 1969 ஆம் ஆண்டு சட்டக்கல்லூரி அனுமதி பெற்றார். அங்கு 1973 இல் நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தி அரசியலமைப் புச் சட்டத்தில் விஷேட சித்தி பெற்றதுடன் 1974 பெப்ரவரி 05ஆம் திகதி சட்டத்தரணியாக வெளியேறினார். 1972 இல் 'அரசியல் யாப்புச் சட்டங்கள்' என்ற நூலை வெளியிட்டார். இந்நூலே இலங்கையில் எழுதப்பட்ட சட்டத்துறை தொடர்பான முதலாவது தமிழ் நூலாகும்.

1970 களில் வலம் வந்த தென்கிழக்கு சிறுகதையாளர் வரிசையில் அஷ்ரஃபும் அமர்ந்தார். தினகரன் வாரமஞ்சரியில் எழுதிய 'நீதிக்காகப் பேராடுகிறான் ஒரு சட்டத்தரணி' (1975.09.07), 'உன் உயிருடன் உரையாடுகிறேன்'(1976 மார்ச்) ஆகியன அவது கதைகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியன. கட்டுரையாளராகவும் அவர் திகழ்ந்தார். 1975 ஆம் ஆண்டு ரமழான் மாதம் முழுவதுமாக தினகரன் வாரமஞ்சரியில் 'புத்தம் புது மலர்கள்' தொடர் கட்டுரையினை எழுதியதன் மூலம் அதிகம் கவனயீர்ப்பினைப் பெற்றார்.



23ஆம் வருட நினைவுதினம் நாளை

ஒரு வருட காலத்தின் பின் அரச சட்டத்தரணியானார். 1975 இல் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச வழக்குத்தொடுனராகப் பணியாற்றி சிவில், கிரிமினல் வழக்குகளில் ஆஜரானார். 1975ஆம் ஆண்டுகளின் பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். 1977 ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி கம்பளையைச் சேர்ந்த பேரியல் இஸ்மாயிலைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு அமான் என்ற ஒரு ஆண்மகன் உள்ளார்.

1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து பணியாற்றினார். பின்னர் முஸ்லிம் ஐக்கிய முன்னணியை ஆரம்பித்து, 1981 இல் முஸ்லிம் காங்கிரஸை தோற்றுவித்தார். முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளுடன் சமூக அபிவிருத்தி நோக்கையும் கருத்திற் கொண்டு சந்திரிக்காவுடன் 1994ஜுலை 1ஆம் திகதி 'சந்திரிக்கா அஷ்ரஃப்' என்ற வரலாற்று ஒப்பந்தம் செய்தார். 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கினார். அமைச்சராகவிருந்து பெரும்பணியாற்றினார்.

தினகரன் உள்ளிட்ட தேசியப் பத்திரிகைகள் பலவற்றிலும் எழுதினார். 1960களில் கவிதைகளை எழுத ஆரம்பித்த அஷ்ரஃப் கவியரங்குக் கவிதைகளையும் சிறப்பாகச் செய்தார். மிஸ்ரியா, நபீஸா, கல்முனை பாத்திமா ஆகிய புனைபெயர்களில் எழுதினார். 1997 இல் அட்டாளைச்சேனையில் நடந்த தேசிய மீலாத் விழாவின் போது கவிக்கோ அப்துல் றகுமானால் 'கவிஞர் திலகம்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அஷ்ரஃப் தமது கவிதைகளில் சிலவற்றிற்கு இசைவடிவம் கொடுத்து முஸ்லிம் காங்கிரஸின் கட்சிக்கீதம் உட்பட ஒரு இசைப்பாடல் பேழை ஒன்றை 1996ம் ஆண்டு வெளியிட்டார். 1996ஆம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக வழிவகுத்தார். அவரது கலை, இலக்கிய, அரசியல், சமூக சேவைகளைக் கௌரவித்து தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப்பட்டம் வழங்கியது.

அஷ்ரஃப் தான் எழுதிய கவிதைகளைத் தொகுத்து 'நான் எனும் நீ' என்ற பெயருடன் 1999 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இவ்வாறு பல்துறை ஆளுமையாளராக விளங்கிய எம்.எச்.எம்.அஷ்ரஃப் அரநாயக்காவில் நடந்த விமான விபத்தில் 16.09.2000 அன்று அகால மரணமானார். அவர் மறைந்தாலும் அரசியலில் அவரது ஆளுமை இன்றும் போற்றப்படுகின்றது.

**ஜெஸ்மி எம். மூஸா...**
*(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)*

# மக்கள் பணியில் 8 வருடத்தை நிறைவு செய்துள்ள நிந்தவூர் மத்தியஸ்த சபை

இலங்கையிலுள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மத்தியஸ்த சபைகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. நீதி அமைச்சின் கீழான மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவானது பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்த சபைகளை ஸ்தாபித்துள்ளது. அவை மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வருகின்றன.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் 329 மத்தியஸ்த சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டு வருகின்றன. மத்தியஸ்தம் என்பது பிணக்கொன்றுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களை கலந்துரையாடி இணக்கமொன்றுக்கு வழிகாட்டும் அமைப்பாகும். இந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசசபைப் பிரிவில் இயங்கிவரும் நான்காவது மத்தியஸ்த சபை தமது எட்டு வருட பதவிக்காலத்தை இன்று சிறப்புடன் நிறைவு செய்துள்ளது. ஓய்வு பெற்ற கணித ஆசிரியையான பல்கீஸ் அப்துல் மஜீத்தை தவிசாளராகவும் ஓய்வுநிலை அதிபர் யூ.எல்.ஏ.முபாரக்கை உப தவிசாளராகவும் கொண்டு 27 மத்தியஸ்த குழு உறுப்பினர்களுடன் 15.09.2015 அன்று இந்த நான்காவது மத்தியஸ்த சபை ஸ்தாபிக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது.

இதனையடுத்து சுமார் 8 மாதங்களின் பின்னர் மேலும் 4 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு 31 பேர் கொண்ட மத்தியஸ்த குழு உறுப்பினர்களுடன் சேவை தொடர்ந்தது. தற்சமயம் 27 குழாம் உறுப்பினர்களுடன் சேவை தொடர்ந்து வருகின்றது.



தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத்

இதில் மத்தியஸ்த்தர்களாக 22ஆண்களும், 05 பெண்களும் அடங்குகின்றனர். தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத் அவர்களது தலைமைத்துவ ஆளுமை, நிருவாகத்திறன் காரணமாக மிகுந்த ஒற்றுமையுடனும் கூட்டுப் பொறுப்புடனும் வெற்றிகரமான மக்கள் சேவையை முன்னெடுத்து வருகின்றது. இச்சபையின் சிறந்த செயற்பாட்டுக்கு ஆலோசனைகளையும் ஊக்குவிப்பையும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் மத்தியஸ்த பயிற்றுநர் எம்.ஐ.எம். ஆஸாத் வழங்கி வருகின்றார்.



சபைக்கென நியமனம் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பாத்திமா சாமிலாவும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்.

இச்சபையின் தவிசாளராக பெண் ஒருவர் பணியாற்றுவது மட்டுமன்றி, மேலும் 5 பெண் உறுப்பினர்களும் உள்ளனர். இந்து ஆலயத்தலைவர் ஒருவரும் பணியாற்றினார். சிறப்புடன் சேவையாற்றும் நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கென நிரந்தரக் கட்டடமொன்று இல்லாமை முக்கிய பிரச்சினையாக இருந்து வருகின்றது. இப்பிரச்சினைக்கு தீர்வு காண சம்பந்தப்பட்டோர் ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. சபை அமர்வுகளின்போது செயலாளராக இயங்கும் ஏ.எம்.எம்.மன்சூரின் பணிகளைப் பாராட்டுவதுடன், எட்டு வருட நிறைவு கண்ட நிந்தவூர் மத்தியஸ்த சபை தவிசாளர், உபதவிசாளர் மற்றும் மத்தியஸ்த குழு உறுப்பினர்களும் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

**செல்லையா பேரின்பராசா...**
*(துறைநீலாவணை நிருபர்)*

## பேருவளை சீனன் கோட்டை அல் ஸலாஹ் மகளிர் பிரிவு




# இரண்டாவது தொகுதியினருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

பேருவளை சீனன்கோட்டை அல் ஸலாஹ் அரபுக்கல்லூரி (ஹிஜ்ரி 1423 ரபீயுல் ஆகிர் பிறை 08) 10. 07. 2002 அன்று வாடகை வீடொன்றில் மத்ரஸதுஸ் ஸலாஹ் என்ற பெயருடன் 02 உஸ்தாத்மார்களும் 22 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு, இன்று அல்லாஹ்வின் கிருபையால் அதற்கென சொந்த காணியில் பல கட்டடங்களுடன் 6 பிரிவுகளுடனும் சுமார் 350 மாணவ மாணவிகளுடன் பயணித்துக் கொண்டிருக்கிறது... அல்ஹம்துலில்லாஹ்.

தற்போது எமது கல்லூரி ஹிப்ழ் பிரிவு 03 உஸ்தாத்மார்கள், 39 மாணவர்கள் ,ஷரீஆப் பிரிவு –10 உஸ்தாத்மார்கள், 47 மாணவர்கள், அரச பாடசாலைக் கல்விப் பிரிவு –1 பொறுப்பு உஸ்தாத், 9 ஆசிரியர்கள், பாடசாலை செல்லும் ஊர் மாணவர்களுக்கான பகுதி நேரப்பிரிவு –9 உஸ்தாத்மார்கள், 146 மாணவர்கள், பெண்கள் வாராந்த தர்பிய்யா வகுப்பு 5 முஅல்லிம்கள், 5 முஅல்லிமாக்கள், 70 மாணவிகள், பெண்கள் நாளாந்த பகுதி நேரப் பிரிவு – 01 முஅல்லிம், 03 முஅல்லிமாக்கள், 43 மாணவிகள் என்ற அமைப்பில் 6 பெரும் பிரிவுகளுடன் அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே உப நிர்வாகக் குழுக்களுடன் தாய் நிருவாகத்தின் கண்காணிப்புடன் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது.

இன்ஷா அல்லாஹ், எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை எமது கல்லூரியின் வாராந்த தர்பிய்யா பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 2வது தொகுதி பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழாவும், புதுத் தொகுதியினரை இணைத்துக் கொள்ளும் வைபவமும் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், அன்றைய தினம்,

- மூன்று மாணவர்கள் அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்து ஹாபிழாகுதல்.
- ஹிப்ழு பிரிவுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை மற்றும் விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தல்.
- எமது ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் புதிதாக அமைக்கப்பட்ட கிணறு மாணவர்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.



பிரதம பேச்சாளர் அஷ்ஷெய்க் முர்ஷித் முளப்பர் (ஹுமைதி)

மகிழ்ச்சிமிக்க இத்தருணத்தில் பெண்கள் மார்க்க அறிவைக் கற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் எமது பெண்களுக்கான வாராந்த தர்பிய்யா வகுப்பின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி தினகரன் பத்திரிகையினூடாக வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிக மகிழ்ச்சியடைகிறோம்.

தீனுடைய பெரும்பாலான காரியங்களில் ஆண்களும், பெண்களும் சமமானவர்களே. ஆண்களுக்கு அல்லாஹ் எதனை கட்டளையிடுகிறானோ அதனையே பெண்களுக்கும் கட்டளையிட்டிருக்கிறான். அல்லாஹ் அல்குர்ஆனில் 33:35 ஆம் வசனத்தில் அடிப்படையான பத்து தன்மைகளில் ஆண்களையும் பெண்களையும் சேர்த்துக் கூறியிருக்கிறான்.

அதே நேரத்தில், இஸ்லாத்தின் சட்டதிட்டங்களில் பெண்களுக்கென குறிப்பான சில கட்டளைகளும் இருக்கின்றன. அவற்றை ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் அறிந்திருப்பது அவசியமாகும். 'ஆண்களே நீங்கள் ஸூரா மாஇதாவை கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பெண்களுக்கு ஸூரத்துந்நூரை கற்றுக் கொடுங்கள்' என்று உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்.

இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் தனது ஸஹீஹ் கிரந்தத்தில்:

பெண்கள் அறிவு கற்பதற்காக தனியே ஒரு நாள் ஒதுக்கப்படவேண்டுமா?

என்று தலைப்பிட்டு ஒரு ஹதீஸைப் பதிவு செய்துள்ளார்கள். அதாவது:

'(நாங்கள் உங்களிடம் மார்க்க விளக்கங்களை கேட்க முடியாதவாறு) தங்களிடம் (எப்போதும்) ஆண்களே எங்களை மிகைத்து நிற்கிறார். எனவே, தாங்களாகவே எங்களுக்கென்று ஒரு நாளை ஏற்பாடு செய்யுங்கள்' என்று பெண்கள் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டுக் கொண்டார்கள். அவர்களும் அப்பெண்களுக்கென ஒரு நாளை வாக்களித்து, அந்நாளில் அவர்களைச் சந்தித்து அவர்களுக்கு அறிவுரை பகர்ந்தார்கள். (மார்க்கக் கட்டளைகளை) ஏவினார்கள். (புகாரி:101)

அவ்வாறே மார்க்க அறிவைக் கற்பதற்கு முற்காலத்துப் பெண்கள் வெட்கப்படவில்லை என்பதை நிரூபிக்கவும் ஒரு செய்தியை இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். அதாவது:

**கற்பதில் வெட்கப்படுவது;**

முஜாஹித் பின் ஜப்ர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: (ஒன்றைக் கற்றுக்கொள்வதற்கு) வெட்கப்படுபவரும் (தனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது எனக்கருதி) அகந்தை கொள்பவரும் (ஒருபோதும்) கல்வியைக் கற்றுக் கொள்ளமாட்டார்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: பெண்களில் சிறந்தவர்கள் அன்சாரிப் பெண்களே. (ஏனெனில்,) மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதற்கு வெட்கம் ஒருபோதும் அவர்களுக்குத் தடையாக இருந்ததில்லை.

அவ்வாறே பெண்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் அவர்களுக்குத் தேவையான மார்க்க விடயங்களை கற்றுக் கொடுத்தல் என்ற தலைப்பிலும் சம்பவங்களை பதிவு செய்துள்ளார்கள்.

தலைவர் (இமாம்) பெண்களுக்கு அறிவுரை வழங்குவதும் அவர்களுக்கு (கல்வி) போதிப்பதும். 'பெண்களுக்கு (தம் உரையைக்) கேட்க வைக்க முடியவில்லை என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கருதி, பிலால் (ரலி) அவர்களுடன் பெண்கள் பகுதிக்குச் சென்றார்கள். அங்கு அவர்களுக்கு அறிவுரை கூறிவிட்டு, அவர்களிடம் தர்மம் செய்யும்படி ஏவினார்கள். உடனே பெண்கள் தம் காதணிகளையும், மோதிரத்தையும் கழற்றிப் போட ஆரம்பித்தார்கள். பிலால் (ரலி) தம் ஆடையி (ன் ஒரு புறத்தை விரித்து அதி)ல் அவற்றைப் பெற்றுக் கொண்டே சென்றார்கள்' இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார்.




மத்ரஸா வளாகத்தில் அமைந்துள்ள வாசிகசாலையின் தோற்றம்

**ஸலாஹ் பெண்கள் பிரிவின் வாராந்த தர்பிய்யா வகுப்பு பற்றி;**

மேற்கூறப்பட்ட மார்க்கத்தின் ஆதாரங்கள், அடிப்படைகளையும், காலத்தின் தேவையையும் கருத்தில் கொள்ளப்பட்டு அல்லாஹ்வின் கிருபையினால் பெண்களுக்கான மார்க்க விளக்கப் பயிற்சி வகுப்பும், குடும்ப வாழ்க்கைக்கான வழிகாட்டலும் எமது ஊரிலும் ஸலாஹ் அரபுக்கல்லூரியின் அனுசரணையுடன், 2018.09.29ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில் இரு தொகுதியினருக்கான பயிற்சி நெறி முடிவடைந்துவிட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

**எமது பாடத்திட்டத்தின் சிறப்பம்சம்:**

இந்தப் பயிற்சி வகுப்பின் பாடத்திட்டம் பல மூத்த உலமாக்களின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்டுள்ளது. அக,புற வாழ்வின் நல்ல மாற்றங்களே நோக்கமாகும். ஒரு வருடங்கள் கொண்ட இப்பயிற்ச்சி வகுப்பில் அத்தஜ்வீத், அத்தப்ஸீர், அல்ஹதீஸ், அல்பிக்ஹு, ஸீரா, அல்அத்இயா வல் ஆதாப் என முக்கியமான பாடங்கள் நடாத்தப்படுவதோடு ஜனாஸா குளிப்பாட்டுதல் கபனிடுதல் மற்றும் வெற்றிகரமான இல்லற வாழ்வு ஆகிய தலைப்புகளில் விஷேட கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன.

பாடங்களைப் பற்றிய அறிமுகம்:

**1. அத்தப்ஸீர்:**

இப்பாடத்தில் தப்ஸீர் கலை சம்பந்தமான முன்னுரைகளுடன் அல்குர்ஆனின் கடைசி பாகத்தில் காணப்படக்கூடிய சிறிய சிறிய ஸூராக்களுக்கான தப்ஸீர்கள் ஆரம்பக்கட்டமாக கொடுக்கப்படுவதுடன் பெண்கள் சம்பந்தமான விடயங்களை பேசக்கூடிய ஸூரதுந்நூர் மற்றும் பெண்களுடன் சம்மந்தப்பட்ட அல்குர்ஆன் வசனங்களுக்கான தப்ஸீர்கள் நடாத்தப்படும்.

**02. அல்ஹதீஸ்:**

இப்பாடத்தில் ஹதீஸ் கலை பற்றிய ஆரம்ப அறிமுகங்களுடன் முதல்கட்டமாக சிறிய 40 ஹதீஸ்கள் வழங்கப்பட்டு, பிறகு இஸ்லாத்தின் அடிப்படையான தலைப்புகளில் காணப்படக்கூடிய ஹதீஸ்களும விளக்கங்களும் கொடுக்கப்படும். குறிப்பாக இந்தப் பாடத்திலும் பெண்களுடன் சம்பந்தப்பட்ட தலைப்புகள் கருத்தில் கொள்ளப்படும்.

**03. அல்பிக்ஹு:**

இப்பாடத்தில், இஸ்லாத்தின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றான இபாதத்துகள் (வணக்கவழிபாடுகள்) என்ற தலைப்பில் சுத்தம், தொழுகை, நோன்பு ஆகிய வணக்கங்களின் அடிப்படையான மார்க்க சட்ட விளக்கங்கள் வழங்கப்படும். அத்தோடு குறிப்பாக பெண்களுடன் சம்பந்தப் படக்கூடிய நிகாஹ், தலாக், இத்தா, பால்குடி போன்ற தலைப்புகளிலும் உள்ள அடிப்படையான சட்ட திட்டங்கள் போதிக்கப்படும். (இவை அனைத்தும் எமது நாட்டு முஸ்லிம்களால் ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக பின்பற்றப்பட்டு வரும் ஷாபிஈ மத்ஹபின் அடிப்படையில் அமைந்திருக்கும்.)

**04. அத்தஜ்வீத்:**

இந்தப் பாடத்தில் அரபு எழுத்துக்களின் பிறப்பிடங்கள், அவற்றை உச்சரிக்கும் முறை இன்னும் குர்ஆனுடைய வார்த்தைகளை உச்சரிக்கும் போது ஏற்படும் தவறுகளிலிருந்து நாவைப் பாதுகாப்பதற்கான பயிற்சிமுறை போன்ற இன்னும் பல விடயங்கள் பயிற்சியுடன் கற்றுக் கொடுக்கப்படும்.

**05. ஸீரதுந் நபி:**

இப்பகுதியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள மிக முக்கிய நிகழ்வுகள் மற்றும் அவர்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் போதிக்கப்படும்.

**அத்இயா வல் ஆதாப்:**

இந்த பாடத்தினூடாக, ஒவ்வொரு மனிதனும் தனது அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள், ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஓதப்பட வேண்டிய துஆக்கள் பாதுகாவல் தேட வேண்டிய அம்சங்கள் வழங்கப்படும்.



அல் ஸலாஹ் மத்ரஸாவின் கம்பீரமான தோற்றம்




மத்ரஸாவின் மகளிர் பிரிவு

**பெண்கள் நாளாந்த பகுதி நேரப் பிரிவு**

பாடசாலை செல்லும் எமதூர் பெண் பிள்ளைகளுக்கான பகுதிநேரப் பிரிவு 2022.10.02ம் திகதிஆரம்பிக்கப்பட்டது. இதில்

- அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி பார்த்தோதுதல்
- ஸுன்னத்தான சூராக்களை மனனமிடுதல்
- முழுக் குர்ஆனையும் மனனமிடுதல்

என்ற அமைப்பில் மார்க்க அடிப்படை விடயங்கள் உள்ளடக்கியதான பாடத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரிவில் தற்போது 01 முஅல்லிம், 03 முஅல்லிமாக்கள், 43 மாணவிகள் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆக அல்லாஹ் இம்முயற்சிகள் அனைத்தையும் கபூல் செய்து இதற்காகப் பாடுபட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அருள் கிடைக்க வேண்டுமென்று உஸ்தாத்மார்கள், மாணவர்கள் சார்பில் பிரார்த்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். மேலும் இதற்காக பாடுபட்டு இறையடி சேர்ந்த முன்னோர்களுக்கு அவர்களின் மறுமை வாழ்வு சிறப்புர இச்சந்தர்ப்பத்தில் துஆ செய்வோமாக!

தயாரிப்பு உதவி
எம்.எப்.எம். அஜ்வாத் பாஸி

### அல் ஸலாஹ் அரபுக் கல்லூரி நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ரஸ்வி...

அல்லாஹ்வின் அருள்மறையாம் அல்குர்ஆனை நமது ஊர் குழந்தைகளும் முறையாக மனனம் செய்து திருத்தமாக அழகாக ஓத வேண்டும். அதனை நாமெல்லாம் கண்டு நற்பயன்பெற்று பெரும் பாக்கியம் பெறவேண்டும் எனும் அடிப்படையில் பலசவால்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டதே அல்ஸலாஹ் அரபுக் கல்லூரி. சிறு வித்தாக முளைத்து பெரு விருட்சமாய் பல கிளைகளும் பரப்பி வளர்ந்து நிற்பது பெரு மகிழ்ச்சிக்குரியதாகும். அனைத்துக்கும் பேரருள் புரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்ஹம்துலில்லாஹ்!

மனனப் பிரிவாய் துளிர்விட்டசிறுவித்து, பல பிரிவுகளையும் இணைத்து இக்கல்லூரியை மையமாகக் கொண்டு நமது ஊர் சிறுவர், சிறுமியர் பெண்கள் அனைவரும் முழுமையாக பயன்பெற வேண்டும் எனும் வகையில் பல கிளைகள் பரப்பி பெரும் விருட்சமாக இதனை காணலாம் என நிச்சயமாக நம்புகிறேன்.

மிக மகிழ்ச்சிக்குரிய இச்சந்தர்ப்பத்தில் கலாசாலையில் இதுவரை கடமைபுரிந்து சென்ற கண்ணியமிக்க முன்னாள் அதிபர்கள் மேலும் இதற்கென அர்ப்பணிப்புடன் பங்கெடுத்து பாடுபட்டு காலஞ்சென்றவர்களும் தற்பொழுது மனத்தூய்மையுடனும் பாடுபட்டுக்கொண்டிறுக்கும்

மிக மகிழ்ச்சிக்குரிய இச்சந்தர்ப்பத்தில் முழு அர்ப்பணிப்புடன் எந்தவித உலக எதிர்பார்ப்புகளும் இன்றி மனத்தூய்மையுடன் சிறப்பாக செயல்படும் நிர்வாகம் பல சிரமங்களுடன் பெரும் தியாகம் செய்து கரிசனை கொண்டு கல்வி போதிக்கும் சங்கைமிக்க அதிபர், உஸ்தாத்மார்கள், சிறந்த ஆலோசனைகளை வழங்கி வழி நடத்தும் மதிப்புக்குரிய பெரியார்கள், அறிஞர்கள் நலன் விரும்பிகள் பொது மக்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் பிரார்த்திக்கிறேன்.



ஹிப்ழ் பிரிவு புதிய கட்டடம்




சென்னையில் உள்ள கொரிய குடியரசின் கவுன்சில் ஜெனரல் சாங்நியுன் கிம் தமது பதவியை பொறுப்பேற்றதுடன் தென்னிந்தியாவிற்கான இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரனை அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.must

## சிறுமியின் கை... (03ஆம் பக்கத் தொடர்)

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் புதன்கிழமை இவ்வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு விசாரணைகள் முடிவடையவில்லையெனவும், அதற்கு தமக்கு மேலதிகமாக 10 நாட்கள் தேவையெனவும் நீதிமன்றத்தில் தெரிவித்தது .

இதனையடுத்து , துண்டிக்கப்பட்ட கையை பொலிஸாரூடாக கொழும்புக்கு அனுப்பி மேலதிக பரிசோதனை நடத்தப்படவுள்ளது. இது தொடர்பிலான அறிக்கையை பெறவும் மன்று உத்தரவிட்டு , வழக்கினை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு திகதியிட்டு ஒத்திவைத்தது.

## போதகர் ஜெரோமின்... (03ஆம் பக்கத் தொடர்)

நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.இதன் போதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போதகர் ஜெரோம் மற்றும் அவரது தனியார் நிறுவனத்தின் 12 கணக்குகளில் 1,226 கோடி ரூபா வைப்பிலப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், Miracle Drome நிறுவகத்தை நிறுவுவதற்கு 6,100 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சவாலான காலகட்டத்திலும்... (03ஆம் பக்கத் தொடர்)

முன்னெடுத்துச் செல்லும் செயற்பாடுகளில் லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கும் பாரிய பொறுப்புக்கள் காணப்படுகிறது. அந்த வகையில் தற்போது நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்கள் மற்றும் 25 வருட சேவை நிறைவை நினைவுகூரும் ஊழியர்களுக்கும் தமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஒரு வருடத்தில் மட்டும்... (03ஆம் பக்கத் தொடர்)

விதிப்பதற்கான திட்டங்களுமே, நாட்டிலிருந்து விமானிகள் வெளியேறும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் வெளியேறியதால், விமானிகளை பேணுவதில் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.இவ்வருடம் 30 விமானிகள் தேவை அடுத்த வருடம் நடுப்பகுதிக்குள் 50 விமானிகள் தேவையென ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பிரதம நிறைவேற்றதிகாரி தெரிவித்துள்ளார்.

அதிஷ்டவசமாக தென்கிழக்கு ஆசியாவிலும் வடகிழக்கு ஐரோப்பாவிலும் திறமையான விமானிகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களுக்கு...

தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இத் தொலைபேசி இலக்கத்தில் whats app மூலமாக அல்லது எஸ் எம் எஸ் குறுஞ்செய்தி ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும்.

## எரிபொருள்...

அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தானியங்கி பம்பிகள் மற்றும் உபகரணம் பொருத்தப்பட்ட பின்னர், எரிபொருள் நிலையங்களில் எரிபொருளை பெற்றுக் கொள்ள வரும் நுகர்வோர், தமக்குத் தேவையான எரிபொருளை தாமே பெற்றுக் கொண்டு உரிய உபகரணத்தில் பணத்தை வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு விரைவாக எரிபொருள் முகாமைத்துவத்தை மேற்கொள்ளவும் அதற்கான தொகையை அறவிட்டுக் கொள்ளவும் வசதி ஏற்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை,அடுத்த வருடம் முதல் எரிபொருள் விலைகள் தன்னியக்கமாக தினந்தோறும் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படும் என மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடன் அமைச்சர் விசேட பேச்சு வார்த்தையொன்றை மேற்கொண்டுள்ளார்.இப்பேச்சுவார்த்தையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய எரிபொருள் நிலையங்களை நிர்மாணித்தல், உராய்வு நீக்கிய எண்ணெய் சம்பந்தமான நடவடிக்கைகள் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றுள்ளன.

# தமிழ், சிங்கள புதுவருட காலத்தில் பிரதான எதிர்கட்சி நிலைத்திருக்காது

நாட்டின் பிரதான அரசியல் கட்சி எதிர்வரும் தமிழ் சிங்கள புதுவருடமாகும் போது நிலைத்திருக்காதென, ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய தலைமையகம் சிறிகொத்தவில் (13) நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பில், கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

விரைவில் தேர்தல் ஒன்று நடைபெறுமா? என சிலர் என்னிடம் கேட்கின்றனர். ஆனால் நாட்டின் பொருளாதார நிலையில் எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் தேர்தல் ஒன்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படலாம். இதனால், மக்களுக்கு தேவையான எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, முதலில் பொருளாதாரத்தை பலப்படுத்திக்கொண்டு, தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை தேடிக்கொள்ள வேண்டும். இதன் பின்னர் எந்தவொரு தேர்தலையும் நடத்த எங்களுக்கு முடியுமாக இருக்கும்.



## பல்கலைக்கழக...

என்ற இணையதளத்துக்கு பிரவேசித்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும். விண்ணப்பங்கள் அக்டோபர் மாதம் 05ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுச் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய 02 இலட்சத்து 63 ஆயிரத்து 933 பரீட்சார்த்திகளில் 01 இலட்சத்து 66 ஆயிரத்து 938 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களில் இம்முறை 45,000 பேர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா.வதிவிட...

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ் விரைவில், மலையகத்துக்கு கண்காணிப்பு பயணம் மேற்கொள்ளவுள்ளார். ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி, அமைச்சர் ஜீவன் தொண்டமானை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகம் சௌமியபவனில் நேற்று (14) சந்தித்து பேச்சு நடத்தினார்.

இ.தொ.காவின் சர்வதேச விவகார பொறுப்பாளரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க, பிரத்தியேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

சமகால அரசியல் மற்றும் பொருளாதார நிலைவரம் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மலையக தமிழர்களின் வரலாறு, அவர்களுக்கு குடியுரிமை பெற்றுக்கொடுப்பதற்காக இ.தொ.கா முன்னெடுத்த போராட்டங்கள், மலையகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ள மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஐ.நா. பிரதிநிதிக்கு தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

காப்புறுதி, காணி உரிமை உட்பட, தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும், அதற்கு ஐ.நா. மற்றும் அதன் கீழ் இயங்கும் கிளை அலுவலகங்களின் உதவிகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது சம்பந்தமாகவும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## IMF இன் கடன்...

ஆரம்பமான முதலாவது அமர்வில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அரசாங்கத்தின் சார்பில் பங்கேற்றதாக பதில் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த மீளாய்வு அமர்வானது இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கும் இரண்டாவது தவணையை பாதுகாப்பது மற்றும் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் முக்கிய திருப்புமுனையாக அமைவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சிக்கான சிறந்த வழிகளை இதன் மூலம் உருவாக்கிக் கொள்ள முடியும். நேற்றைய முதலாவது அமர்வில் ஆரம்பிப்பதற்கு முன்பதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தமது ட்விட்டர் பதிவில் இதுபற்றி குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## க,பொ,த,உயர்தர...

அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அதே வேளை 2022 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றி 2023 ஆம் ஆண்டு மீண்டும் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கிணங்க இந்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்பதாக அதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் மாணவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

## 15,000 US $ பரிசுத்...

இந்தியா, பாகிஸ்தானுக்கிடையிலான போட்டி நடைபெற்றது. இதன்போது, இந்திய அணி 228 ஓட்டங்களால் அபார வெற்றி ஈட்டியது.

இதற்காக இந்திய அணிக்கு 15,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டன. இந்த 15,000 அமெரிக்க டாலர்களையும் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா, அணியின் சார்பில், மைதானத்தில் கடுமையாக உழைத்த பணியாளர்களுக்கு வழங்கியுள்ளார். இப் போட்டியின் போது கடும் மழை அவ்வப்போது குறுக்கீடு செய்த போதும், மைதானத்தில் பணியாற்றிய ஊழியர்கள் சிறப்பாக செயல்பட்டு துடுப்பாட்ட களத்தை மழையிலிருந்து பாதுகாத்தனர்.

இதற்காகவே ரோகித் சர்மா தனது, அணியின் பரிசுத் தொகையை அவர்களிடம் கையளித்துள்ளார். இதற்கான காசோலை அன்றைய தினமே மைதானத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. ரோஹித் சர்மாவின் செயலை உலகம் முழுவதுமுள்ள கிரிக்கெட் ரசிகர்கள் பாராட்டி வருகிறார்கள்.

## பழுதடைந்த...

கேக் ஒன்றை கொள்வனவு செய்தவர், அந்த கேக் பழுதடைந்துள்ளதாக வவுனியா பொதுச் பரிசோதகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டையடுத்து சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனை மற்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஐ.நா பொதுச்சபை...

கள் தொடர்பில் வழிகாட்டும் தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.இத்தலைவர்கள் மத்தியிலே ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

இதற்கு இணையான மூலங்களை அடிப்படையாகக் கொண்ட காலநிலை மாற்றத்துக்கு முகங்கொடுக்கும் மற்றும் பொருளாதார மாற்றத்துக்கான கூட்டு விருப்பத்தை நிரூபிப்பதை மைல்கல்லாகக் கொண்டு கூட்டப்படுகிறது.

அபிவிருத்திக்கான நிதியியல் தொடர்பான 'கடன் நிலைபேற்றுத் தன்மையை உருவாக்குதல் மற்றும் உலகளாவிய நிதிப் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்துதல்' என்ற தலைப்பில் இடம்பெறும் உயர்மட்டக் கூட்டத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார்.

நியூயோர்க் விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரெஸ் மற்றும் ஏனைய உறுப்பு நாடுகளின் தலைவர்களையும் சந்திந்திக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள சுமார் 40 முன்னணி தனியார் வர்த்தக நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள இலங்கைக்கான பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான வட்டமேசை கலந்துரையாடலிலும் பங்கேற்கும் ஜனாதிபதி, கடல்சார் நாடுகளுக்கான மூன்றாவது ஆசியபசுபிக் தீவு நாடுகளின் கலந்துரையாடலிலும் உரையாற்றவுள்ளார்.

## வேலைநிறுத்த...

செய்து வருகின்றனர். இந் நிறுவனம் இரயிலின் இதயம் போல் இருப்பதால், அவர்கள் வேலைநிறுத்தங்களுக்கு ஒருபோதும் பங்களிக்கவில்லை. வேலைநிறுத்தப் பேரணிகளில் சிக்கிக் கொள்ளாமல், அரசியல் நிகழ்ச்சி நிரல்களைப் பின்பற்றாமல் நாட்டிற்கான தொழில்சார் பொறுப்பை நிறைவேற்றியதற்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எ வ் வ ளவு வெளி நா ட் டு க் க ட னை ப் பெ று கி றோம் என்பதைப் பொறுத்தே நிறுவனங்களை திறம்பட நடத்துவது பற்றிய அனைத்து முடிவுகளும் எடுக்கப்படும். இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் நாளாந்தம் இயங்குவதற்குப் போதுமான வருமானத்தைப் பெறுவதில்லை. ஒவ்வொரு அரசாங்கத்தினதும் நடைமுறை கணக்கில் பற்றாக்குறை காணப்பட்டது. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தின் கீழ், வெளிநாட்டுக் கடன் உதவி இல்லாமல் நாட்டை நடத்த முடியாது. இதனால் பல ஆண்டுகளாக பழமையான இந்த இடத்தில் உள்ள ரயில்வே உதிரிபாகங்களை பணமின்றி மீண்டும் பயன்படுத்தக் கூடிய வகையில் உருவாக்க முடியாது. நாட்டில் உள்ள அனைவரும் சட்டத்துக்குட்பட்டு செயல்பட வேண்டும். அதன்படி, பொது மக்களின் நலனுக்கான அத்தியாவசிய சேவையாக மாற்றிய பின், அனைவரும் அந்தச் சட்டத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

எனது வேண்டுகோளுக்கிணங்க, ரயில்வே துறையின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகளை வழங்க நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் இரண்டு மாதங்களில் பெறப்படவுள்ளது. இது தொடர்பான பத்திரத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிப்போம் என நம்புகிறோம்.

ரயில்வேயை தனியார் மயமாக்க வேண்டும் என்ற கருத்து மக்களிடையே பரவலாக வேரூன்றியுள்ளது. மக்களும், ரயில்வே ஊழியர்களும் தங்களது கருத்துக்களை இந்தக் குழுவிடம் முன்வைக்கலாம்.அதன்படி, நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதொரு பொதுவான முடிவை எட்டுவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம்" என்றார்.

ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.டி.எஸ்.குணசிங்க, பிரதான இயந்திரவியல் பொறியியலாளர் கே.டி.ஹேவாவிதாரண மற்றும் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


**கல்கமுவ பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை பற்றி பொதுமக்களை அறிவூட்டுதல்**

கல்கமுவ பிரதேச சபையின் 2024ம் ஆண்டிற்காக மீள் வருமானம் ரூபா 166 மில்லியன் மற்றும் மூலதன வருமானம் ரூபா 53 மில்லியன் ஆவதுடன் மீள் செலவு ரூ. 153 மில்லியன் மற்றும் மூலதன செலவு ரூபா 65.88 மில்லியன் மற்றும் மேலதிகம் ரூ. 72732.00 ஐக் கொண்டதாக தயாரிக்கப்பட்ட குறை நிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை மக்கள் பரிசீலனைக்காக கல்கமுவ பிரதேச சபை அலுவலகத்தில் மற்றும் சபைக்குச் சொந்தமான கல்கமுவ, நான்னேரிய, எஹட்டுவெவ ஆகிய மக்கள் நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளதாக

இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.பீ. நிமல் ரத்நாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**கல்கமுவ.**



**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட / நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்: -

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | எயார் சீ.்ப் மார்ஷல் (ஓய்வு பெற்ற) திரு. சுதர்சன் கரகொட பத்திரன இலக்கம் 453/3, கொழும்பு வீதி, குரனா, நீர்கொழும்பு | நேபாள அரசிற்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | பேராசிரியர் திரு. எம்.ஏ.ஆர்.எம். பெர்னாண்டோ இலக்கம் 118/7, "மிட் வில்லா" குருந்துவத்தை வீதி, பேராதனை. | இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | திரு. டபிள்யூ.பி. சம்பத் ருவன் குமார "தருஷி", பத்திவெல, தொடம்பஹல, திக்வெல்ல. | நோர்த் சீ லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 4 | பொறியியலாளர் திரு. பி.ஏ.எஸ்.எஸ். பெரேரா இலக்கம் 444, "லஸ்ஸன", ஒழுங்கை யந்தம்பலாவ, குருநாகல் | பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நியமிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, **"செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே"** என்ற விலாசத்திற்கு **2023 செப்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. **011-2777389** ஊடாக அல்லது **highposts_c@parliament.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது **(www.parliament.lk)**

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2023 செப்தெம்பர் 15 ஆம் திகதி**


## தவறான...

ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பணி, உலகளாவிய பாரபட்சமற்ற தன்மை, புறநிலை மற்றும் தேர்ந்தெடுக்காத தன்மை, ஆக்கபூர்வமான சர்வதேச உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் கொள்கைகளால் வழிநடத்தப்படல் வேண்டும் என்பதே, தீர்மானங்கள் 60/251 மற்றும் 48/141 இன் தேவைப்பாடாகும்.

துரதிஷ்டவசமாக, இலங்கையைப் பொறுத்தமட்டில் அது அவ்வாறு செயற்படுவதாகத் தெரியவில்லை.

இந்த சபைக்கு இலங்கை பலமுறை அறிவித்துள்ளபடி, இந்த தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உட்பட பல விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அவுஸ்திரேலிய பொலிஸ், அமெரிக்காவின் எப்.பி.ஐ. மற்றும் இன்டர்போல் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் உதவிகளை வழங்கின.

ஏப்ரல் 2023 நிலவரப்படி, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் 79 பேர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல்களின் போது ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபர், அரச புலனாய்வு பிரிவுப் பணிப்பாளர்,

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு மீதான தீர்ப்பை, இலங்கை உயர் நீதிமன்றம் 2023 ஜனவரி 12ஆம் திகதி வழங்கியது.

மேலும், பொதுவாக எழுந்துள்ள கவலைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.மேலும் இது தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரின் தலைமையிலான குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான உரையாடலின் போது எமது நாட்டில் காணக்கூடிய முன்னேற்றத்தை அங்கீகரித்து பல நாடுகள் தெரிவித்த நேர்மறையான கருத்துக்களை நாம் பாராட்டுகின்றோம்.

ஒரே சீனா கொள்கையை இலங்கை ஆதரிப்பதுடன் ஐ.நா. மனித உரிமைகள் பொறிமுறைகளுடனான சீனாவின் ஒத்துழைப்பை வரவேற்பதாகவும்.அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## கொரியாவில்...

மனுஷ நாணயக்காரவின் அழைப்பின் பேரில், கொரிய அரசாங்கத்தின் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் Lee JungSik இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்தார். வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார விமான நிலையத்தில் அவரை வரவேற்றார்.

இரு அமைச்சர்களுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் இடம்பெற்றது.இதன் போது இலங்கை பணியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. கொரியாவின் இ.பீ.எஸ் முறையிலான வேலைவாய்ப்பு விடயத்தை இருபது ஆண்டுகளுக்குப் பின்னர், மீள கவனத்தில் கொள்வதாகவும் இதற்கு அமைவாக இலங்கை ஊழியர்களுக்கு கூடுதலான தொழில் வாய்ப்புகளை வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் கொரிய தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர், இதன் போது உறுதியளித்தார்.

இலங்கைத் தொழிலாளர்களுக்கு ஆடைத் தொழில், பராமரிப்பு சேவை தொழில் துறை போன்ற துறைகளில் புதிய தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதன் போது கோரிக்கை விடுத்தார்.

இதற்கு கொரிய தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சரிடமிருந்து சாதகமான பதில் அளிக்கப்பட்டது.

கொரியாவின் கப்பல் நிர்மாணத் துறையில் தொழில்களுக்கு பெருமளவிலான பணியாளர்கள் தேவைப்படுவதாகவும், இலங்கையின் திறமையான தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதற்கான சந்தர்ப்பம் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

# தினகரன் Business

## இலங்கையின் ரியல் எஸ்டேட் பிரிவில் புதிய யுகம் படைக்கும் ஜோன் கீல்ஸ்

உயர் ரக வதிவிட தொடர்மனைகளை நிர்மாணிப்பதற்காக புகழ்பெற்றுள்ள JKP, இலங்கையின் நகர வாழ்விடக் கட்டமைப்பை மாற்றியமைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. The Emperor, The Monarch, 7th Sense, OnThree20, TRIZEN மற்றும் 4.5 மில்லியன் சதுர அடிப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் Cinnamon Life ரிசோர்ட் ஆகியன புத்தாக்கம் மற்றும் சிறப்பு ஆகியவற்றின் அடையாளமாக அமைந்துள்ளன.

வதிவிடத் திட்டங்களுக்கு மேலதிகமாக, நிறுவனம் Crescat Boulevard Mall, மொரட்டுவ மற்றும் ஜாஎல பிரதேசங்களில் KZone Malls மற்றும் கண்டி, திகன பகுதியில் Victoria Golf Resort ஆகியவற்றையும் செயற்படுத்துகின்றது. இந்த கொல்ஃப் திடல், உலகின் 100 மிகவும் அழகிய கொல்ஃப் திடல்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இதில் பிரத்தியேகமான காணிப் பகுதிகள் மற்றும் சொகுசான விடுமுறை இல்லப்பகுதிகள் போன்றனவும் அடங்கியுள்ளன.

புத்தாக்கத்துக்கான அர்ப்பணிப்பு என்பது ஏனைய நிறுவனங்களிலிருந்து JKP ஐ வேறுபடுத்தி காண்பிக்கும் அம்சமாக அமைந்துள்ளது. The Emperor மற்றும் The Monarch ஆகிய திட்டங்களினூடாக ஒன்றிணைக்கப்பட்ட வாழ்க்கைமுறை எனும் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன், சொகுசான வாழிடங்களில் புதிய எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன.

கொழும்பின் மிகவும் பெருமைக்குரிய முகவரிகளில் ஒன்றான கிரெகரிஸ் வீதியில் 7th Sense என்பது வதிவிடப் பகுதியாக பிரத்தியேகமான



சொகுசான வாழிட அம்சங்களை கொண்டு அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஸ்மார்ட் தொழில்நுட்ப ஒன்றிணைப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ள TRIZEN, நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## நிலைபேறான மற்றும் நெறிமுறையான விவசாயத்தில் 30 வருடத்தை கொண்டாடும் Bio Foods நிறுவனம்

Bio Foods (Pvt.) Ltd நிறுவனம் உலகளாவிய ரீதியில் சேதன மற்றும் நியாய வர்த்தக விவசாயத்தில் முன்னணியில் திகழ்வதன் மூலம் அதன் 30ஆவது ஆண்டு நிறைவை பெருமையுடன் கொண்டாடுகிறது. நிறுவனத்தின் தலைவரான கலாநிதி ஏ. சரத் ரணவீரவினால் 1993 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Bio Foods ஆனது, நிலைபேறான மற்றும் நெறிமுறையான விவசாய நெறிமுறைகளுக்கான ஒரு முன்மாதிரியாக உருவெடுத்துள்ளது.



சாதகமான மாற்றத்தை வளர்ப்பதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன், சான்றளிக்கப்பட்ட விவசாயிகள் குழுக்கள் முதல் செயலாக்க தொழிற்சாலைகள் மற்றும் இறுதி நுகர்வோர் தயாரிப்பு வரை முழு உணவு உற்பத்திச் சங்கிலியையும் தழுவியவாறு நிறுவனம் சிறப்பாக செயற்பட்டு வருகிறது.

நிறுவனம், சேதன சான்றிதழ் தரநிலைகளை கடுமையாக பின்பற்றி அதனை உறுதியுடன் கடைப்பிடிப்பதன் மூலம், தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள், பூச்சிகொல்லிகள், மரபணு மாற்றப்பட்ட செயற்பாடுகள் மூலமான தயாரிப்புகள் போன்றவற்றால் கறைபடாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

மேலும், 1990 களின் முற்பகுதியில் Fairtrade Labeling Organization (FLO) இனது தரநிலை அமைக்கும் குழுக்களின் உறுப்பினர், கலாநிதி ரணவீரவின் மதிப்பிற்குரிய பதவியானது, இன்று உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் நியாயமான வர்த்தக ஒழுங்குமுறைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.

அதேசமயம், Bio Foods இன் உறுதியான நியாயமான வர்த்தக நடைமுறைக் கொள்கைகள் மற்றும் ஏற்றுமதி வருமானம் ஆகியன நாடு முழுவதும் உள்ள எண்ணற்ற சிறிய அளவிலான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துகின்றன.

## இலங்கையிலுள்ள 1.6 மில்லியன் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கல்வியை மீட்கும் தேசிய முயற்சி;

### கல்வி அமைச்சு, யுனிசெப் தலைமைத்துவம்

கடந்த மூன்று வருடங்களில் நீடித்த பாடசாலை மூடல்கள் மற்றும் அவ்வப்போது கல்விக்கு ஏற்பட்ட இடையூறுகளால் பாதிக்கப்பட்ட நாடு முழுவதிலும் உள்ள 1.6 மில்லியன் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை மீட்பதற்கு உதவி செய்யும் தேசிய முயற்சிக்கு கல்வி அமைச்சு மற்றும் யுனிசெப் ஆகியன தலைமை தாங்குகின்றன.

கல்வி அமைச்சுத் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைய தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவர்களில் 85% பேர் ஆகக் குறைந்த எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு நிலைகளை அடையவில்லை. இது அவர்களின் இடைநிலை பாடசாலையின் மாற்றத்துக்கும், அதற்கு அப்பாலான வாழ்க்கை மற்றும் தொழிலுக்கும் இன்றியமையாததாகும்.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டியன் ஸ்கூக் மற்றும் அரசாங்க, அபிவிருத்திப் பங்காளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



மொத்தத் தேசிய உற்பத்தியில் 2% இற்கும் குறைவான தொகையையே இலங்கை தற்பொழுது கல்விக்காக ஒதுக்கியுள்ளது. இது கல்விக்கான ஒதுக்கீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 46% ஆக இருக்க வேண்டும் என்ற சர்வதே அளவுகோலுக்குக் கீழ் காணப்படுவதுடன், தெற்காசியப் பிராந்தியத்தில் இதுவே மிகவும் குறைவாகவும் காணப்படுகிறது.

'தேசிய வரவு, செலவுத்திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டை, குறிப்பாக ஆரம்பத் தரங்களுக்கு அதிகரிக்க வேண்டிய அவசர தேவை காணப்படுகிறது. சிறுவர்களின் அடிப்படைக் கற்றலை ஊக்குவிக்கும் அதேநேரம், கல்வியில் முக்கிய மறுசீரமைப்புக்களை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய திறன் மிக்க மனித வளத்தைக் கட்டியெழுப்ப முடியும்' என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கற்றல் நெருக்கடியானது பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள சிறுவர்களையும், ஆரம்பத் தரங்களில் உள்ள சிறுவர்களையும், நாட்டின் பெருந்தோட்டத் துறையில் உள்ளவர்களையும் பாதித்துள்ளது.



'எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் சமூகப் பொருளாதாரத் திறன்களே சிறுவர்கள் தமக்கான மற்றும் தமது குடும்பங்கள், சமூகங்கள் உள்ளடங்கலாக நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை வழங்குகின்றன' என யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டின் ஸ்கூக் தெரிவித்தார். 'நாடு எதிர்கொண்டுள்ள தொடர்ச்சியான இன்னல்களால் கல்வியை இழப்பவர்கள், மெதுவாகக் கற்றுக்கொள்பவர்கள், கல்வியில் பின்தங்கியுள்ள சிறுவர்களின் கற்றல் சாதனையில் விரிவடைந்து வரும் ஏற்றத்தாழ்வுகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு செல்லத் தேவையான உடனடி நடவடிக்கைளை மேற்கொண்டுள்ள கல்வி அமைச்சின் முயற்சிகளைப் பாராட்டுகின்றோம் என்றார்.

## Hayleys Fabric மற்றும் Pro Green Laboratoriesவின் FaBriEco அறிமுகம்



இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளர்களில் ஒருவரான Hayleys Fabric PLC, தொழில்துறை கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்களாக மாற்ற மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் Pro Green Laboratories உடன் கைகோர்த்துள்ளது.

FaBriEco ஒத்துழைப்பின் நோக்கம், ஆடைத் தொழில்துறையின் துணை தயாரிப்புகளான கழிவாக அகற்றப்படும் சாயங்கள், கழிவாக வீசப்படும் துணிகள் மற்றும் புகையாக பறக்கும் சாம்பல் போன்ற உற்பத்திக் கழிவுகளைப் பயன்படுத்தி உள்ளூர் சந்தைக்கு மலிவு விலையில், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தயாரிப்புகளை உருவாக்குவதாகும். இந்த முயற்சியானது Pro Green Laboratoriesன் பேராசிரியர் ரங்கிகா யூ ஹல்வத்துரவின் செயற்பாடுகளின் கீழ் நடத்திய ஆய்வின் அடிப்படையில் அமைந்ததுடன் மண் கொன்கிரீட் செங்கற்கள் மற்றும் பாலிமர் சுயகச்சிதமான மண் செங்கற்கள் போன்ற நிலையான தயாரிப்புகளுக்கான காப்புரிமையை அவர் ஏற்கனவே பெற்றுள்ளார்.

"இந்தக் கூட்டாண்மை பசுமையான எதிர்காலத்தை உருவாக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். Pro Green Laboratories உடன் எங்களின் நிலைத்தன்மை குழுவில் இணைவதன் மூலம், கழிவு நிர்வகிப்பு மற்றும் உற்பத்தியில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும், இது ஒரு வட்டப் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும்." என Hayleys Fabric இன் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

## Cathay Pacific விமான சேவை மீண்டும் இலங்கைக்கு

ஹொங்கொங்கைத் தளமாகக் கொண்ட விருதுபெற்ற விமான சேவையான Cathay Pacific, 2024 பெப்ரவரி 2ஆம் திகதி முதல் இலங்கைக்கான விமான சேவையை மீள ஆரம்பிக்கவிருப்பதாக தெரிவித்துள்ளது.

பெறுமதி மிக்க உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவது மற்றும் உலகம் முழுவதிலுமுள்ள மக்களை இணைப்பதில் தொடர்ந்து அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் நோக்கில் விமான சேவை நான்கு வருட இடைவெளியின் பின்னர் இலங்கையின் வான் பரப்பில் மீண்டும் உயரப் பறக்கவுள்ளது.

வாரத்திற்கான விமானம் புறப்பாடு STD வருகை STA நாட்கள் புதன்கிழமை CX610 கொழும்பு 0045 ஹொங்கொங் 0840 வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை CX611 ஹொங்கொங் 2005 கொழும்பு 2330 வியாழக்கிழமை, சனிக்கிழமை.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சௌகரியமான சிறந்த பயண அனுபவத்தை வழங்கும் நோக்கில் A330 எயார்பஸ் விமானங்களின் மூலம் வாரத்துக்கு மூன்று விமான சேவைகளை 6 செப்டெம்பர் 2023 Cathay Pacific செயற்படுத்தவுள்ளது. இந்த விமானமானது இரண்டு வகுப்புக்களில் அதாவது சிக்கன வகுப்பில் 265 ஆசனங்கள் மற்றும் வணிக வகுப்பில் 28 ஆசனங்கள் உள்ளடங்கலாக 293 ஆசனைங்களைக் கொண்டுள்ளது.

இந்த விமான சேவை மீளவும் ஆரம்பிக்கப்படுவதானது ஹாங்கொங்கிற்கும் இலங்கைக்கும் விமானத்துறை தொடர்பில் நீண்டகாலமாகக் காணப்பட்ட பங்குடமைக்கு உயிர்ப்பூட்டும் வகையில் அமையும்.

## DFCC வங்கியின் புத்தாக்க இணையத்தளம் BestWeb.LK Awards 2023 வெள்ளி விருது



புத்தாக்கம் மற்றும் பயனர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்பிற்கான அதன் ஓயாத அர்ப்பணிப்பின் எதிரொலியாக, DFCC வங்கியின் புத்தாக்கத்துடனான இணையத்தளம் மீண்டும் ஒரு முறை வெற்றிபெற்றுள்ளதுடன், BestWeb.LK Awards 2023 விருதுகள் நிகழ்வில் வங்கிச்சேவை மற்றும் நிதிப் பிரிவில் மிகச்சிறந்த இணையத்தளத்திற்கான மதிப்புமிக்க வெள்ளி விருதை தனதாக்கியுள்ளது. இந்த விருதானது வங்கியைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை இலக்கினைக் குறித்து நிற்பதுடன், டிஜிட்டல் துறையில் ஒரு புத்தாக்குநராக அதன் ஸ்தானத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் வண்ணம், தொடர்ந்து 4 ஆவது ஆண்டாக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. BestWeb.LK விருதுகள் என்பது LK Domain Registry ஆல் ஒழுங்கமைக்கப்படுகின்ற டிஜிட்டல் மேன்மைக்கு அங்கீகாரமளிக்கும் வருடாந்த கொண்டாட்டமாகும்.

## 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க நிறுவனங்கள் வரிசையில் HNB



இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, 2022 ஆம் ஆண்டில் ஐந்தாவது தடவையாக இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

The American Institute of Certified Public Accountants மற்றும் Chartered Institute of Management Accountants (AICPA & CIMA), The International Chamber of Commerce Sri Lanka (ICCSL) ஆகியவற்றால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த தரவரிசை, பங்குதாரர்களுக்கு நீடித்த மதிப்பை உருவாக்கி, நிறுவன சிறப்பை ஊக்குவிக்கும் இலங்கை நிறுவனங்களை அங்கீகரிக்க ஒரு தளமாக செயல்படுகிறது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக்க கலந்துகொண்டதுடன், இந்த நிகழ்வில் முக்கிய உரையை இலங்கைக்கான ஜப்பானின் பிரதித் தூதுவர் Katsuki Kotaro நிகழ்த்தினார்.

வலுவான உள்ளூர் மற்றும் உலகப் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்கையில், இலங்கையின் மிகவும் போற்றப்படும் நிறுவனங்களில் ஒன்றாக HNB இன் மீள் உறுதிப்படுத்தல், எமது குழுவின் மதிப்புகள் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, அத்துடன் HNB தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் செயற்பாட்டுச் சிறப்புகள் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றின் வலுவான மற்றும் நெகிழ்ச்சியான அடித்தளத்தைப் பறைசாற்றுகிறது.

## Abans - Diva Power சலவை புரட்சி

Abans Diva Power உடன் இணைந்து சிறப்பு ஊக்குவிப்புத் திட்டமொன்றை தற்போது நடத்தி வருகிறது. இதன் அடிப்படையில் அபான்ஸ் சலவை இயந்திரத்தை கொள்வனவு செய்பவர்களுக்கு Diva Power அல்லது washing liquid இலவசமாக வழங்கப்படும். அபான்ஸ் சலவை இயந்திரத்தை கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலவசமாக இந்த தயாரிப்பு வழங்கப்படுவதோடு, சீட்டிழுப்பு மூலம் தேர்வு செய்யப்படும் 2 நபர்களுக்கு ஒரு வருடத்திற்கு போதுமான Diva Power தயாரிப்புகள் இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புகழ்பெற்ற இரண்டு முன்னணி நிறுவனங்களான Abans மற்றும் Hemas Consumer Brands ஆகிய நிறுவனங்களுக்கு இலங்கை விற்பனை சந்தையில் மிகச்சிறந்த அங்கீகாரம் உள்ளது. இதன் அடிப்படையில் இந்நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல தரப்பட்ட தயாரிப்புகளை விற்பனை சந்தைகளுக்கு அறிமுகம் செய்துள்ளன.



நேரத்தை சேமித்து வீட்டிலுள்ள ஆடைகள் மற்றும் துணிகளை மிகவும் சுலபமாக சலவை செய்வதற்காக, தற்காலத்தில் சலவை இயந்திரம் இன்றியமையாத ஒரு உற்பத்தியாகும். இலங்கை சந்தைகளில் உள்ள சலவை இயந்திரங்களில் அபான்ஸ் சலவை இயந்திரமே முன்னணியில் உள்ளது.

# வேறுபாடுகளை வேரறுத்த இஸ்லாம்



இஸ்லாம் என்றால் அது சாந்தி, சமாதானம், சகோதரத்துவம் என்றும் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட இறைவழிகாட்டலாகும். இத்தகைய உயர்ந்த கோட்பாடுகளை வெறும் போதனைகளாக மட்டும் கொண்ட மார்க்கமாக இல்லாமல் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான சமூக அமைப்பையும் உருவாக்கி செயற்படுத்தி எழுச்சியை ஏற்படுத்திய மார்க்கமாகும்.

இன, நிற, மொழி, வர்க்க, சாதி வேறுபாடுகளை ஒழித்து சமத்துவத்தை உலகில் ஏற்படுத்திய மார்க்கம் இது. இஸ்லாத்தில் அல்லாஹ்வின் கட்டளைப்படியும், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றியும் நடப்பவரே உயர்ந்தவராகவும், கண்ணியமுள்ளவராகவும் கணிக்கப்படுவார். இறை கட்டளைக்கும் நபி வழிக்கும் மாற்றமாக நடப்பவர் கண்ணியம் இழந்தவராவார். இதைத் தவிர வேறுபாடு எதனையும் இஸ்லாம் அறிமுகப்படுத்தவில்லை.

அல்லாஹ் கூறுகிறான், 'மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும், பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும், கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள் தான். திண்ணமாக அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கிறான்'.

(அல்குர்ஆன் 49:13)

இதன் காரணமாகத்தான் இஸ்லாத்தில் இன, நிற, மொழி வர்க்க வேறுபாடுகள் எதுவுமே பாராட்டப்படுவதில்லை. இக்குறுகிய வட்டங்களில் மனித சமுதாயத்தில் பிரிவுகளை ஏற்படுத்தும் தீய செயலைத் தூண்டுவதுமில்லை.

அறிவியல், நாகரிகம் என்பவற்றில் முதிர்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படும் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் கூட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் இன்றும் கூட வேறுபாடுகள் காணப்படுகிறது. கடந்த இரு நூற்றாண்டுகளாக நிறவேற்றுமை பாராட்டப்படுவது சரியே என்று அமெரிக்க நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கி வந்துள்ளன. 1948 டிசம்பர் 10ஆம் திகதி தான் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் ஒன்றை நிறைவேற்றியது. அப்பிரகடனத்தின் உறுப்புரை – 2 ல் நிறவேற்றுமை பாராட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய பிரகடனம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட அறிவியலின் சிகரத்தைத் தொட்டுவிட்டதாகக் கூறிக் கொள்ளும் மேற்கு நாடுகளில் நிறவேற்றுமையை ஒழிக்க முடியவில்லை. பல்கலைக்கழகங்களில் கூட நிறவெறி காரணமாக நீக்ரோ மாணவர்கள் அடக்குமுறைகளுக்கும், எண்ணற்ற கொடுமைகளுக்கும் இலக்காக்கப்பட்டு வந்தனர். இவற்றின் விளைவாக 1954 மே மாதம் 17ஆம் திகதி பல்கலைக்கழகங்களில் நிறவேற்றுமை கடைப்பிடிக்கப்படுவது மனித சமுதாயக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டதும் நியாயமற்றதும் ஆகும்.' என அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியது.

ஆனால் இஸ்லாம் இந்த நிறவேற்றுமைக்குச் சாவுமணியடித்து பதினைந்து நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. முஸ்லிம்களைப் பொறுத்தவரை கறுப்பரோ, வெள்ளையரோ அல்லது பணக்காரனோ ஏழையோ எத்தகைய வேறுபாடுகளுமின்றி ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது 'ஸலாம்' கூறி கரம் கொடுத்து, ஆரத்தழுவிக் கொள்வது சர்வ சாதாரணமே. இது 1400 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட மகத்தான இஸ்லாமியப் புரட்சியின் விளைவாகும். இத்தகைய மனமாற்றத்தை இஸ்லாம் மக்களிடம் கொண்டு வருவதற்குத் துணையாக இருந்தது அதன் தெய்வீகக் கோட்பாடுகளாகும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின் போது ஆற்றிய உரையில் சமத்துவம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

'மக்களே! உங்கள் இறைவன் ஒருவனே... உங்கள் ஆதித் தந்தையும் ஒருவரே! நீங்கள் அனைவரும் ஆதமின் வழித்தோன்றல்கள் ஆவீர்கள். ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர். அறிந்து கொள்ளுங்கள் ஓர் அரபியருக்கு அரபியல்லாதவர் மீதோ... அரபியரல்லாதவருக்கு ஓர் அரபியர் மீதோ... சிவப்பு நிறத்தவருக்கு கறுப்பு நிறத்தவர் மீதோ... கறுப்பு நிறத்தவருக்கு சிவப்பு நிறத்தவர் மீதோ இறையச்சத்தைக் கொண்டல்லாது வேறெந்த வழியிலும் மேன்மையோ சிறப்போ கிடையாது. நிச்சயமாக உங்களில் மேன்மையானவர் யாரெனில் அல்லாஹ்வின் மீது அதிக அச்சம் உடையவராவார்'.

முஹம்மது (ஸல்) அவர்களது இறுதியுரையானது, மனித உரிமைப் பிரகடனம் என்று கூறும் அளவுக்கு அதன் கருத்துக்கள் மனித உரிமைகளுக்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளன. அந்த உரையானது முஸ்லிம்களது எழுச்சிக்கும், வெற்றிக்கும் வழி கோலுவதாக அமைந்தது. முஸ்லிம்களது வாழ்க்கையில் செயல் வடிவம் பெற்று இஸ்லாத்தின் வேகமான வளர்ச்சிக்கும் வித்திட்டது.

இஸ்லாத்தை தழுவிய பிலால் (ரலி) அவர்கள் ஒரு கறுப்பு நிற நீக்ரோ அடிமையாவார். ஆனால் அவர் எப்போது இஸ்லாத்தைத் தழுவினாரோ அப்பொழுதே அவர் அரேபியாவில் உயர்குலமாகக் கருதப்படும் குறைஷிக் குலத்தவரின் அந்தஸ்த்துக்கு உயர்ந்துவிட்டார்.

தொழுகைக்கு அழைப்புவிடும் முதலாமவராக அவர் நியமிக்கப்பட்டு கண்ணியப்படுத்தப்பட்டார். மேலும் முஹம்மத் (ஸல்) அவர்களின் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டார். இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாவான உமர் (ரலி) அவர்கள் கூட பிலால் (ரலி) அவர்களை 'யா செய்யிதீ' என்னுடைய தலைவரே' என்று அன்புடன் அழைக்கும் அளவுக்கு இஸ்லாம் அவரை உயர்த்திவிட்டது.

இத்தகைய வேற்றுமைகளை வேரறுத்த இஸ்லாத்தின் கொள்கைகளால் கவரப்பட்ட இந்தியாவின் 'கவிக்குயில்' எனப் போற்றப்பட்ட சரோஜினி நாயுடு அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். 'மனிதத்துவத்தைப் போதித்து நடைமுறைப்படுத்திய முதல் மார்க்கம் இஸ்லாம் தான். பள்ளிவாசலின் மினாராவிலிருந்து தொழுகைக்காக விடுக்கப்படும் அழைப்பு நாளெல்லாம் ஐவேளையும் வணங்குவதற்காக முஸ்லிம்களை ஒன்று திரட்டுகிறது. அப்பொழுது நாட்டுப்புறத்து விவசாயியையும் நாடாளும் மன்னனும் முழந்தாளிலிருந்து 'அல்லாஹ் ஒருவனே.. அனைத்துக்கும் பெரியவன்' என்று பிரகடனம் செய்கின்றனர். இங்கு உண்மையான ஜனநாயகம் உயிர் பெற்றுத் திகழ்வதை பார்க்கிறேன். உண்மையான சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தும் இஸ்லாமும் அதன் போதனைகள் என்னைக் கவர்ந்துவிட்டன.

இஸ்லாமானது இன, மத, மொழி, நிற, வர்க்க வேறுபாடுகளைக் களைந்து பாவகரமான தீமைகளிலிருந்து பாதுகாப்பதில் வெற்றி கொண்டுள்ளது. இவ்வுயரிய சமத்துவ உணர்வுடைய மக்களை உருவாக்கியமைக்கு இறை கட்டளையும், இறை தூதரின் உயரிய போதனைகளும், வழிமுறைகளுமே காரணமாகும்.

யாழ் அஸீம்...

# வெட்கம்; மானம் காக்கும் கேடயம்



மனித உடலில் வெளிரங்கமான சில பகுதிகள் இருப்பது போன்று அந்தரங்கமான சில பகுதிகளும் உண்டு. அந்தரங்கமான விடயங்களை நாம் எப்படி வெளிப்படுத்த மாட்டோமோ, அவ்வாறே அந்தரங்கமான பகுதிகளையும் நாம் வெளிப்படுத்தக்கூடாது. அவைகளை மறைத்து வைப்பதுதான் மானம். அவற்றை வெளிப்படுத்துவது அவமானம். மானம் காப்பதும் இறைநம்பிக்கையின் ஒரு அங்கமாகவே சேர்க்கப்படுகிறது. மானத்தை காக்கும் ஒரு கேடயம் தான் வெட்கம். மானத்தை காக்கும் ஒரு பொக்கிஷம் தான் ஆடை.

வெட்கத்தன்மைதான் மறைவிடங்களை மறைப்பதற்கு தூண்டுகோலாக அமைகிறது. மறைவிடங்களை வெளிப்படுத்துவது வெட்கமற்ற தன்மையின் வெளிப்பாடு. மானம் காப்பதும், மறைவிடங்களை மறைப்பதும் வெட்கத்தின் அடையாளமாகும்.

'நாணமும் இறைநம்பிக்கையின் ஒரு கிளைதான்' என்றும் (ஆதாரம்: முஸ்லிம், புஹாரி) 'அன்சாரிகளைச் சேர்ந்த ஒருவர், தம் சகோதரர் (அதிகம்) வெட்கப்படுவதைக் கண்டித்துக் கொண்டிருந்த போது அவ்வழியே நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். உடனே, 'அவரை(க் கண்டிக்காதீர்கள்) விட்டுவிடுங்கள். ஏனெனில், நிச்சயமாக வெட்கம் இறைநம்பிக்கையின் ஓரம்சமாகும்' எனவும் (ஆதாரம்: புஹாரி) நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்

ஒருவர் வெட்கப்படுவது நல்ல செயல்தான். வெட்கத்தை ஆடையாக அணிந்தவரிடம் மக்கள் குறை காணவோ, குறை கூறவோ முடியாது. அது மனித வாழ்வின் உயிர்மூச்சு போன்றது. வெட்கமுள்ளவன் நல்ல மனிதனாக வாழ்வான். வெட்கம் கெட்டவன் மிருகமாகவும், பாவியாகவும் மாறிவிடுகிறான். வெட்கத்தால் நன்மை மட்டுமே விளையும். வெட்கம் தவறிவிட்டால், கண்டதும் செய்ய நேரிடும். வெட்கம் ஒரு அருங்குணம். அது நன்மையைத் தூண்டும். வெட்கமின்மை ஒரு துர்குணம். அது தீமையைத் தூண்டும்.

அதனால் தான் நபி(ஸல்) அவர்கள் 'வெட்கம் இறைநம்பிக்கையைச் சார்ந்தது. இறைநம்பிக்கை சொர்க்கத்தை நல்கும். வெட்கமற்ற தன்மை முரட்டு சுபாவமாகும். முரட்டு சுபாவம் நரகத்தை நல்கும் எனக் கூறினார்கள்'. (ஆதாரம்: அஹ்மது)

மேலும் 'ஒவ்வொரு மார்க்கத்திலும் ஒரு சிறந்த நற்குணம் உண்டு. இஸ்லாத்தின் சிறந்த குணம் வெட்கம் ஆகும்' என்றும் (ஆதாரம்: இப்னுமாஜா) 'வெட்கமும், இறைநம்பிக்கையும் இணைபிரியாத இரு அம்சங்கள். அவ்விரண்டில் ஒன்று விலகினால் மற்றொன்றும் விலகிவிடும்' என்றும் (ஆதாரம்: பைஹகீ) அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

மறைவிடங்களை வெளிப்படுத்துவது இறை நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது. மறைவிடங்களை மறைப்பது இறைநம்பிக்கையைச் சார்ந்தது. இறை நம்பிக்கையாளர்கள் தங்களது வெட்கத்தலங்களை வெளிப்படுத்தமாட்டார்கள். மறைத்து வாழ்வார்கள். வெட்கத்தலங்களை வெளிப்படுத்துவது மானக்கேடான காரியம் என்று அல்லாஹ் அல் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

'(நம்பிக்கையில்லாத) அவர்கள் மானக்கேடான காரியத்தைச் செய்யும்போது 'எங்கள் முன்னோர்களை இப்படித்தான் கண்டோம். அல்லாஹ்வே இதை எங்களுக்குக் கட்டளையிட்டான்' என்று கூறுகின்றனர். அல்லாஹ் வெட்கக்கேடானதை ஏவமாட்டான். நீங்கள் அறியாதவற்றை இறைவனின் மீது இட்டுக்கட்டிக் கூறுகிறீர்களா?' என்று கேட்பீராக'. (7:28)

ஆடை என்பது இறைவன் மனிதகுலத்திற்கு வழங்கிய மகத்தான ஒரு அருட்கொடையாகும். மனித இனம் தவிர வேறெந்த இனமும் ஆடை அணிவதில்லை. நாம் அணியும் ஆடை நமது மறைவிடங்களை மறைத்து, மானம் காக்க வேண்டும். மானம் பறிபோகக்கூடாது.

எனவே ஆண்களும், பெண்களும் தமது வெட்கத்தலங்களை மறைப்பது ஒழுக்கம் சார்ந்த விஷயம் மட்டுமல்ல. இறைநம்பிக்கை சார்ந்த விஷயமாகவும் பார்க்கப்படுகிறது. இதுவும் இறை நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒரு களமாக அமைந்துள்ளது. உண்மையான வெற்றி இதில் தான் உள்ளது.

அபூ முஷ்ரா...

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# செல்வம் பெருகவும் ஆயுள் நீடிக்கவும்...

ஒரு தடவை அபூஹுறைரா (ரழி) அவர்கள், ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'என்னிடமிருந்து அன்பான கவனிப்பை பெற அதிகம் உரிமையுடையவர் யார்?' என்று வினவ, அதற்கு நபியவர்கள் 'உமது தாயார்' என்றார்கள். அதற்கு அடுத்து அதிகம் உரிமையுடையவர் யார்? என அம்மனிதர் கேட்க, அதற்கும் நபியவர்கள் 'உமது தாயார்' என்றே பதிலளித்தார்கள். அதற்கு அடுத்து அதிகம் உரிமையுடையவர் யார்? என்று அம்மனிதர் மீண்டும் வினவ, அதற்கும் 'உமது தாயார்' என்று பதிலளித்த நபி(ஸல்) அவர்கள், அம்மனிதர் நான்காவது தடவையாகக் கேட்டபோதுதான் 'உமது தகப்பனார்' என அன்னார் பதிலளித்தார்கள். கடைசியாக அம்மனிதர் கேட்ட போது 'உமது நெருங்கிய உறவினர்கள்' என்று நபியவர்கள் பதிலளித்தார்கள்.

(ஆதாரம்: அல் ஹதீஸ்)

அபூபக்கர் (ரழி) அவர்களின் மகளான அஸ்மா அவருடைய தாயார் இணைவைப்பாளராவார். நபியவர்களுக்கும் குறைஷிகளுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டபோது, அந்த அம்மையார் தமது மகள் அஸ்மாவைக் காண வந்தார். அப்போது அஸ்மா நபி (ஸல்) அவர்களிடம் வந்து 'எனது தாயார் இஸ்லாத்தை இழிவுபடுத்தியவர். இப்போது அவர் என்னைக் காண வந்துள்ளார். நான் அவரிடத்தில் அன்பைக் காட்டலாமா? அவரை அன்புடன் நடத்தலாமா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம் அப்படியே செய்' என பதிலளித்தார்கள்.

(ஆதாரம்: அல் ஹதீஸ்)

'யார் தமது செல்வம் பெருக வேண்டும் என்றும் ஆயுள் நீடிக்கவேண்டும் என்றும் ஆசைப்படுகின்றாரோ அவர் தமது உறவினர்களை நல்லவிதமாக நடத்தட்டும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: அல் ஹதீஸ்)

அப்துல்லா பின் அபூ அவ்ஃபா (ரழி) அவர்கள், 'உறவினர்களுடனான பிணைப்பை அறுத்துக் கொள்பவர்கள் மீது அல்லாஹ்வின் கருணை இறங்காது' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

(ஆதாரம்: அல் ஹதீஸ்)

மற்றொரு தடவை அனஸ் (ரழி) அவர்கள், 'எனது உயிர் யார் கையில் இருக்கிறதோ அவர் மீது ஆணையாக! தான் விரும்புவதை தன் சகோதரனுக்காகவும் விரும்பாத வரை ஒரு மனிதன் ஈமான் கொண்டவனாக ஆக முடியாது.'

(ஆதாரம்: நபிமொழி)

'அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் உறுதியாகச் சொல்கிறேன்' அவன் ஈமான் கொள்ள முடியாது' என்று நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை சொன்னார்கள். யாரைப் பற்றி நபியவர்கள் சொன்னார்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் 'எவனுடைய புண்படுத்தக்கூடிய நடத்தையால் அவனுடைய அண்டை வீட்டுக்காரர் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறாரோ அவன்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: அல் ஹதீஸ்)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அறிவிக்கிறார்கள். 'தம்முடைய நண்பருக்கு சிறந்த நண்பராக எவர் இருக்கிறாரோ அவரே அல்லாஹ்வின் மதிப்பீட்டில் சிறந்த நண்பராவார். மேலும் தம்முடைய அண்டை வீட்டாருக்கு எவர் சிறந்த அண்டை வீட்டுக்காரராக இருக்கிறாரோ அவரே அல்லாஹ்வின் மதிப்பீட்டில் சிறந்த அண்டை வீட்டுக்காரராவார்'

பெற்றோரிடமும் உறவினர்களிடமும் மிகுந்த அன்பு செலுத்துவதை இஸ்லாம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. மனித உறவுகள் அனைத்திற்கும் இதுவே அடித்தளமாக அமைந்துள்ளது.

தொகுப்பு: அபூமுஜாஹித்...

# வதந்தி: ஓர் இஸ்லாமிய நோக்கு

இன்றைய நவீன காலத்தில் தகவல் தொடர்பு சாதனங்களால் உண்மையை விட உண்மைக்கு புறம்பான வதந்திகள்தான் அதிகம் பரப்புரை செய்யப்படுகிறது. வதந்திகளை நம்பாமலும் பரப்பாமலும் வாழ்வதே அண்ணல் நபி(ஸல்) அவர்களின் அறிவுரையாகும்.

"முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக்கொள்ளுங்கள். ஏனெனில், நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும். (பிறர் குறைகளை) நீங்கள் துருவித்துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். அன்றியும் உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம்" (49:12) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது.

இவ்வசனத்தின் ஊடாக அல்லாஹ் மூன்று முக்கிய விடயங்களைப் பட்டியலிட்டுள்ளான். அவைகளாவன, 1) ஊகம், 2) துருவித்துருவி ஆராய்தல், 3) புறம். இம்மூன்று விடயங்களிலும் நன்மையை விடவும் பாவமே மிகைத்து நிற்கும். இந்த மூன்று விடயங்களும் ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையவையாக உள்ளன.



ஊகம் என்பது உறுதிப்படுத்தாத வதந்தியாகும். வதந்தியை துருவித்துருவி ஆராயும் போது பிறர் மீது புறம் பேசக்கூடிய நிலைக்கு தள்ளிவிடும். வதந்தியால் பரவக்கூடிய செய்தியால் நன்மையை விட தீங்குகளே அதிகம் ஏற்படும். எனவே, வதந்தியை பாவங்களின் பட்டியலில் சேர்த்துவிட்டு அதிலிருந்து முஸ்லிம்கள் முற்றாக விலகி நிற்க வேண்டும் என இஸ்லாம் உத்தரவு விட்டிருக்கிறது.

"முஃமின்களே! தீயவன் எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அதைத் தீர விசாரித்துக் கொள்ளுங்கள். (இல்லையேல்) அறியாமையினால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம். பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப்படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்" (அல் குர்ஆன் 49:6).

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ஸக்காத் நிதியை வசூலிப்பதற்காக வலீத் பின் உக்பா (ரழி) அவர்களை பனீமுஸ்தலிக் கோத்திரத்தாரிடம் அனுப்பி வைத்தார்கள். இவருக்கும் அந்த கோத்திரத்தாருக்கும் இஸ்லாம் வரும் முன் கொலையொன்று சம்பந்தமான பகை உணர்வு இருந்து வந்தது. இஸ்லாத்திற்கு வந்தபின் அந்த பகை மறைந்து போனது. வலீத் பின் உக்பா (ரழி) அவர்கள் வருகை புரியும் செய்தியறிந்து, அக்கோத்திரத்தார் அவரை வரவேற்பதற்காக பெரும் படையைத் திரட்டி புடைசூழ ஊரின் எல்லையில் குழுமியிருந்தார்கள்.

இதை கண்ட வலீத் பின் உக்பா (ரலி) அவர்கள் உண்மை என்னவென்று உறுதிப்படுத்தாமல் பழைய பகை உணர்வை மனதில் வைத்து நம்மை தீர்த்து கட்ட இவர்கள் ஒன்று குழுமியிருக்கிறார்கள் என மனதில் எண்ணியபடி வந்த வழியை நோக்கி நபி (ஸல்) அவர்களிடம் திரும்பிவிட்டார்கள். மேலும் அந்த கோத்திரத்தார் குறித்து தம் எண்ண அடிப்படையில் பின்வரும் சில வதந்திகளை பரப்பி விடுகிறார்கள்.

1) அவர்கள் இஸ்லாத்திலிருந்து வெளியேறி விட்டார்கள், 2) சக்காத் நிதியை தர மறுக்கிறார்கள், 3) என்னை கொலை செய்யவும் தயாராகி விட்டார்கள்.

இவ்வதந்திகளை நபி (ஸல்) அவர்கள் கேட்டதும் நம்பவில்லை. நடந்தது உண்மையா? அல்லது வதந்தியா? என்பதை ஆய்வு செய்வதற்காக காலித் பின் வலீத் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு சிறிய படையை அனுப்பி, அவர்களுக்கு தெரியாமல் இரவு நேரத்தில் அந்த ஊருக்குள் நுழையும்படி ஆலோசனை வழங்கினார்கள்.

அந்த ஊரின் எல்லை அருகே படை வந்ததும், காலித் (ரழி) அவர்கள் சில ஒற்றர்களை உளவு பார்க்க அனுப்பி வைத்தார்கள். அது மக்ரிப் தொழுகை நேரமாகும். ஒற்றர்கள் சென்றபோது அந்த கோத்திரத்தார் தொழுகையில் ஆர்வமாக ஈடுபட்டதைக் கண்டார்கள். இச்செய்தியை அறிந்து கொண்ட காலித் (ரழி) அடுத்த நாள் காலையில் அவர்களிடம் சென்று ஸக்காத் நிதியை வசூலித்துக் கொண்டு, நபி (ஸல்) அவர்களிடம் திரும்பிச் சென்று நடந்த உண்மை நிலவரத்தை எடுத்துச் சொன்னார்கள். அப்போது தான் மேற்கூறப்பட்ட (49:6) இறைவசனம் இறங்கியது. உடனே நபி (ஸல்) அவர்கள் "நிதானம் இறைவனின் செயல். அவசரம் ஷைத்தானின் செயல்" என்று கூறினார்கள்.

அம்மார்...



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே கொடுக்கப்பட்ட பந்தியை அவதானித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்குக.**

எனது பெயர் அறுகம்புல். நான் மண்ணில் தழைத்து செழித்து வளர்ந்திருப்பேன். என்னை இலகுவில் யாராலும் அழித்துவிட முடியாது. மழை பெய்தால் எனக்கு மிக மகிழ்ச்சி. நான் பல்கிப் பெருக மழை எனக்கு உதவி புரியும். நான் இந்துக்களின் கோயிலில் புனிதப் பொருளாகக் கருதப்படுவேன். மருந்தாகவும் பயன்படுவேன். நான் வளர்ந்திருக்கும் இடமெல்லாம் பச்சைப்பசேல் என காட்சியளிக்கும். கண்ணுக்கு குளிர்ச்சியாகவும் இருப்பேன்.

01. மேலேயுள்ள கட்டுரை எப்பெயரால் அழைக்கப்படும்?

…………………………………………………………………………………………

02. அறுகம்புல் வளர உதவி புரிவது எது?

…………………………………………………………………………………………

03. பந்தியிலுள்ள தன்மை, ஒருமை, பெயர்ச்சொல் ஒன்றினை தருக.

…………………………………………………………………………………………

04. இங்குள்ள இணைமொழியொன்றினை எழுதுக.

…………………………………………………………………………………………

05. ஔடதம் எனும் சொல்லுக்குரிய ஒத்த கருத்தினை பந்தியிலிருந்து எழுதுக.

…………………………………………………………………………………………

06. பந்தியிலுள்ள சினைப்பெயர் ஒன்றினைத் தெரிந்து எழுதுக.

…………………………………………………………………………………………

**II. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

07. இரக்கப் போனாலும் …………………………………………………….. போ

08. முற்பகல் செய்யின் பிற்பகல் …………………………………………………….

09. சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.
i. தொழிலாளி, தொளிலாளி ii. முயர்ச்சி, முயற்சி iii. வறுமை, வருமை

10. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
i. போட்டிகள் / ஒருமுறை / ஒலிம்பிக் / நடைபெறுகின்றன / ஆண்டுகளுக்கு / நான்கு

…………………………………………………………………………………………

ii. சிறப்பு / நோய்நொடியின்றி / வாழ்தலே / ஆகும்.

…………………………………………………………………………………………

**III.**

11. தொடர்மொழிக்குப் பொருத்தமான ஒரு மொழி தருக.

i. 50 ஆவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா ……………………………..…

ii. அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடமானது ………………………………

12. பிரித்தெழுதுக.
i. பாற்சோறு - …………………………… ii. வெந்நீர் - ………………………..…

13. பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

i. பெரியவரே பக்கத்து கிராமத்துக்கு செல்ல எவ்வளவு நேரமாகும்

…………………………………………………………………………………………

ii. பூந்தோட்டத்தில் மல்லிகை முல்லை ரோசா என்பன வளர்ந்திருந்தன

…………………………………………………………………………………………

14. பனைக்கு ஓலை போல நெல்லிற்கு ………………………………………………….

15. காது குத்துதல் என்ற மரபுத் தொடரின் கருத்தானது ……………………………...

16. எதிர்கருத்து தருக.

i. மாற்றான் - …………………………. ii. ஐயம் - ……………………………...

17. பின்வருவனவற்றின் இளமைப்பெயர் எழுதுக.

i. கீரி - ……………………………… ii. பூனை - …………………………..….

18. பால் போன்ற நிலவு என்பதன் கருத்து யாது?

…………………………………………………………………………………………

**IV.**

19. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

i. I am drinking water - ………………………………………………………..…..

ii. Where are you going? ……………………………………………………….……..

20. பின்வரும் படங்களின் சிங்கள சொற்களை தமிழில் எழுதுக.





i. ……………………………. ii. …………………………………

21. 

இச்சதுரம் செவ்வகமாக மாற வேண்டுமாயின் குறைந்தது எத்தனை கட்டங்கள் சேர்க்க வேண்டும்?

…………………………………………………………

22. 

i. இவ்வுருவிலுள்ள செங்கோணங்கள் எத்தனை?

…………………………………………………………

ii. இதிலுள்ள விரிகோணம் (செங்கோணத்தை விட கூடிய கோணம்) எத்தனை?

…………………………………………………………

23. இவ்வுருவிலுள்ள
i. செவ்வகங்கள் எத்தனை?

………………………………
ii. முக்கோணங்கள் எத்தனை?

…………………………………..



24. ரூபாய் 270.00 வை நான்கு தாள் காசுகளை மட்டும் உபயோகித்து எவ்வாறு கொடுக்கலாம்?

25. கழித்தல்.

| | | |
|---|---|---|
| 0.8 | 0.4 | |
| 0.5 | 0.2 | |
| | | |

26. 

இப்பெட்டியிலுள்ள பூக்களின் 5 மடங்குடன் 10 ஐக் கூட்டி முப்பதை கழித்தால் வருகின்ற விடையை உரோமன் எண்ணில் தருக.

…………………………………………………………..

27. 7749 – 227 = ……………… வருகின்ற விடையை எண் பெயராக எழுதுக.

……………………………………………………………………………………….

28. 250g சீனியும் 5 முட்டைகளும் ரூபாய் 320.00. ஒரு முட்டையின் விலை ரூபாய் 50.00 எனில் 250g சீனி எவ்வளவு ரூபாய்?

……………………………………………………………………………………….

29. நள்ளிரவு 12 மணி 25 நிமிடத்தை நியம நேரமாக தருக.

……………………………………………………………………………………….

**V. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. கவ்வாத்து வெட்டப்படும் பயிர்களில் ஒன்று
i. கத்தரி ii. தேயிலை iii. தக்காளி

31. பழங்களில் இருந்து உடலுக்கு அதிகளவு கிடைப்பது?
i. புரதம் ii. கல்சியம் iii. விற்றமின்கள்

32. தனது முட்டைகளை வேறு பறவையின் கூட்டில் இடும் பறவை எது?
i. கிளி ii. மைனா iii. குயில்

33. அனைத்துமுண்ணி பறவை
i. செண்பகம் ii. காகம் iii. ஆந்தை

34. சாதாரண ஈருருளி தொடர்பான பிழையான கூற்று
i. இதில் இரண்டு பற்சில்லுகள் உள்ளன.
ii. இதில் தடுப்புப் பிரயோகிக்கப்படுவது கைகளால்
iii. இது சூழல் நேயமற்றது.

35. நீர் மிகக் குறைவாக தேவைப்படும் தாவரம்
i. நாகதாளி ii. ரோசா iii. நெல்

36. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
i. கருங்குரங்கு ii. நீலப்புள் iii. கொம்பு ஓணான்

37. மகாவலி கங்கை கடலுடன் சேரும் இடமானது
i. மட்டக்களப்பு ii. திருகோணமலை iii. புத்தளம்

38. அசுத்தமான நீரை பருகுவதனால் ஏற்படாத நோயானது
i. நீரிழிவு ii. செங்கண்மாரி iii. கழிச்சல்

39. மயங்கி விழுந்த ஒருவருக்கு செய்யக்கூடிய முதலுதவி அல்லாதது
i. இறுக்கமான ஆடைகளை தளர்த்தல்
ii. நீர் பருகக் கொடுத்தல்
iii. காற்றோட்டமான இடத்தில் அவரை இருக்கச் செய்தல்

40. இலங்கையில் பரப்பரளவில் மிகச்சிறிய மாவட்டம்
i. கொழும்பு ii. பதுளை iii. கண்டி

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

41. இக்குறியீடு உணர்த்துவது
i. இலங்கை நீர் விநியோக சபை
ii. இலங்கை மின்சார சபை
iii. எரிபொருள் நிரப்பு நிலையம்

42. தீயை அணைக்கப் பயன்படும் வாயுவானது
i. ஒட்சிசன் ii. ஐதரசன் iii. காபனீரொக்சைட்டு

43. எமது நாட்டில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்
i. குமண ii. பின்னவல iii. தெஹிவளை

44. சமாதானத்தின் சின்னமாக கருதப்படுவது
i. வெண்புறா ii. அன்னம் iii. வாத்து

45. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம்
i. இரும்புச் சத்துக் குறைபாடு ii. கல்சியம் குறைபாடு
iii. அயடின் குறைபாடு

46. ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை வட்டமாக சுருட்டிக் கொள்ளும் பிராணியானது
i. அட்டை ii. மரவட்டை iii. மண்புழு

47. நீலச்சாயத்தையும் சிவப்பு சாயத்தையும் சேர்த்தால் கிடைக்கும் நிறமானது
i. ஊதா ii. கருநீலம் iii. கறுப்பு

48. ஒருவர் தமது வதிவிடத்தை உறுதி செய்துகொள்ள செல்ல வேண்டிய இடமானது
i. கிராம அலுவலரிடம் ii. காவல் அதிகாரியிடம்
iii. பிரதேச செயலகத்துக்கு

49. பாரமான உலோகப் பொருட்களை இலகுவாக தூக்க பயன்படும் நுட்ப முறையானது
i. கப்பி ii. நெம்புகோல் iii. மின்காந்த தொழிற்பாடு

50. துருப்பிடித்த ஆணி குத்திய ஒருவருக்கு தாமதிக்காமல் கொடுக்க வேண்டிய ஔடத பானம்
i. கொத்தமல்லி ii. மரமஞ்சள் பானம் iii. வில்வம் பூ பானம்


## இலங்கை வங்கி

### ஏலவிலை கோரல் (IFB)

இலங்கை வங்கியின் 12 கிளைகளுக்குச் சூரிய சக்தி நிகர கணக்கீட்டு அமைப்புக்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

**ஏலவிலை கூறல் இலக்கம். P / PROC / 2023 / 50**

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை வங்கியின் 12 கிளைகளுக்கு சூரிய சக்தி நிகர கணக்கீட்டு அமைப்புக்களை வழங்கி, விநியோகித்து, பொருத்தி, செயற்படுத்தி பராமரிப்பதற்கு ஏலவிலைகூறல்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கிளை | அளவு (kW) |
|---|---|---|
| 1. | தம்புள்ளை | 60 |
| 2. | புத்தளம் | 60 |
| 3. | மல்சிரிபுர | 40 |
| 4. | பதவி பராக்கிரமபுர | 40 |
| 5. | கலேவலை | 40 |
| 6. | கல்நெவ | 30 |
| 7. | கல்கிரியாகம | 40 |
| 8. | மடாட்டுகம | 40 |
| 9. | கலென்பிந்துநுவெவ | 40 |
| 10. | மதவாச்சிய | 40 |
| 11. | பொலொன்நறுவை புதிய நகரம் | 40 |
| 12. | திரப்பனே | 40 |

குறிப்பு : **CEB / LECO, என்பவற்றின் அனுமதிக்கமைய, வங்கிக் கிளைகளும் மின்வலுவும் வேறுபடலாம்.**

(i) இலங்கை பேண்தகு வலு அதிகாரசபையின் (SLSEA) கீழ் சூரியசக்தி அமைப்புக்களை வழங்குதல் தொடர்பில் ஐந்து வருடத்திற்கும் அதிகமாகப் பதியப்பட்டு, இலங்கையில் மொத்தமாக 05MW அல்லது அதற்கும் அதிகமான வலுவை வழங்கக் கூடிய அமைப்புக்களை விநியோகித்து, வழங்கி, பொருத்தி செயற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் இவ் ஏலவிலை கூறலுக்குத் தகுதியுடையவராயிருப்பர்.

(ii) கடந்த மூன்று தொடர் நிதி ஆண்டுகளுக்கான (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022) அல்லது (2020, 2021 மற்றும் 2022) சூரியசக்தி அமைப்புகளை பொருத்துவதில் ஏலவிலை கூறுபவரின் அல்லது ஏலவிலை கூறுபவரின் நிறுவனத்தின் அண்ணளவான வருடாந்தப் பணப் புரள்வானது ரூ. 100.0 மில்லியனாகக் காணப்பட வேண்டியதுடன் தேறிய மதிப்புடன் இலாபமீட்டும் நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

2. இலங்கை அரசாங்கம் அல்லது இலங்கை வங்கி அல்லது சட்டபூர்வமான அரச கூட்டுத்தாபனம் அல்லது சபையினால் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலிலுள்ள ஏலவிலை கூறுபவர்கள் அல்லது நிறுவனங்களின் ஏலவிலை கூறல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. தேசிய போட்டிகர ஏலவிலை நடைமுறைக்கமைய (NCB) ஏலவிலை கூறல்கள் இடம்பெறும்

4. ஆங்கில மொழியிலான ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியையும் அதனுடன் தொடர்புடைய இதர விபரங்களையும் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளத்திலுள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை வேலை நாட்களில் **0900 மணி முதல் 1500 மணி வரை** சமர்ப்பித்தும் திருப்பிச் செலுத்தாக் கட்டணம் **ரூபா 17,410/-** (வரிகளுடன்) செலுத்தியும் பெற்றுக்கொள்ள முடியும். திருப்பிச் செலுத்தாக் கட்டணத்தின் கொடுப்பனவு முறையானது கீழே குறிப்பிடப்பட்டவரினால் அனுமதிக்கப்பட்ட பணவைப்பாகும்.

5. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களானவை இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் பெற்ற **ரூபா 900,000/- (ஒன்பது இலட்சம் ரூபாய்)** பெறுமதியானதும் **2024.02.02**ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியில் வழங்கப்பட்டுள்ள வங்கி உத்தரவாதத்தின் வடிவில் (மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான) வங்கிப் பிணை முறியாக இணைத்து அனுப்புதல் வேண்டும். பிணை முறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கி வரைவு ஏற்றுக் கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்படும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7. நகலுடன் முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" எனும் முகவரியில் உள்ள இலங்கை வங்கியின் 14ஆம் தளத்திலுள்ள பெட்டியில் இடவும்.

| | |
|---|---|
| ஏல விலைகூறல் ஆவணங்கள் விநியோகிக்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் : | 2023.10.05ஆம் திகதி 1500 மணி வரை |
| ஏல விலைக்கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம் : | 0900 மணி 1500 மணி வரை |
| முன்கூட்டிய ஏலவிலை கூறல் கூட்டம் நடைறெும் திகதியும் நேரமும் : | 2023.09.25ஆம் திகதி 1130 மணி க்கு இலங்கை வங்கி தலையைகம் 14ம் தளம் |
| ஏல விலைக்கூறல் முடிவடையும் திகதியும் நேரமும்: | 2023.10.06ஆம் திகதி 1000 மணி |
| ஏல விலைக்கூறல் திறக்கும் திகதியும் நேரமும்: | ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன். 2023.10.06ஆம் திகதி 1000 மணி |
| ஏலவிலை கூறல் செல்லுபடியாகும் காலம் : | 2024.01.06ஆம் திகதி வரை |

மேலதிக விபரங்களுக்கு:

**பிரதான முகாமையாளர்**
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு - 01.
தொலை பேசி: 0112 544310 / 0112 430268 / 0112 204271

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


51. 
இக்குறியீடு குறித்துக் காட்டுவது
i. கர்ப்பிணித் தாயை
ii. வலது குறைந்தவரை
iii. வயது வந்தவரை

52. மின்னல் தாக்கம் ஏற்பட சாத்தியக் கூறாக இருக்கும் செயல்பாடானது
i. திறந்த வெளியில் நிற்றல் ii. வீட்டுக்குள் இருத்தல்
iii. வாகனத்தில் செல்லும் போது

53. இலங்கையில் முதன்முதலாக அமைக்கப்பட்ட குளமானது
i. பசவக்குளம் ii. திசாவாவி iii. கலாவாவி

54. உப்புத்தூள் விரைவாக கரைவது
i. தண்ணீரில் ii. கொதித்து ஆறிய நீரில் iii. வெந்நீரில்

55. ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரம்
i. கொன்றை ii. அலரி iii. முள்முறுக்கு

56. துருத்தியின் பயன்பாடு
i. கொல்லன் கம்மாலையில் ii. வயலில்
iii. சுரங்கத் தொழிலில்

57. 
உருவிலுள்ள பாதம் எந்த பறவையினது?
i. ஆந்தை
ii. கொக்கு
iii. கழுகு

58. சூரியனை சுற்றி வரும் கோள்களில் தன்னைச் சுற்றி வளையத்தைக் கொண்ட கோளானது
i. வியாழன் ii. சனி iii. வெள்ளி

59. வாகனமொன்றினை பின்நோக்கி செலுத்தும் போது எரியும் சமிக்ஞை விளக்கின் நிறமானது
i. மஞ்சள் ii. சிவப்பு iii. வெள்ளை

60. "நீர் ஒரு சிறந்த இயற்கை வளம். அந்த நீரை வீண் விரயம் செய்யாமல் பாதுகாப்போம்" என்ற கருத்து புலப்பட மூன்று வாக்கியங்கள் அமைக்கவும். ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். அத்துடன் எழுவாய் பயனிலை தொடர்பு சரியான பேணப்பட வேண்டும்.

..................................................

..................................................

..................................................


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.09.13
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5236
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,115,384.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 0 1 7 9 5 4

தன நிதானய
தேதி 2023/09/13
சீட்டிழுப்பு இலக்கம் 1266
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,792,409.60
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 16 35 56 67 விஷேட ஆங்கில எழுத்து I
Double Chance இலக்கம் 40357

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3478
சீட்டிழுப்பு திகதி 2023.09.13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,191,605.60
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 17 37 51 70 விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 61176

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1584 13/09/2023
Double Chance 32811
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 407,618,652.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து O சுப்பர் இலக்கம் 26 வெற்றி இலக்கங்கள் 12 17 24 62

லக்கி Lucky 7 லக்கி
திகதி 13.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0062
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 8 3 8 1 5 7
L7 இலக்கம் 3 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,871,802.56

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 545
சீட்டிழுப்பு திகதி 2023-09-13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,575,913.20
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 12 15 24 38 விசேட இலக்கினம் தனுசு


## கடந்த வார (08.09.2023) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

1. 2
2. 3
3. 1
4. 3
5. 1
6. 2
7. 2
8. 3
9. 3
10. 1
11. 1
12. 3
13. 1
14. 2
15. 1
16. 2
17. 1
18. 2
19. 2
20. 3
21. 2
22. 1
23. 3
24. 2
25. 3
26. 1
27. 2
28. 3
29. 2
30. 3
31. 1
32. 2
33. 3
34. 2
35. 3
36. 3
37. 2
38. 1
39. 1
40. 2

# கிரேட் மயின்ட்ஸ் உளவளக் கல்வி நிறுவனத்தின் கல்வி, மேம்பாட்டுக்கு வலு சேர்க்கும் நிகழ்வு

உளவளக் கல்வியானது இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்கு வலு சேர்க்கக் கூடியவை என்று தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். எச். ஏ. சிப்லி தெரிவித்தார்.

கிரேட் மயின்ட்ஸ் உளவளக் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் உளவளம் கல்வி கற்கை நெறியினை பூர்த்தி செய்த பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சான்றிதழ் வழங்குதலும் மற்றும் பல்வேறு திறமைகளைக் கொண்ட ஆளுமைகளை கௌரவிக்கும் நிகழ்வும் கொழும்பு 7 அமைந்துள்ள மேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் கிரேட் மயின்ட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் பஸ்லான் ஏ. காதர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். எச். ஏ. சிப்லி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன் போது கௌரவ அதிதியாக கலந்து கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலியின் "என்னை வாசித்த புத்தகம் பாகம் 11" என்னும் தலைப்பிலான புத்தகம் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் அவரினால் முதல் நூல் சிறப்புப் பிரதிகளும் உளவளக் கல்வியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.


















இதன் போது இலங்கையில் பல் துறைகளில் திறமையைக் காட்டி ஆளுமையைப் பதிவு செய்தவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அதில் பல்கலைக்கழக விரிவுரையார்கள் மாற்றுத் திறனாளிகள், ஊடகவியலாளர் என்ற பல பிரிவுகளில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர்களான அல்தாப்வ் பாரூக் மற்றும் ரபீக் எம். தஹா உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வில் விசேட அம்சமாக பெற்றோர்களுக்கான இலவச முப்பது மணிநேர பாடநெறி, கட்டிளமை பருவத்தினரது உளவியல் பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி, தேர்வுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உளநல பயிற்சித்திட்டம், கட்டிளமை பருவத்தினர்களுக்கான 12 மாத உளவியல் பயிற்சித்திட்டம் ஆகியவற்றில் பங்குபற்றிய பங்குபற்றுனர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் கலாநிதி எஸ். எச். ஏ. சிப்லியின் கலாநிதி பட்டத்தை வாழ்த்தும் முகமான கிரேட் மையின்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக தலைவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

மேலும் இப்பாடநெறிகளின் பிரதான வளவாளர் உளவியல் ஆலோசகர் பஸ்லான் ஏ. காதர் உளவியல் பயிற்சி திட்டங்களின் முக்கியத்துவத்தையும் அதன் அவசியத்தையும் வலுவூட்டும் வகையில் முக்கிய உரையாற்றினார்.

மேலும் கிரேட் மையின்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக தலைவர்களான அல்தாப் பாருக் (BA) , ரபீக் எம். தாஹா (BA) ஆகியோர் நிறுவனத்தின் உயரிய இலக்குகள், பயணிகள் தொடர்பில் தலைமை உரையும் நிர்வாக தலைவர் உரையும் ஆற்றி சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கிரேட் மையின்ட்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விஷேட வழிகாட்டல் நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைத்து வளவாளர்களுக்கும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

நிறுவனத்தின் மாணவர்கள் மூலம் தற்கொலை தடுப்பு, சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு, போதைபொருள் பாவனை, போலி கல்வி நிறுவனங்களின் அபாயம், கிரேட் மயின்ட்ஸ் நிறுவனம் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்கள், சமூக வலைதளங்களும் இளையோரும் போன்ற தலைப்புக்களில் மேடையேற்றப்பட்ட நிகழ்வுகள் கருத்துமிக்கதாகவும், வரவேற்பையும் பெற்றது.

## கிரேட் மையின்ட்ஸ் நிறுவனத்தின் செயற்திட்டங்கள்

இலங்கையில் இயங்கிவரும் முன்னணி சமூக மேம்பாட்டு அமைப்புக்களில் ஒன்று கிரேட் மைன்ட்ஸ் நிறுவனம் ஆகும். அனைத்து துறைகளிலும் கல்வியும் விழிப்புணர்வும் வழங்குவதனூடாக சமூக மேம்பாடு எனும் உயரிய இலக்குடன் செயல்படும் இந்நிறுவனம் பல ஆண்டுகள் கடந்து பல்லாயிரம் தனிநபர்கள் வலுப்படுத்திய பெருமையுடன் நிலைத்திருக்கும் ஓர் அமைப்பாகும். இது கல்வி, உளநலம், மருத்துவம், வியாபாரம், ஊடகம், தொழில் திறன்கள் போன்ற பல துறைகளில் பலதரப்பட்ட மக்களை அறிவு, விழிப்புணர்வூட்டி வருகின்றன. குறிப்பாக குடும்ப உளவளத்துணை பாடநெறிகள், போதைப் பொருள் தடுப்பு உளவளத்துணை பயிற்சிநெறிகள், தற்கொலை தடுப்பு செயற்திட்டங்கள், உளவியல் ஆலோசனை சிகிச்சை முறைகளுக்கான கற்கை நெறிகள், சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வுகள், ஆய்வு முறையியல் பயிற்சிகள், வியாபார நுட்பங்கள், மருத்துவ விழிப்புணர்வு நிகழ்வுகள், உயர் கல்வி வழிகாட்டல்கள், போட்டிக் பயிற்சிகள், அழகியல் பயிற்சிகள், பரீட்சை கருத்தரங்குகள், பாடசாலை நிகழ்ச்சிகள் என பல செயற்திட்டங்கள் தேசிய, சர்வதேச விரிவுரையாளர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மாணவர் உளவியல் பயி'ற்சி திட்டம் தொடர்பான அறிமுகம் (GROWTH MINDS 12 MONTHS PSYCHOLOGICAL WORKSHOP FOR TEENAGERS)

கொவிட் 19 நெருக்கடி காலப்பகுதியில் மாணவர்களது வாழ்க்கை செயற்பாடுகளில் ஏற்பட்ட உள நெருக்கீட்டை முகாமைசெய்யவும் இப்பருவத்தினருக்கு தேவையான உளவியல் அறிவை வழங்கும் நோக்கிலும் வடிவமைக்கப்பட்ட இப்பாடநெறில் வீட்டில் இருந்தே உளநல பயிற்சி எனும் நிறுவனத்தின் பயிற்சி வடிவமைப்பின் அடிப்படையில் உளவியல் ஆலோசகர் பஸ்லான் ஏ காதர் இன் பூரண தலைமையில் நடைபெற்றது.

மேலும் இப்பாடநெறியில் மாணவர்களது இயல்புக்கு ஏற்ப பலதரப்பட்ட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை பலரது வரவேற்பையும் பெற்றன.



- வாராந்த வழிகாட்டல் நிகழ்வுகள்
- அதிகாலை உடற்பயிற்சி செயற்பாடுகள்
- புத்தக வாசிப்பு செயற்பாடுகள்
- புத்தக விமர்சனக் கட்டுரை
- விழிப்புணர்வு சித்திர போட்டிகள்
- "இளம் குரல்'' மாணவர்களது பேச்சு நிகழ்ச்சி, சிறுவர் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வுகள்
- போட்டி நிகழ்ச்சிகள்
- அன்றாட வாழ்க்கையொழுங்குக்கான நேரசூசி
- தினசரி தர்மம்
- சுயகற்றல் செயற்பாடுகள்
- கற்றல் முறைமை மதிப்பீடுகள்
- குழு கலந்துரையாடல்கள்
- சுயமுன்னேற்ற விளையாட்டுக்கள்
- தலைமைத்துவ செயற்பாடுகள்
- பொருளாதார நெருக்கடி தொடர்பான சமூக வலைத்தள சுவரொட்டி வெளியீடு
- ஆன்மீக கலந்துரையாடல்கள்

போன்ற பல செயற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்தி பல மாணவர்களது வாழ்க்கை முன்னேற்றத்தில் தவிர்க்க முடியாத இடத்தை அடைந்துள்ளது.

### இப்பாடநெறியில் பங்குபற்றும் மாணவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள்

உண்மையில் எனது பல கவலைகளுக்கான சந்தேகங்களுக்கான தீர்வுகளை தீர்த்து தந்த ஒரு பாடநெறி. தெரியாத பல விடயங்களையும் கடினமான பல விடயங்களையும் எளிதான முறையில் அறிய தந்தீர்.

சமூகத்தில் முகம் கொடுக்க தேவையான விடயங்களை கற்றுக் கொண்டேன்.

இந்தப் பாடநெறி மிகவும் பயனுள்ளதாகவும் சுவாரசியமாகவும் எமது உள்ளங்களை மகிழ்விக்க கூடியதாகவும் இருந்தது. இதன் மூலம் என்னிடம் இருந்த கெட்ட பழக்கங்களை விட்டுவிட்டு நல்ல பழக்கங்களை செய்யக்கூடிய ஒரு நல்ல மாணவியாக மாறியுள்ளேன்.

எமது செயல்களில் மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு பாடநெறியாகவும் சுவாரஸ்யமானதாகவும் பயனுள்ள பல விடயங்களை கற்றுத்தந்த ஒரு பாடநெறியாகவும் நான் இதனை கருதுகிறேன்.

இந்த வகுப்பிற்கு வரும் முன்னர் என்னிடம் இருந்த பல திறமைகளை நான் வெளிக்காட்டுவதற்கு தவறிவிட்டேன். இப்பாட நெறியில் பங்கு பெறுவதற்கு முன்னர் எனக்கு உளவியல் அறிவு போதுமானதாக இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது நீங்கள் கற்றுத் தந்த அத்தனை விடயங்களினாலும் நான் உளவியல் அறிவைப் பெற்றுக் கொண்டேன். இப்பாட நெறியானது என் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பாடநெறியை என் வாழ்வில் மறக்க முடியாத பல அனுபவங்களை எனக்கு கற்றுத் தந்தது.

பாடநெறியின் பிரதான வளவாளர் பஸ்லான் ஏ காதர் தொடர்பான பெற்றோர்களது கருத்துக்கள்,..

பிள்ளைகளின் உணர்வுகளை உணர்ந்து அவர்களுக்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் தெளிவாக இன்றைய காலத்துக்கு பொருத்தமான தலைப்புகளில் குழந்தைகளை சென்றடையும் வகையில் திருப்திகரமாக பாடங்களை நடத்தும் ஒரு சிறந்த வளவாளர் ஆவார்.

பிள்ளைகளுக்கு மட்டும் நிகழ்வுகளை நடத்தாது எனக்கும் நடாத்தியமைக்கு நன்றி. எமது பிள்ளையை எங்களாலே மாற்ற முடியாமல் இருந்த போதும் நீங்கள் மாற்றியமைக்கு உங்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது என நான் நினைக்கின்றேன்.

நான் உங்களிலிருந்து ஒன்றை படித்துக் கொண்டேன். என்னவென்றால் அனைத்து பிள்ளைகளையும் ஒரே பிள்ளை என நினைத்த வண்ணம் நீங்கள் அனைவருடனும் இரக்கமாக நடந்து கொண்டீர்கள்.

**இக்பால் அலி ...**

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## 2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டம்

# ஹோமியோபதி மருத்துவ சபைக்கு அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பதாரர்களை பெயரிடல்

(01) 2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 09 அத்தியாயத்தின் 4ஆம் உப அத்தியாயத்தின் பிரகாரம், ஹோமியோபதி மருத்துவ சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்து கொள்வதற்காக நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு சாதாரண பதிவேட்டில் பதிவு செய்துள்ள ஹோமியோபதி மருத்துவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(02) இது தொடர்பில் 2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 03 அத்தியாயத்தின் உப அத்தியாயம் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ) மற்றும் 50(2) அத்தியாயத்தின் உப அத்தியாயம் 2 (இ) என்பவற்றில், 1997ஆம் ஆண்டின் ஹோமியோபதி சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் ஒழுங்கு விதிகளுக்கு கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(03) 2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 02 அத்தியாயத்தின் 3(ஆ) உப அத்தியாயத்தின் பிரகாரம் ஐந்து (05) ஹோமியோபதி மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(04) 2023ஆம் வருடம் வரை நிலுவை இல்லாமல் வருடாந்தப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள ஹோமியோபதி மருத்துவர்கள், முன்மொழிவாளராக அல்லது வாக்காளராக கவனத்திற் கொள்வதற்கு தகைமை பெறுவர்.

(05) சாதாரண பதிவேட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்று கொழும்பு-10, வண. பத்தேகம விமலவங்ச மாவத்தை, இல. 385, ''சுவசிரிபாய'', சுகாதார அமைச்சின் ஹோமியோபதி மருத்துவ சபை மற்றும் சகல மாவட்டச் செயலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தின் பிரதி மற்றும் மாதிரி நியமனப்பத்திரங்களை சுகாதார அமைச்சின் இணையதளத்தில் அல்லது ஹோமியோபதி மருத்துவ சபையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(06) மாதிரி நியமனப்பத்திரங்களுக்கு அமைவான நியமனப்பத்திரங்களுடன் ஹோமியோபதி நிதியத்திற்கு 500.00 ரூபா செலுத்தியமைக்கான அங்கீகரிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் தெளிவான பிரதியொன்றை இணைத்து 2023-11-01ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்),**
**சுகாதார அமைச்சு, சுதேச மருத்துவப் பிரிவு,**
**இல. 26, 3ஆம் தளம்,**
**ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

(07) மேற்கூறப்பட்ட 06ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களின் சாதாரண பெயர் பதிவேட்டில் பெயர் தொடர்பிலான எதிர்ப்புகள் இருந்தால், 2023-11-01ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன் பதிவுத் தபாலில் 06ஆம் இலக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(08) 1997ஆம் ஆண்டின் ஹோமியோபதி சபையைத் தெரிவு செய்து கொள்ளும் கட்டளையின் 2(2)ஆ அத்தியாயத்தின் பிரகாரம் வாக்கெடுப்பிற்காக வாக்குச்சீட்டை அனுப்ப வேண்டிய முகவரியை கடித உறையின் இடதுபக்க மூலையில் ''முகவரியைக் குறிப்பிடுதல்'' எனக் குறிப்பிட்டு மேற்கூறப்பட்ட 06ஆம் இலக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(09) சாதாரண பதிவேடு மற்றும் இயைபுடைய விபரங்களின் பிரதி சகல பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

(10) மேற்கூறப்பட்ட 6 மற்றும் 7ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் 2023-11-01ஆம் திகதியின் பின் கிடைக்கப்பெறும் வேண்டுகோள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

**செயலாளர்,**
**சுகாதார அமைச்சு,**
**''சுவசிரிபாய'', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**

---

JCT

## ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் லிமிட்டட்

### துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு முழுஉரித்தான ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் லிமிட்டட் ஆனது பின்வருவனவற்றிற்காக தகுதியும் புகழும்வாய்ந்த இலங்கையிலுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

| விலைமனு குறிப்பீடு இல. | விலைமனுவின் பெயர் | விலைமனு பிணையத்தின் பெறுமதி | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (வரிகள் அடங்கலானது) |
|---|---|---|---|
| JCT/DPC /2023/006 | ஜெனிடோரியல் சேவைகளுக்கான விலைமனு | 60,000.00 ரூபா | 2500.00 ரூபா |
| JCT/DPC/2023/007 | பதவிநிலையினருக்கான தேநீர் சேவைகள் | 30,000.00 ரூபா | 2500.00 ரூபா |
| JCT/DPC/2023/008 | பதவிநிலையினருக்கான உணவுக்கூட சேவைகள | 10,000.00 ரூபா | 2500.00 ரூபா |

2023.09.15 ஆம் திகதியிலிருந்து 2023.10.03 ஆம் திகதியன்று வரையும் மு.ப.9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் அலுவலக நேரங்களில் கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள ஜயா கொண்டெயினர் லிமிட்டட்டின் நிதிப்பிரிவினால் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் மேலேயுள்ள மூன்று சேவைகளுக்கும் தனித்தனியாக அல்லது இணைந்து விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம் ஆனால் ஒவ்வொரு விலைமனுவும் தனித்தனியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2023.10.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் லிமிட்டட், திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் என முகவரியிடப்பட்டு ஒன்றில் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஜேசிரி லிமிட்டட்டின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன் விலைமனுக்கள் 2023.10.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்ட பின்னர் விரைவாகவே திறக்கப்படும். இந்த அலுவலகத்தில் 2023.09.26 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கூட்டமொன்றும் தளவிஜயமும் நடைபெறும். விலைமனுவை அடக்கியுள்ள உரித்தான தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'விலைமனுவின் இலக்கம் மற்றும் பெயர் - 2023/2024' ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் லிமிட்டட்,**
**இல.: 69, வோல்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு-15.**

**தொடர்பிலக்கங்கள்: 2540045/6-0701327648**

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

### குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# விலைமனு கோரல்

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் வாகனங்களை கொள்முதல் செய்தல்

### ஒப்பந்த இல.: DIE/PRO-2/2023/14/Vehicles

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு செயற்பாட்டு குத்தகை முறையின் அடிப்படையில் பின்வரும் வாகனங்களை கொள்முதல் செய்வதற்கு தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| வாகன வகை | எண்ணிக்கை | காலப் பகுதி |
|---|---|---|
| டபிள் கெப் | 02 | 24 மாதங்கள் |
| பயணிகள் வேன் (12-15 ஆசனங்கள்) | 02 | 24 மாதங்கள் |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

3. இதற்காக மீளளிக்கப்படாத மூவாயிரத்து ஐந்நூறு ரூபா. (ரூ.3500.00) கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ''சுஹுருபாயா'', 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2023.09.15ஆம் திகதி முதல் 2023.10.05 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

4. இதில் ஆர்வமுள்ள மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை தொலைபேசி இல. 011 - 2101559 க்கு அழைக்க முடியும். விலைமனு ஆவணங்களை எவ்வித கட்டணமும் இன்றி 2023.09.15 ஆம் திகதி முதல் 2023.10.05 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை திணைக்களத்திற்கு வருகைத் தந்தோ அல்லது இணையத்தளத்தில் (www.immigration.lk) பரீட்சிக்க முடியும்.

5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் ''மூலப் பிரதி'' மற்றும் ''இணைப்பிரதி'' என தனித்தனியாக கடித உறையிலிட்டு அந்த உறைகளை ஒரு உறையிலிட்டு முத்திரையிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2023.10.06 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமுகமளித்து 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அதற்காக வைக்கப்படுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் IFB இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனு, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் சமுகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**''சுஹுருபாயா'',**
**05 ஆம் மாடி,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

6. விலைமனுவுக்கு முன் சந்திப்பொன்று 2023.09.26 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ''சுஹுருபாயா'' 05 ஆம் மாடியிலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நடைப்பெறும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**''சுஹுருபாயா'',**
**05 ஆம் மாடி,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

---

# கொழும்பு மாநகர சபை

## கேள்வி/ விலைமனுவுக்கான அழைப்பு

பொருத்தமான மற்றும் தகுதியுடைய கேள்விமனுதாரர்கள்/ விலைமனுதாரர்களிடம் இருந்து சேவைகள்/ பொருட்களின் பின்வரும் வழங்கல்களுக்காக கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இல. | கேள்விமனு இல. | விபரம் | கேள்விமனு தாரர்கள்/ விலைமனுதாரர் களின் தகுதி | மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி/ பிணையின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD18/1939/2023 | மாநகர பணிமனைக்கான வாகன முகாமைத்துவ முறைமைகளை செயற்படுத்தல் | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவம் பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,750.00 | ரூபா 100,000.00 இற்கான கோரும்போது பெறத்தக்க நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 2. | CPD17/0132/2023 | சட்டகத்துடன் D. I Manhole cover இன் வழங்கலுக்கான கேள்விமனு | | ரூபா 5,750.00 | ரூபா 250,000.00 இற்கான கோரும்போது பெறத்தக்க நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 3. | CPD14/2001/2023 | அலுமினியம் ஜன்னல்கள், கதவுகள் மற்றும் வாயில் கதவுகளை பொருத்தல் மற்றும் வழங்கலுக்கான பெறுகை | | ரூபா 5,750.00 | ரூபா 300,000.00 இற்கான கோரும்போது பெறத்தக்க நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 4. | CPD14/2220/2023 | சீமெந்தின் விநியோகம் மற்றும் இறக்குதலுக்கான விலைமனுக்கள் | | ரூபா 5,750.00 | ரூபா 350,000.00 இற்கான கோரும்போது பெறத்தக்க நிபந்தனையற்ற உத்தரவாதம் |

கேள்வி ஆவணத்தை (அசல் மற்றும் நகல்) இரு முறைகள் மூலம் பெற முடியும்.

**முறை 01 – கொ.மா.ச.** இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்தல் (www.colombo.mc.gov.lk)

i. மீளளிக்கப்படாத கேள்வி/ விலைமனு கட்டணத்தை பின்வரும் முறை மூலம் செலுத்த முடியும்.
   a) 167-1-001-6-3169425 என்ற கணக்கு இலக்கத்திற்கு மக்கள் வங்கி, நகர மண்டப கிளைக்கு எந்த ஒரு மக்கள் வங்கி கிளையில் இருந்தும் வரவு வைத்தல்.
   b) வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கொழும்பு நகர எல்லையின் பின்வரும் மாநகர வளவுகளின் கட்டணம் செலுத்தும் கருமபீடங்களில்.
      - **மாவட்ட அலுவலகம் 04**
        இல. 147, ஹை லெவல் வீதி,
        கிருளப்பனை,
        கொழும்பு 06.
      - **வடிகால் மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
        மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. கேள்வி/ விலைமனு ஆவணத்துடன் அசல் பற்றுச்சீட்டு/ ரசீதை இணைப்பது கட்டாயமாகும்.

**முறை 02 –** நகர மண்டப வளவுகளில் இருந்து பெறுதல்

a. நகர மண்டப வளவுகளின் சிறாப்பர் கருமபீடத்திற்கு ஒவ்வொரு கேள்வி/ விலைமனுவுக்காகவும் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்தி 2023.10.04 ஆம் திகதி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து கொழும்பு 07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்களத்தின் அலுவலகத்தில் இருந்து கேள்வி/ விலைமனு ஆவணத்தை பெற முடியும்.

b. கேள்வி/ விலைமனு ஆவணங்கள் 2023 ஒக்டோபர் 04ஆம் திகதி பி.ப. 3.00க்கு பின் வெளியிடப்படும்/ இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

c. கோரும்போது பெறத்தக்க நிபந்தனையற்ற விலைமனு முறி/ பிணையின் பெறுமதி கேள்வி/ விலைமனுக்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2024.03.02ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

d. நகல் பிரதியுடனான முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட அசல் கேள்வி/ விலைமனு ஆவணத்தை 2023 ஒக்டோபர் 05ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 07, நகர மண்டபம், மாநகர செயலாளர் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும்.

e. கேள்வி/ விலைமனு 2023 ஒக்டோபர் 05ஆம் திகதி மு.ப. 10.00க்கு மூடப்படுவதோடு மூடப்படும் நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள்/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன்பின் கேள்விகள்/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்விகள்/ விலைமனுக்கள் மூடப்படும். திறக்கும் நிகழ்வில் பங்கேற்க கேள்விமனுதாரர்கள்/ விமைனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) இடமிருந்து தெளிவுகளை பெறலாம்.

f. கேள்விமனுதாரர்கள்/ விலைமனுதாரர்களில் தமது கேள்விகள்/ விலைமனுக்கள் 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டவர்கள் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்த பதிவாளரிடன் பதிவு செய்த பின் PCA (3) இனை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை**

# உம்மு ஸாவியாவில் ஷுமாஇலுல் முஹம்மதிய்யா பாராயணம்

(ருஸைக் பாரூக்)

நபி (ஸல்) அவர்கள் பிறந்த புனித ரபீஉனில் அவ்வல் மாதத்தை சிறப்பிக்கும் வகையில் ஷாதுலிய்யாதரீக்காவின் தலைமையகமான கொழும்பு– 12 எம்.ஜே.எம் லாபிர் மாவத்தையில் உள்ள உம்மு ஸாவியாவில் வருடாந்தம் நடைபெறும் 'ஷுமாஇலுல் முஹம்மதிய்யா' மஜ்லிஸின் ஆரம்ப வைபவம் நாளை 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை ஸாவியாவின் பிரதம இமாமும் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி முதல்வருமான கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம் அஹ்மத் ஸூபி (மஹ்லரி) தலைமையில் நடைபெறும்.

உம்மு ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து அல் ஹாஜ் எம். மக்கி ஹாஷிமின் வழிகாட்டலின் கீழ் 121வது வருடமாகவும் ஷுமாஇலுல் முஹம்மதிய்யா பாராயாண மஜ்லிஸ் இடம் பெறுவதோடு விளக்கவுரையும் நிகழ்த்தப்படுவதாக பலஸ்தீன முன்னாள் இலங்கைத் தூதுவரும் உம்மு ஸாவியா நிர்வாக சபை சமய விவகார குழுத் தலைவருமான அல் ஹாஜ் பவ்ஸான் அன்வர் தெரிவித்தார்.

நாளை ஆரம்பமாகும் இம்மஜ்லிஸ் தொடர்ந்து இடம்பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8 மணிக்கு தமாம் செய்யப்படும். இலங்கை வானொலி முஸ்லிம் சேவை இங்கு இடம்பெறும் நிகழ்ச்சிகளை நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சீனன்கோட்டை மிர்அதுஷ் சாதுலியா சாவியாவில் புஹாரி மஜ்லிஸ்

பேருவளை விசேட நிருபர்

பேருவளை, சீனன்கோட்டை பிட்டவளை மிர்அதுஷ் சாதுலிய்யா ஸாவியாவில் 91ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி மஜ்லிஸின் ஆரம்பவைபவம் நாளை 16ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஸுபஹ் தொழுகையின் பின் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எம். ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும். 16ஆம் திகதி ஆரம்பமாகும் இம்மஜ்லிஸ் தொடர்ந்து 29 நாட்கள் இடம்பெற்று ஒக்டோபர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் தமாம் செய்யப்படும். 29 நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் இம்மஜ்லிஸில் உள் நாட்டு, வெளிநாட்டு மார்க்க அறிஞர்களினால் விஷேட மார்க்கச் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் தலைமையிலான பள்ளிச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார் தெரிவித்தார்.

# விஞ்ஞானத்துறையில் தையூப் ஹுஸ்னா சிறந்த பெறுபேறு

திறப்பனை தினகரன் நிருபர்



அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞானத்துறையில் கஹட்டகஸ்திகிலிய மு.ம. வித்தியாலய மாணவியான தையூப் ஹுஸ்னா 02ஏ, 01சி பெற்று இசட் புள்ளி 1.8011 உடன் மாவட்ட மட்டத்தில் 35 வது இடத்தை பெற்று மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேற்படி மாணவி எமது பாடசாலைக்குக்கும் ஊருக்கும் மாவட்டத்திற்கும் பெருமையை சேர்த்துள்ளதாக அதிபர் சகாப்தீன் தெரிவித்தார்.

இம்மாணவிக்கு பாடசாலை சமூகமும் பாராட்டு தெரிவித்துள்ளது.

# தொழில்வாய்ப்பினை பெற்றுத்தருவதாக கூறி பண மோசடி செய்தவர் கைது!

## எப்பாவல பகுதியில் சம்பவம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பினை பெற்றுத்தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஒருவரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பணியகத்திற்கு கிடைத்த பல முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த 09ஆம் திகதி மாலை எப்பாவல பகுதியில் வைத்து சந்தேக நபரை பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைதானவர் 46 வயதுடைய எப்பாவல எலியதிவுள்வெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுத் தருவதாக கூறி சந்தேக நபர் இன்னும் சில நபர்களுடன் இணைந்து 25 இலட்சத்திற்கும் அதிகமான பணத்தினை மோசடி செய்துள்ளார் என்பது சந்தேக நபரிடம் நடத்திய மேலதிக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலரை கைது செய்ய பணியகத்தின் அதிகாரிகள் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


# 2022/2023 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக நுழைவு

## விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் (கௌரவ) விஞ்ஞானமாணிப் பட்ட பாடநெறி

**மொழி மூலம்: ஆங்கிலம்**

மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் பொருட்டு, நுண்ணறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பாடநெறிக்கான நுண்ணறிவுப் பரீட்சையை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம். இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் களனி பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களும் கூட்டாக இணைந்து நடத்த தீர்மானித்துள்ளன விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் (கௌரவ) விஞ்ஞான மாணிப் பட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தங்களின் விருப்பப்படி மேலுள்ள ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திற்கு நுண்ணறிவுப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கலாம். அவர்கள் தகுதி பெறும் பல்கலைக்கழகத்தை தேர்ந்தெடுப்பது தொடர்பில் இது எவ்வித செல்வாக்கும் செலுத்தாது.

நுண்ணறிவுப் பரீட்சை தொடர்பான விண்ணப்பிக்கும் முறை, தேவையான ஆவணங்கள் மற்றும் மேலதிக விடயங்கள், என்பவற்றை பின்வரும் இணையத்தள முகவரியினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

www.sjp.ac.lk - ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

கொடுக்கப்பட்ட இணைய தொடர்பினூடாக விண்ணப்பதாரிகள் இணையத்தளத்தில் விண்ணப்பிக்க வேண்டியதுடன் 'ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்', கணக்கிலக்கம் 097-1-001-7-001-4075, மக்கள் வங்கி, கங்கொடவில கிளைக்கு கட்டணம் செலுத்திய 1,500/- ரூபாவிற்கான வங்கி பற்றுச் சீட்டினை ஸ்கேன் செய்து அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதி - அக்டோபர் 08ம் திகதி 2023

நுண்ணறிவுத் தேர்வுக்கான நேர அட்டவணை பின்வருமாறு:

| தேர்வு | திகதி | நேரம் |
|---|---|---|
| எழுத்துத் தேர்வு | 23.10.2023 | மு.ப. 09.00 - மு.ப. 10.00 |
| செயன்முறை தேர்வு | 23.10.2023 | மு.ப. 11.30 - பி.ப. 06.00 |
| | 24.10.2023 | மு.ப. 08.00 - பி.ப. 06.00 |

**பதிவாளர்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில**
**நுகேகொடை**
**11.09.2023**



பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

# இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

## கட்டிடம் ஒன்றை வாடகைக்கு பெறுவதற்கான விலைமனுக் கோரல்

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் இருக்கும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தை நடத்திச் செல்வதற்காக பொருத்தமான கட்டிடம் ஒன்றை மூன்று ஆண்டுகளுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக பகிரங்க விலைமனுக் கோரப்படுகிறது.

**கட்டிடத்தில் இருக்க வேண்டிய அடிப்படை தேவைகள்**

- தேவையான காணி அளவு:- 11,500 சதுர அடி அளவு
- கட்டிடம் இருக்க வேண்டிய இடம்:- செத்சிறிபாய இரண்டாம் கட்டத்திற்கு 05 கிலோமீற்றர் அருகில் (பிரதான வீதிக்கு அருகாமையில்)
- வாகனம் நிறுத்தும் வசதி:- ஒரே தடவையில் 10 வாகனங்கள் வரை பாதுகாப்பாக நிறுத்தி வைக்கும் வசதி
- வேறு பொது வசதிகள்:- மும்முனை மின்சாரம். குழாய் நீர், வளிச் சீராக்கி வசதிகள், கழிப்பறை – 10 அல்லது அதற்கு மேல்
- விசேட தேவையுடையோருக்கு கட்டிடத்திற்குள் பிரவேசிக்க விசேட நுழைவு வசதி.
- இரண்டு மாடிகளுக்கு மேல் உள்ள கட்டிடம் என்றால், மின் தூக்கி வசதி.
- கட்டிடம் பாதுகாப்பு வேலி அல்லது மதில் ஒன்றால் மூடப்பட்டிருத்தல்.
- குத்தகைதாரருக்கு உள்ள கட்டிடத்தின் சிக்கல் இல்லாத உரிமை.
- கட்டிடத்திற்குள் உள்ளக பிரித்தலுக்கான உடன்பாடு.

மேலுள்ள தேவைகள் மற்றும் தகுதியை பூர்த்தி செய்திருக்கும் கட்டிடங்களின் உரிமையாளர்களுக்கு குறித்த கட்டிடத்தை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு வாடகைக்கு விடுவதற்காக விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும் என்பதோடு, அது தொடர்பில் பெறுகை ஆவணங்கள் மற்றும் விபரங்களை கட்டணம் செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

**பெறுகை ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு செலுத்த வேண்டிய கட்டணம்**
மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா – 1,000.00
மீளளிக்கப்படும் கட்டணம் ரூபா – 10,000.00

**விலைமனுக்களை ஏற்பது**
அனைத்து விலைமனுக்களையும் ஏற்பது 2023.10.09 ஆம் திகதி பிற்பகல் 2.00க்கு நிறைவு செய்யப்படுவதோடு, விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது விலைமனுக்கள் மற்றும் குறித்த ஆவணங்களை வெவ்வேறாக இரு உறைகளில் இட்டு முத்திரை இட்டு அந்த உறைகளின் இடது பக்க மேல் மூலையில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என்று வெவ்வேறாக குறிப்பிட்டு, அந்த இரு உறைகளையும் வேறு உறை ஒன்றில் இட்டு முத்திரை இட்டு அந்த உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்காக கட்டிடம் ஒன்றை வாடகைக்கு பெறுதல்'' என்று குறிப்பிட்டு, இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது விலைமனுக்களை ஏற்கும் இறுதி நேரத்திற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனுக்களை திறப்பது:-**
2023.10.09 ஆம் திகதி விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன், விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

**விலைமனு ஆவணங்களை வழங்கல்:-**
2023.09.15 ஆம் திகதி மு.ப. 9.00 தொடக்கம் 2023.10.09 ஆம் திகதி பிற்பகல் 1.00 வரை வாரத்தின் அலுவலக வேலை நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 வரை மேலுள்ள கட்டணத்தை செலுத்திய பின், பெறுகை ஆவணங்கள் மற்றும் குறித்த விபரங்களை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2889446/7 என்ற தொலைபேசி இலக்கத்தில் பணிப்பாளரை (நிர்வாகம்) அழைக்க முடியும்.

**முக்கிய விடயம்:-**
*கட்டிடத்தை வாடகைக்கு பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படும் விலைமனு தொடர்பில் இறுதி முடிவு திணைக்கள பெறுகைக் குழு வசமானது.

**விலைமனுக்களை சமர்ப்பிப்பது மற்றும் விலைமனு ஆவணங்களை பெற வேண்டிய முகவரி:-**

**பெறுகைக் குழு (தலைவர்)**
**இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்**
**இல. 465, கனஹேன**
**பத்தரமுல்லை**



வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு

# வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்களம் மற்றும் தமிழ் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு I (அ) தரத்திற்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல் – 2023

இப் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்கு குறித்த சிங்கள மற்றும் தமிழ் விவரமான அறிவித்தல் 2023.09.15ம் திகதிய இல. 2350 என்ற வர்த்தமானியில் மற்றும் www.psc-nc.gov.lk என்ற வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2023.10.13 ஆகும்.

**ஜி.கே.எஸ். சந்தரலதா**
**செயலாளர்,**
**மாகாண அரச சேவை ஆணைக்குழு.**
**வடமத்திய மாகாணம்.**



புத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கொழும்பு தேசிய நூதனசாலையில் நூதனசாலை நூலகத்திற்காக தீ கட்டுப்பாட்டு முறைமையின் வழங்கல் மற்றும் நிறுவுதல்

(எஞ்சிய வேலைக்கான புதிய ஒப்பந்தம்)

**ஒப்பந்த இல.: DNM/DEV/2023/1**

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு, கொழும்பு தேசிய நூதனசாலையில் நூதனசாலை நூலகத்திற்காக தீ கட்டுப்பாட்டு முறைமையின் வழங்கல் மற்றும் நிறுவலுக்காக (எஞ்சிய வேலைக்கான புதிய ஒப்பந்தம்) (ஒப்பந்த இல.: DNM/DEV/2023/1) பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு 07, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, இல. 53, தேசிய நூதனசாலைகள் திணைக்களம் சார்பில் புத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு (MPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. கொழும்பு 07, கொழும்பு தேசிய நூதனசாலையில் நூதனசாலை நூலகத்திற்காக முன்கூட்டி செயற்படும் நீர் மறைபனி தீ கட்டுப்பாட்டு இறைத்தல் பிரிவு, நீர் வழங்கல் பம்பிகள், விநியோகக் குழாய்கள், குழாய் முனைகள், வலய கட்டுப்பாட்டு வால்வுகள், தீ கண்டறிதல் முறை, மற்ற ஏனைய தொடர்புடைய துணைப்பொருட்களுடன் பனல்களை கொண்டதாக உயர் அழுத்த Water Mist Fire Duppression System இனை குறைபாடு பொறுப்புக் காலத்தில் வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தலை இந்த வேலை கொண்டிருக்கும்.

   இந்த வேலையில், முந்தைய ஒப்பந்தம் ஒன்றின் மூலம் தீ கட்டுப்பாட்டு முறைமையுடன் தொடர்புபட்ட தீ கண்டறிதல் முறைமையின் தீ எதிர்ப்பு கம்பிகளின் பகுதி ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் நீர் மறைபனி தீ பம்பி அறைக்கு தற்போதுள்ள பம்பி அறையில் இருந்து நீர் வழங்கும் குழாய் வைக்கப்பட்டுள்ளது. இந்த வேலையின் நோக்கத்தின் கீழ் புதிதாக முன்மொழியப்பட்ட முறைமைகளுக்கு நீர் கட்டுப்பாட்டு முறைமைகளின் தற்போதுள்ள நிறுவப்பட்ட உருப்படிகளை ஒப்பந்ததாரர் பயன்படுத்தலாம்.

   திட்டத்தின் இடம்: கொழும்பு தேசிய நூதனசாலை
   இல. 53, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07.

   வேலையை பூர்த்தி செய்வதற்கு பொறியியலாளரின் மதிப்பீடு 186 மில்லியன் இலங்கை ரூபா

   ஒட்டுமொத்த வேலைகளையும் பூர்த்தி செய்வதற்கான காலம் 180 நாட்காட்டி தினங்கள்
3. ICTAD/SBD/02 மற்றும் அரச பெறுகை வழிகாட்டல்களின் நிலையான விலைமனு ஆவணத்தின் கீழ் தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் இலங்கையில் செல்லுபடியான வர்த்தகப் பதிவுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   - தீ கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் (FDPS) பிரிவின் கீழ் EM 1 தரத்தில் CIDA பதிவை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் இலங்கையில் தீ கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் கட்டுப்படுத்தலின் வழங்கல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தலில் குறைந்தது ஐந்து (5) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு நிறுவுதல், செயற்பாடு, பராமரிப்பு மற்றும் நவீன தீ பாதுகாப்பின் சரிப்படுத்துதல், கண்டறிதல் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் அது சார்ந்த உபகரணத்திற்கான உபகரண உற்பத்தி வசதிகளில் பயிற்சி பெற்ற தகுதியுடைய தொழில்நுட்ப பணியாளர்களை கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் 100 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு மேல் பெறுமதியான இதனையொத்த பண்பு, சிக்கற்பாட்டின் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தில் செயற்பட்ட அனுபவம்.
   - உபகரணங்களின் உற்பத்தியாளர் இதனையொத்த வகையிலான தீ பாதுகாப்பு, கண்டறிதல் மற்றும் முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு உபகரணங்களை வழங்கியதில் இலங்கையில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் நிரூபிக்கப்பட்ட சேவை பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் பொது ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகைமைக்கு தேவையான தகுதியில் உள்ளடங்குவன;
   - கடந்த ஐந்து (05) ஆண்டு காலத்தில் தீ பாதுகாப்பு, கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்தும் முறைமையின் வழங்கல் மற்றும் நிறுவல் பணிகளை மேற்கொண்டதன் சராசரி ஆண்டு பெறுமதி குறைந்தது 100 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும். (விலைமனுவுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் பிரதிகளின்படி ஆவண அத்தாட்சிகளை சமர்ப்பித்தல் வேண்டும்).
   - திரவச் சொத்துகள் அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தேவை 90 மில்லியன் ரூபா. (விலைமனுவுடன் ஆவண அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தேசிய நூதனசாலைகள் திணைக்களம், C/o; பணிப்பாளர் நாயகம், அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை (வார நாட்களில்) கொழும்பு 07, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, இல. 53, தேசிய நூதனசாலைகள் திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
7. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா முப்பதாயிரத்தை (ரூபா 30,000.00) செலுத்தி 2023.09.16 ஆம் திகதி தொடக்கம் 2023.10.09 ஆம் திகதி வரை (வார நாட்களில்) மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை கொழும்பு 07, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, இல. 53, தேசிய நூதனசாலைகள் திணைக்கள, C/o; பணிப்பாளர் நாயகம், அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 07, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, இல. 53, கொழும்பு தேசிய நூதனசாலை, கேட்போர்கூடத்தில் 2023.09.26 ஆம் திகதி மு.ப. 11.00 க்கு இடம்பெறுவதோடு அதனைத் தொடர்ந்து தளத்தை பரீட்சிப்பது இடம்பெறும்.
9. விலைமனுக்களை 2023.10.09 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், அமைச்சு பெறுகைக் குழு (MPC) C/o; பணிப்பாளர் நாயகம், தேசிய நூதனசாலைகள் திணைக்களம், இல.: 53, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரி இடப்பட்டு மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன் விலைமனுக்களை ஏற்பது நிறைவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2024.01.08 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும் (விலைமனுக்களின் இறுதித் திகதியில் இருந்து 91 நாட்கள்).
11. அனைத்து விலைமனுக்களும் 2024.02.05 ஆம் திகதி வரை செல்லுபடியான 2,790,000.00 ரூபா விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் (விலைமனுக்களின் இறுதித் திகதியில் இருந்து 119 நாட்களுக்கானது)

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு (MPC)**
**புத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சு**

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை**

# ஆர்வத்தை கோருதல்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பதுளை மாவட்டத்திலுள்ள ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் நிகபொத கிராமத்தில் அமைந்துள்ள தெலிபதென்ன தோட்டத்தின் 50 - 100 ஏக்கருக்கிடையிலான அளவைக் கொண்ட காணி கமத்தொழில் வேலைகளுக்காக 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்குள்ளது.

விண்ணப்பப் படிவங்களை 5,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி 2023-09-18ஆம் திகதி முதல் 2023-10-18ஆம் திகதி வரை பின்வரும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை**
**55/75, வொக்ஷோல் ஒழுங்கை,**
**கொழும்பு-02.**

**தியலும தோட்டம்**
**ஊவ மாவிட்டிகம**
**கொஸ்லந்த**

**தொ.பே. 011-4294265**
**மின்னஞ்சல்:** land.jedb@gmail.com

**தலைவர்,**
**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## லங்கா சோல்ட் லிமிடெட்

# வெற்றிடங்கள்

SLS மற்றும் ISO 9001:22000 அங்கீகாரத்தை பெருமையுடன் வைத்திருக்கும், தேசத்தின் முன்னணி உப்பு உற்பத்தியாளரான லங்கா சோல்ட் லிமிடெட் (LSL) பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தனிநபர்களை தேடுகிறது.

விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசைகளாகவும், சிறந்த உடல் மற்றும் உள சுகாதாரத்தை கொண்டவராகவும், தமது பணியை பொறுப்புடன் திறம்பட மேற்கொள்வதற்கு சிறந்த பண்புடையவராகவும் இருத்தல் வேண்டும். பொருத்தமான அபேட்சகர்கள் புகழ்பெற்ற நிறுவனங்களில் இருந்து குறித்த துறைகளில் முன் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். சாத்தியமுடைய எமது குழு உறுப்பினர்களின் அவதானம், முன்முயற்சி மற்றும் அறிவுத்திறனை நாம் மதிக்கிறோம்.

## உதவி பொது முகாமையாளர் - பொறியியல் மற்றும் பராமரிப்பு HM 1–3

**தொழில் விபரம்/ முக்கிய பொறுப்பு பரப்புகள்:**

துறைக்கு அதிகாரபூர்வ தலைமையை வழங்குவதாக, பொறியியல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளை தடையின்றி நிறைவேற்ற வசதி அளிக்கும் வகையில் தெளிவான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்.

**அவதானம் செலுத்தும் முக்கிய பரப்புகள்:**

- பின்வரும் முக்கிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு துறைத் தலைவருடன் (HOD) இணைந்து செயற்படல்.
- பொறியியல் திணைக்களத்தின் தடையற்ற செயற்பாட்டுக்கு வசதி அளித்தல்.
- உற்பத்தி HOD உடன் அனைத்து பழுதுபார்த்தல் மற்றும் தொழில்நுட்ப விடயங்களை கையாள்வதில் கூட்டிணைவு.
- அனைத்து இயந்திர மற்றும் உபகரணத்தின் செயற்பாட்டு தயார்நிலையை நிலைநிறுத்தல்.

**தேவையான தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயந்திர பொறியியல் அல்லது மின்சார பொறியியல் துறையில் பட்டம் அல்லது அதனையொத்த ஒரு தகைமை

**மற்றும்**

IESL அல்லது அதற்கு இணையானவை போன்ற அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டய பொறியியல் அந்தஸ்துடன், தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச நிறுவனங்கள், அரசுக்கு சொந்தமான கூட்டுத்தாபனங்கள், சபைகள் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனங்களுடன் பணியாற்றிய நிரூபிக்கப்பட்ட தளப்பதிவை கொண்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது பத்து ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளுடன் முகாமைத்துவ பதவி ஒன்றில் (MM 1-3 பிரிவு) குறைந்தது ஐந்து ஆண்டுகள் வெற்றிகரமான சேவை.

**மற்றும்**

நிறுவன இலக்குகளை அடைவதற்கு பலதரப்பட்ட குழுக்கள் மற்றும் பொறியியல் திட்டங்களை நிர்வகித்தல் மற்றும் ஏனைய வளங்களை வழிநடத்திய மற்றும் நிர்வகித்த நிரூபிக்கப்பட்ட திறன் ஒன்று.

**இடம்** : லங்கா சோல்ட் லிமிடெட் தலைமை அலுவலகம் - ஹம்பாந்தோட்டை

**சம்பள அளவு** : HM 1-3 - re' [86,865 + 15× 2,270 = 120,915]

**சம்பள புள்ளி** : ரூபா 86865/-

வயதெல்லை: தகுதியான வயது அளவு 30 மற்றும் 55 வயதுக்கு இடையே. எவ்வாறாயினும் அரச ஊழியர்கள், அரச கூட்டுத்தாபன பணியாளர்கள், சபை உறுப்பினர்கள் அல்லது உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

பெயர்கள் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் முகவரிகளுடன் முழுமையான சுயவிபரக்கோவை மற்றும் விண்ணப்பத்தை 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது மற்றும் lankasalt@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பிரதி ஒன்றை அனுப்பி சமர்ப்பிக்கவும்.

இந்த பதவி நிலையை நிரப்புவதற்கு பணிப்பாளர்கள் சபைக்கே அதிகாரம் உள்ளது.

**தலைவர்**
**லங்கா சோல்ட் லிமிடெட்,**
**மஹலேவய,**
**ஹம்பாந்தோட்டை.**

**தொ.: 047-2037305**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## MANAGE SUPPORT SERVICE CONTRACT FOR PORT WIDE DATA NETWORK (PWDN) ON 24/7 BASIS FOR THE YEAR 2023/2024 OF SLPA.

**(Tender File No.: EW/13/EL/2023/PWDN I)**

1. **Manage Support Service Contract for Port Wide Data Network (PWDN) on 24/7 Basis for the year 2023/2024 of SLPA (Tender File No.: EW/13/EL/2023/PWDN I)** என்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென விலைமனுதாரர் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமெனவும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. 2023 செப்டம்பர் 15 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டம்பர் 26 ஆம் திகதியன்று வரையும் (இரு நாட்களும் அடங்கலானது) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-01, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, மின்னியல் மற்றும் இலத்திரனியல் பிரிவின் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்றுக் கொள்ளலாம். அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. 2023 செப்டம்பர் 22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தொழில்நுட்ப நூலகத்தில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடைபெறும்.
6. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பாதுகாப்பான முத்திரையிடப்பட்ட தபாலுறையில் அடக்கப்பட்டு, **"Manage Support Service Contract for Port Wide Data Network (PWDN) on 24/7 Basis for the year 2023/2024 of SLPA. File No.: EW/13/EL/2023/PWDN I"** என்பது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, பிரதான பொறியியலாளர் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) மே/பா., மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளரின் (மின்னியல்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2023 செப்டம்பர் 27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக (விலைமனுக்கோரலின் மூடும் திகதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர்கள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் 60,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. மேலேயுள்ள முகவரியிலிருந்து மின்னியல் மற்றும் இலத்திரனியலுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து தளவிஜயங்களின் வருகை அல்லது வேறேதாவது விபரங்களை பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2483081. தொலைநகல்: 011-2424309)

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை),**
**பிரதான பொறியியலாளர் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) மே/பா.,**
**மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

## குருவிட்ட பிரதேச சபை

# சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி கோரல் – 2024

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்கப்படும்.

**01. கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் திகதி மற்றும் நேரம்: 2023 செப்டெம்பர் 18 முதல் 2023 ஒக்டோபர் 10 பி.ப. 3.00**

**02. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 2023 ஒக்டோபர் 11 மு.ப. 10.00**

**03. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்: 2023 ஒக்டோபர் 11 மு.ப. 10.30 (இவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.)**

கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் பிணை வைப்பிற்காக காசோலைகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் குருவிட்ட பிரதேச சபைக்கு உரியது. சகல கேள்விப் பத்திரங்களும் 2023 ஒக்டோபர் 11 மு.ப. 10.00 இற்கு முன் கிடைத்தல் வேண்டும். அத்துடன் சகல கேள்விப் பத்திரங்களையும் குருவிட்ட பிரதேச சபையின் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் வருகைதந்து அல்லது குருவிட்ட பிரதேச சபையின் செயலாளரிடம் 045-2262276 என்ற தொ.பே. இலக்கத்தின் மூலம் விசாரித்து அறியலாம.

வர்த்தக A கட்டிடத் தொகுதி மாட்டிறைச்சி விற்பனை நிலையம், கிரிஎல்ல மாட்டிறைச்சி விற்பனை நிலையத்திற்காக கேள்விப் படிவத்தை சமர்ப்பிக்கும் போது குருவிட்ட பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அனுமதித்த மாடறுக்கும் நிலையங்களில் மட்டும் இறைச்சி பெற்றுக்கொள்ளும் கேள்விதாரர்களுக்கு மட்டும் விண்ணபிக்க முடிவதுடன், கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்பு அதிகாரப் பிரதேசத்தில் அனுமதித்த மாடறுக்கும் நலையங்களில் இருந்து இறைச்சி பெற்றுக்கொள்ளும் மாடறுக்கும் நிலைய உரிமையாளரிடம் உறுதி செய்த கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதித்த மாடறுக்கும் நிலையங்களிலிருந்து இறைச்சி வழங்கப்படுவதாக கடிதமொன்றை சமர்ப்பிக்காத விண்ணப்தாரிகளுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. மேலும் குருவிட்ட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதித்த மாடறுக்கும் நிலையத்திலிருந்து இறைச்சியைப் பெற்றுக்கொள்வதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை**

| தொ. இல. | சொத்தின் பெயர் | கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூ. | குறைந்த பட்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01. | வர்த்தக A மாட்டிறைச்சிக்கடை | 5000.00 | 5000.00 | 869500.00 |
| 02. | வர்த்தக A ஆடு மற்றும் கோழி இறைச்சிக்கடை | 5000.00 | 5000.00 | 157350.00 |
| 03. | கிரிஎல்ல ஆடு மற்றும் கோழி இறைச்சிக்கடை | 5000.00 | 5000.00 | 73066.00 |
| 04. | கிரிஎல்ல மாட்டிறைச்சிக்கடை | 5000.00 | 5000.00 | 279000.00 |
| 05. | கிரிஎல்ல மீன் கடை | 5000.00 | 5000.00 | 84108.92 |
| 06. | குருவிட்ட வாரச்சந்தை | 5000.00 | 5000.00 | 577000.00 |

2023 செப்டெம்பர் 15ம் திகதி
**குருவிட்ட பிரதேச சபை**

**எஸ்.எச்.ஆர். வீரக்கொடி**
**செயலாளர் மற்றும் அதிகாரம் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை, குருவிட்ட.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# சிறு விளம்பரம்



## மோட்டார் வாகனங்கள்



117

**வேன்கள் விற்பனைக்கு**

57-2355 NISSAN SERENA VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058074



119

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

CP PR-2180 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058077

NW DAE-9967 TATA ACE XPRESS TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058086

SG LK-8009 TATA 713 TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058087



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

NP ABO-3603 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058078

NP BFJ-1344 TVS SCOOTY PEP + MOTOR BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058081

NP BIV-3833 TVS WEGO MOTOR CYCLE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058083



124

**டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு**

U/ R CAT 307 EXCAVATOR அதியுயர் வி லைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்க ட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 058088

அடகு நகை

ஏல/அறுதியாகும் நிலையில் உள்ள தங்க ஆபரணங்களை விற்பனை செய்ய எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஹனா கோல்ட்

076 707 89 69

SL PROMO

# பெறுகை அறிவித்தல்

**வலுசக்தி அமைச்சு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**"கொலன்னாவ CPC விவசாய இரசாயன பொறித்தொகுதிக்கு தூசுகளை பிரித்தெடுக்கும் முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதலுக்கான" விலைக்கோரல்**

**B/31/2023**

"கொலன்னாவ CPC விவசாய இரசாயன பொறித்தொகுதிக்கு தூசுகளை பிரித்தெடுக்கும் முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல்" எனும் ஒப்பந்தத்திற்காக இவ்வாறான வேலைகளில் முன் அனுபவத்தைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ரூ. 848.36 + 2.5% SSCL + 15% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2023-10-05ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

சகல விலைமனுக்களுடனும் 20,000.00 ரூபா தொகைக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023-10-06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5455335 தொலைநகல்: 011-5455424**

**அறிவிப்பு: முகவரி மாற்றம்**
**லங்கா அடிப்படை உரிமைகள் அமைப்பு அலுவலகம்: 7, Dr. எஸ். பிரேமதிரத்தின மாவத்தை, முகலங்கமுவ, சீதுவ. முகவரிக்கு உடனடியாக மாற்றப்பட்டது**

## கொலன்னாவ நகர சபை

### எரிபொருள் விநியோகிக்கும் இயந்திரத்தை (பம்பியை) கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்

கொலன்னாவ நகர சபையின் எரிபொருள் விநியோகிக்கும் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருள் விநியோகிக்கும் இயந்திரத்தை (பம்பியை) கொள்வனவு செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. அதனோடு சம்பந்தப்பட்ட மாதிரிகளை 2023.09.27 பி.ப. 2.00 இற்கு முன் கொலன்னாவ நகர சபையின் வழங்கல்கள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
உங்களது கேள்விப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து 2023.10.02 மு.ப. 10.00 வரை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் 2023.10.02 மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

**செயலாளர்,**
**கொலன்னாவ நகர சபை,**
**2023.09.14**
**011-2572329**

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

## பெறுமதிமிக்க ஆதனங்களுக்கான விலைமனுக்கோரல்

| மாவட்டம் | ஆதனம் | வகை | ஏ. | றூ. | பர். |
|---|---|---|---|---|---|
| காலி | ஹிக்கடுவ, பன்வில, பீல்லபெத்தகொட | வர்த்தக தனிமாடி வீடு | 0 | 0 | 39 |
| குருநாகல் | பலாவிடிய கிராம அலுவலர் பிரிவு, கஹவிடிய, பஹலபிடிய வத்த, பண்டுவஸ்நுவர | வதிவிட வீட்டுடன் காணி | 0 | 1 | 0 |

மேலதிக விபரங்கள் மற்றும் ஆதனங்களை பரீட்சிக்க தயவு செய்து வார நாட்களில் மு.ப.9.00 மணிமுதல் பி.ப.3.00 மணிவரை 011-2035454 தொலைபேசி இலக்கத்தில் 418 மற்றும் 426 ஆகிய நீட்டிப்பு எண்களுக்கு அழைக்கவும் தயவு செய்து விலை கோரிக்கைகளை முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "ஆதனங்களுக்கான கேள்வி மனு" எனக்குறிப்பிட்டு 2023.10.19ஆம் திகதி பி.ப.02 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

எந்தவொரு பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளையிலும் அல்லது www.rdb.lk எனும் வங்கியின் இணையத் தளத்திலும் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**பிரிவுத் தலைவர் - கடன் அறவிடல்**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**தலைமை அலுவலகம்,**
**இல.933, கண்டி வீதி வெதமுல்ல**
**களனி.**

இவ்விலை மனுக் கோரல்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமை வங்கிக்குரியது.

SACEP

## முன்மொழிவுகள் கோரப்படுகின்றன

பிளாஸ்டிக் கழிவுகளைக் குறைத்தலுடன் பிளாஸ்டிக் இல்லாத தெற்காசியாவின் ஆறுகள் மற்றும் கடலுக்கான திட்டத்தினால் இலங்கையில் போட்டி அடிப்படையில் தொகுதி நிதி வழங்குவதற்காக சமூக நிறுவனங்களிடமிருந்தும், அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும், சமூகம் சார்ந்த நிறுவனங்களிடமிருந்தும், விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் மூலம் தற்காலச் சூழலில் மாற்றத்தை இலக்காகக் கொண்டு ஆக்கபூர்வமான படைப்புக்களை பிரதிபலிக்கக்கூடியதும் பிளாஸ்டிக் கழிவுகளை அர்த்தமுள்ள முறையில் தொடர்ச்சியாக குறைக்கக்கூடியதுமான தீர்வுகளைப் பெறமுடியும்.

- ✦ பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகூடிய நிதி: 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்
- ✦ திட்டம் அமுல்ப்படுத்தப்படவேண்டிய காலம்: ஜனவரி 2025 க்குள் முடிக்கப்பட வேண்டும்.
- ✦ கருப்பொருட்கள்: முன்மொழிவுகள் Parley AIR கருப்பொருள்களுள் {தவிர்க்கவும் (Avoid), இடைமறிக்கவும் (Intercept), மறுவடிவமைப்பு (Redesign)} ஒன்றையாவது பிரதிபலிக்க வேண்டும்.
- ✦ முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் காலப்பகுதி: அக்டோபர் 18 2023 வரை

இந்த தொகுதி நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கவும், முன்மொழிவுச் சட்டகங்களை அனுப்பவும், மேலும் தகுதிக்கான நிபந்தனைகளை மீளாய்வு செய்வதற்கும், மேலதிக தகவல்களுக்கும் **www.sacepplease.org** என்ற இணையத்தளத்தை அணுகவும். இலங்கைக்கான PLEASE திட்டத்தின் பிராந்தியத்திற்கான தொகுதி நிதி உலக வங்கியின் நிதியுதவியுடன் தெற்காசியாவின் SACEP திட்டத்தினால அமுல்படுத்தப்படுகிறது.

**Address:**
**South Asia Cooperative Environment Programme,**
**146, 24A Havelock Road, Colombo 05.**

## போதனா வைத்தியசாலை – கராப்பிட்டி

### கேள்வி கோரல்

கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் காணப்படும் கீழ்க்காணும் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு விடயங்களுக்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை கோருவதற்கு வைத்தியசாலை பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இந்த நிர்மாணத்திற்காக சகல கேள்விப் பத்திரங்களும் இரு பிரதிகளுடன் பொறுப்பேற்கப்படும்.

| தொடர் இல. | வேலையின் பெயர் | விண்ணப்ப தாரியின் தகைமைகள் | மீளளிக் கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | மதிப்பிடப் பட்ட அடிப்படை செலவு (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| 1 | அவசர சிகிச்சை பிரிவின் மத்திய வளிச்சீராக்கி அமைப்பை பழுது பாாத்தல் | EM04 | 3500.00 | 178,000.00 | 17.8 |
| 2 | விளையாட்டு மருத்துவ அலகை நிர்மாணித்தல் | C6 & C7 | 3500.00 | 50,000.00 | 5.0 |

01. இதற்காக அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத பிணை வைப்புத் தொகையைச் செலுத்தி வார நாட்களில் 2023.09.08 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. 2023.10.09 மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன், அதற்கு முன்பு கிடைக்குமாறு கேள்விப் பத்திரங்களை பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, கராப்பிட்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேளவிப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகளிக்கலாம்.
04. கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் குறித்த வேலையின் பெயரை மிகத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. எந்தக் கேள்விப் பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

விபரங்களை - 091-2232250, 091-2232176 தொ.பே. இலக்கங்களில் பெற்றுக்கொள்ளாம்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**கராப்பிட்டி, காலி.**
**2023.09.15**

## கண்டி மாநகர சபை

### கேள்வி அறிவித்தல்

### கண்டி மத்திய சந்தையின் 126, 162 மற்றும் 171ஆம் இலக்க கடை அறைகளுக்காக கேள்வி கோரல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான மத்திய சந்தை கடை அறையின் விற்பனை உரிமையை தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதற்காக 2023-10-03ஆம் திகதி மு.ப. 10.45 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள் வாரத்தின் வேலை நாட்களில். அலுவலக நேரங்களில் 2023-10-02ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் 2023-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அவை திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை கண்டி மாநகர கணக்காளர் (வருமானம்) அவர்களிடம் அலுவலக நேரத்தினுள் மாத்திரம் சமுகம் தந்தோ அல்லது 081-2227395 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | இடம் | வியாபாரம் | கடை அறை | கேள்விக் காலம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரிகள் சகிதம்) ரூபா சதம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை ரூபா சதம் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா சதம் | கடை வாடகைத் தொகை (மாதாந்தம்) ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மத்திய சந்தை | ஆட்டிறைச்சிக் கடை | 126 | 02 வருடங்கள் | ரூ. 2,320.00 | ரூ. 50,000.00 | ரூ. 1,210,000.00 | ரூ. 6,000.00 |
| 02 | மத்திய சந்தை | மாட்டிறைச்சிக் கடை | 162 | 02 வருடங்கள் | ரூ. 2,320.00 | ரூ. 250,000.00 | ரூ. 1,998,000.00 | ரூ. 6,000.00 |
| 03 | மத்திய சந்தை | சில்லறை | 171 | 02 வருடங்கள் | ரூ. 2,320.00 | ரூ. 50,000.00 | ரூ. 401,000.00 | ரூ. 6,000.00 |

1) ஏற்றுக்கொள்ளப்படும் கேள்வித் தொகைக்கு புறம்பாக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகளும் சேர்த்து அறவிடப்படும். மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் கடை அறை வாடகையில் திருத்தம் செய்யப்படுவதற்கு இடமுண்டு.
2) கேள்வி வைப்புத் தொகையின் பொருட்டு கண்டி மாநகர சபை சிறாப்பர் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெறப்பட்ட பற்றச்சீட்டை கேள்விப் படிவங்களுடன் இணைத்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3) எந்தவொரு கேள்வி விண்ணப்பத்தையும் அல்லது சகல கேள்வி விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கண்டி மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**2023-09-12ஆம் திகதி**
**கண்டி மாநகர சபை அலுவலகத்தில்.**

**கே.கே.ஜீ.ஐ.டீ.ஜீ. விஜேதிலக்க.**
**மாநகர ஆணையாளர்.**

**Repeat Your ad For Better Offers**

**கல்வி அமைச்சு**
**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

## பெறுகை அறிவித்தல்

### பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்லல்

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் அதன் கீழ் உள்ள தொழில்நுட்ப கல்லூரிகள் 09, கைத்தொழில் கல்லூரிகள் 29 இற்காக தனிப்பட்ட பாதுகாப்புச் சேவை மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், மருதானை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஆனமடுவ தொழில்நுட்பக் கல்லூரிக்கான சுத்திகரிப்புச் சேவையை, நடத்திச் செல்வதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து மாத்திரம் கொழும்பு-10, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் பணிப்பாளர் நாயகத்தினால் 2023.10.09 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கேள்வி இலக்கம் | கேள்வி விபரம் | (கேள்விப் பிணை) (ரூ) | கால எல்லை | பொதுவான வருடாந்த வர்த்தக செலவு (ரூ) | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| DTET/14/07/03/2023 | பாதுகாப்புச் சேவையை நடத்திச் செல்லல் 2023/ 2024 | 502,000.00 | 2023.11.15 முதல் ஒரு வருடத்திற்கு | 60 மி. | 12,500.00 |
| DTET/14/07/04/2023 | சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்லல் 2023/ 2024 | 140,000.00 | 2023.12.15 முதல் ஒரு வருடத்திற்கு | 15 மி. | 3,500.00 |

1. கேள்விப் பிணையை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து சமர்ப்பித்தல் வேண்டும்.
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை மக்கள் வங்கி நகர மத்திய கிளையின் கணக்கு இலக்கம் 176-1001-3-9026228 எனும் கணக்கிற்கு "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், என்ற பெயரில் செலுத்தி 2023.09.15 முதல் 2023.10.05 வரையான காலத்தின் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 இற்கும் இடையில் எந்த நேரத்திலும் பற்றுச்சீட்டினை தொழில்நுட்ப உதவிச் சேவைப் பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன், திணைக்கள வளாகம் மற்றும் ஏனைய வளாகத்தில் பரீட்சித்துப் பார்த்து ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய தெளிவை பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்தல் திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது இணையதளத்தை பரிசீலித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் 2023.10.05 பி.ப. 2.00 இற்கு முடிவடையும்.
5. கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2023.10.09 மு.ப. 10.30 இற்கு முடிவடையும்.
6. எந்த வேளையிலும் காணப்படும் ஒரு கேள்வி அல்லது பல கேள்விகளை அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

**பணிப்பாளர் நாயகம்,**
**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**
**த.பெ. 557, ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

**தொ.பே. இலக்கம் : 011-2327008**
**பெக்ஸ் இலக்கம் : 011-2424977**
**இணையதளம் : www.dtet.gov.lk**

## கல்கமுவ பிரதேச சபை

### பெறுகை அறிவித்தல்

### 2024ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல்

கல்கமுவ பிரதேச சபைக்குரித்தான பின்வரும் ஆதனங்களை 2024ஆம் வருடத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்படிவங்கள் 2023 செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 04ஆம் திகதி வரை வழங்கப்படும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் 2023 ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை மீண்டும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் கேள்விப் படிவங்களை செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ எனும் முகவரிக்கு நேரில் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

கேள்விப் படிவங்கள் 2023 செப்டெம்பர் 11ஆம் திகதி 1.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் மேலதிக விபரங்களை கல்கமுவ பிரதேச சபையின் வருமான மேம்பாட்டு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வியிடுவதற்கு இயைபான ஆதனங்கள் பின்வருமாறாகும்.

| தொ. இல. | ஆதனம் தொடர்பான விபரங்கள் | ஆகக் குறைந்த கேள்வி (ரூபா) | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை 10% (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | கல்கமுவ மாட்டிறைச்சிக் கடை | 696668.00 | 4000.00 | 69666.80 |
| 2. | கல்கமுவ இல. 02 கடல் மீன் தட்டு | 350796.00 | 3000.00 | 35079.60 |
| 3. | கல்கமுவ இல. 03 கடன் மீன் தட்டு | 317711.00 | 3000.00 | 31771.10 |
| 4. | கல்கமுவ வாரச்சந்தை கடல் மீன் தட்டு | 50338.00 | 1500.00 | 5033.80 |
| 5. | எஹெட்டுவெவ சந்தி நன்னீர் மீன் தட்டு | 64310.00 | 2000.00 | 6431.00 |
| 6. | புதிய பஸ் நிலைய பொது மலசலகூடம் | 23731.00 | 1500.00 | 2373.10 |
| 7. | பழைய பஸ் நிலைய பொது மலசலகூடம் | 15762.00 | 1500.00 | 1576.20 |
| 8. | பல்காரிய கட்டிடத்திற்கு அருகிலுள்ள வாகனத் தரிப்பிடம் | 67982.00 | 1500.00 | 6798.20 |
| 9. | நான்நேரி சந்தி கடல் மீன் தட்டு | 72600.00 | 1500.00 | 7260.00 |

**2023-09-14**
**கல்கமுவ பிரதேச சபை அலுவலகத்தில்.**

**ஏ.பீ. நிமல் ரத்நாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**கல்கமுவ.**

# மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக இலங்கை இளையோர் தொடர் வெற்றி



மேற்கிந்திய தீவுகள் 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு எதிரான இரண்டாவது இளையோர் டெஸ்ட் போட்டியில் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரையும் 1–0 என கைப்பற்றியது.

தம்புள்ளையில் நடைபெற்ற இந்த போட்டியின் மூன்றாவது நாளான நேற்று இலங்கை இளையோர் அணிக்கு 79 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 18.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 81 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

அணித் தலைவர் சினெத் ஜயவர்தன அதிரடியாக 14 பந்துகளில் 5 பௌண்டரிகள் 1 சிக்ஸருடன் 30 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்த இளையோர் டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 127 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்நிலையில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 326 ஓட்டங்களை பெற்றது.

மல்ஷ தருப்பதி (70) மற்றும் ருசந்த கமகே (58) அரைச்சதம் பெற்றனர். முதல் இன்னிங்ஸில் 199 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய இளையோர் அணிக்காக ஜோர்டன் ஜோன்சன் (157) சதம் பெற்றபோதும் மற்ற வீரர்கள் சோபிக்கத் தவறினர். இதனால் அந்த அணி 277 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்போது சுழற்பந்து வீச்சாளரான விஷ்வ தௌமிக்க 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு கவீஷ பியுமால் மற்றும் மல்ஷ தருப்பதி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இரு அணிகளுக்கும் இடையலான முதலாவது இளையோர் டெஸ்ட் போட்டி மழையின் இடையூறுக்கு மத்தியில் சமநிலையில் முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் ஹிக்மா வெற்றி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை லக்கி விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மர்ஹூம் ஏ.எம்.எம். றசீன் விளையாட்டு உத்தியோகத்தர் ஞாபகார்த்த மென்பந்து மின்னொளி கிரிக்கெட் சுற்று போட்டியில் நிந்தவூர் ஹிக்மா அணி கிண்ணத்தை வென்றது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு (11) கழகத்தின் தலைவர் எஸ்.எம். அறூஸ் தலைமையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், அனீஸ் மோல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சீ. அனீஸ் என பலரும் கலந்து கொண்டனர். இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று குடியிருப்பு போய்ஸ் அணியினரை எதிர்கொண்ட ஹிக்மா அணியினர் 6 விக்கெட்களால் வெற்றி பெற்றனர். இச்சுற்றுத் தொடரில் தொடர் ஆட்ட நாயகனாகவும் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயனாகவும் ஹிக்மா அணியின் நிக்சி அஹமட் தெரிவு செய்யப்பட்டார்.




ஐ.சி.சி உலகக் கிண்ணம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் நேற்று கொழும்பில் காட்சிக்கு வைக்கப்பட்டபோது பொதுமக்கள் பார்வையிடுவதை காணலாம்.

# பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் மதீஷ ஒப்பந்தம்




இலங்கை அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பதிரண, எதிர்வரும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் ராங்புர் ரைடர்ஸ் அணியில் ஆடுவதற்கு ஒப்பந்தமாகியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு சம்பியனான ராங்புர் அணியில் ஆடுவதன் மூலம் 20 வயதான மதீஷ பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் அறிமுகம் பெறவுள்ளார் என்று அந்த அணி தனது சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ளது.

இதன்படி லசித் மாலிங்க பாணியில் பந்துவீசக் கூடிய பதிரண, இலங்கை அணியின் சகலதுறை வீரரான வனிந்து ஹசரங்கவுடன் அந்த அணியில் இணையவுள்ளார்.

ராங்புர் ரைடர்ஸ் அணியின் தலைவராக பங்களாதேஷ் அணியின் தலைவர் சகீப் அல் ஹஸன் செயற்படவுள்ளதுடன், பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அசாம் மற்றும் மேற்கிந்திய தீவுகளின் அதிரடி துடுப்பாட்ட வீரர் நிக்கோலஸ் பூரன் ஆகிய வீரர்கள் இந்த அணியில் விளையாடவுள்ளனர்.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதிரண ஏற்கனவே இந்திய பிரீமியர் லீக் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஆடி வருகிறார். கடந்த முறை சம்பியனான சென்னை அணிக்காக அவர் 12 போட்டிகளில் 19 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# குணதிலக்கவின் வழக்கு விசாரணை அடுத்த வாரம்



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பெண் ஒருவரை அவரது வீட்டில் வைத்து பாலியல் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டு தொடர்பில் சிட்னி நீதிமன்றத்தில் அடுத்த வாரம் வழக்கு விசாரணையை எதிர்கொள்ளவுள்ளார்.

வரும் திங்கட்கிழமை (18) நீதிபதி ஒருவரை மாத்திரம் கொண்ட வழக்கு விசாரணையை 32 வயதான குணதிலக்க எதிர்கொள்ளவிருக்கும் நிலையில் அவரது வழக்கறிஞர் நேற்று (14) டவ்னிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தின் முன் தோன்றினார்.

இந்நிலையில் இந்த வழக்கு விசாரணை மூன்று தொடக்கம் நான்கு நாட்கள் வரை நீடிக்கும் என்றும் சிங்கள உரைபெயர்ப்பாளர் ஒருவர் உதவிக்கு வழங்கப்படும் என்றும் நீதிமன்றம் நேற்று தெரிவித்தது.

டேடிங் செயலி ஒன்றின் மூலம் தொடர்பை ஏற்படுத்திய குணதிலக்க கடந்த ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி அந்தப் பெண் மீது பாலியல் தாக்குதல் நடத்தியதாக பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

டி20 உலகக் கிண்ணப் போட்டிக்காக இலங்கை அணி அவுஸ்திரேலியா சென்றிருந்தபோதே இந்த சம்பவம் நடந்தது.

குணத்திலக்க விரைவாக நாடு திரும்பவும் தனது கிரிக்கெட் வாழ்வை தொடரவும் சாத்தியம் கொண்டதாக இந்த வழக்கு விசாரணையை விரைவுபடுத்த நீதிமன்றம் முன்னதாக ஒப்புதல் அளித்திருந்தது.

# ஸ்டொக்ஸின் அபார ஆட்டத்தால் இலங்கிலாந்து அணிக்கு வெற்றி



பென் ஸ்டொக்ஸின் அபார துடுப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இங்கிலாந்து அணி 181 ஓட்டங்களால் இமாலய வெற்றியை பெற்றதோடு 4 போட்டிகளைக் கொண்ட தொடரிலும் 2–1 என முன்னிலை பெற்றது.

ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து அணிக்காக ஸ்டொக்ஸ் 124 பந்துகளில் 15 பௌண்டரிகள் மற்றும் 9 சிக்ஸர்களுடன் 182 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் ஒருநாள் போட்டி ஒன்றில் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற இங்கிலாந்து வீரராக அவர் புதிய சாதனை படைத்தார்.

ஸ்டொக்ஸ் முன்னதாக ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றிருந்த நிலையில் அண்மையிலேயே தனது முடிவை மாற்றிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி இங்கிலாந்து அணி 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 368 ஓட்டங்களை பெற்றது. டேவிட் மாலன் 96 ஓட்டங்களை பெற்று சதத்தை தவறவிட்டார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த நியூசிலாந்து அணி 39 ஓவர்களில் 187 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று லோட்ஸில் நடைபெறவுள்ளது.

# வேற்றுக் கிரக வாசிகள் தொடர்பில் மெக்சிகோ பாராளுமன்றில் பேச்சு

## உடல் எச்சங்களும் காட்சி



மெக்சிகோ பாராளுமன்றத்தில் முதல் முறை வேற்றுக் கிரக வாசிகள் இருப்பது தொடர்பில் வாக்கு மூலங்கள் பெறப்பட்டதோடு இதன்போது மனிதன் அல்லாத இரு உடல் எச்சங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற இந்த விசாரணையில் மெக்சிகோ ஊடகவியலாளரும் நீண்ட காலமாக, அடையாளம் காணப்படாத பறக்கும் பொருட்களை ஆய்வு செய்து வருபவருமான ஜெய்மே மவுசன், இந்த மர்ம உடல்களை காட்சிப்படுத்தி, அவை வேற்றுக் கிரகத்தவர்களின் எச்சங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு கைகளிலும் மூன்று விரல்களை மாத்திரமே கொண்ட நீண்ட தலையை உடைய இந்த சிறிய உடல்கள் கண்ணாடி பெட்டியில் காட்சிக்கு வைக்கப்பட்டன.

இவை 2017 ஆம் ஆண்டு பெருவில் பண்டைய நஸ்கா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக மவுசன் தெரிவித்தார். மெக்சிகோ தேசிய தன்னாட்சி பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கார்பன் காலக்கணிப்பு ஆய்வின்படி இவை சுமார் 1000 ஆண்டுகள் பழமையானவை என்றும் குறிப்பிட்டார்.

இந்த எச்சங்கள் பூமியில் இருக்கும் எந்த உயிரினத்துடனும் தொடர்புபட்டதல்ல என்று மவுசன் மேலும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மெக்சிகோ தேசிய தன்னாட்சி பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், இந்த மாதிரிகளின் வயது மாத்திரமே தீர்மானிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

“இந்த மாதிரிகளின் பூர்வீகம் பற்றி நாம் எந்தத் தீர்மானத்திற்கும் வரவில்லை” என்றும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட இந்த தகவல்கள் தம்மை சிந்திக்க வைப்பதாகவும் கவலையை ஏற்படுத்துவதாகவும் மெக்சிகோ பாராளுமன்ற பிரதிநிதிகள் தெரிவித்திருப்பதோடு இது தொடர்பில் தொடர்ந்து பேச வேண்டி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் மவுசனின் இந்த கூற்றின் நம்பகத்தன்மை குறித்து பெரும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. இதில் பல விபரங்களும் விளக்கம் இல்லாமல் இருப்பதாக தேசிய தன்னாட்சி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானியல் ஆய்வாளர் ஜுயேட்டா பிரோ தெரிவித்துள்ளார்.

முன்னர் நிகழாத ஒன்றாகவே மெக்சிகோ பாராளுமன்றத்தில் வேற்றுக் கிரக வாசிகள் பற்றிய இந்த விசாரணை இடம்பெற்றது. அமெரிக்க பாராளுமன்றத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னதாக இது போன்ற விசாரணை ஒன்று இடம்பெற்றது. அப்போது 1930கள் தொடக்கம் மனிதர் அல்லாதோரது செயற்பாடுகள் அமெரிக்காவுக்கு தெரிந்திருக்க வாய்ப்பு உள்ளதா அமெரிக்க விமானப்படையின் முன்னாள் உளவு அதிகாரி ஒருவர் வாக்குமூலம் அளித்திருந்தார்.

இதேவேளை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா அடையாளம் காணப்படாத அசாதாரண நிகழ்வுகள் தொடர்பான விசாரணை அறிக்கையை நேற்று வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# லிபிய வெள்ளம்: உயிரிழப்பு 20,000ஐ தாண்டுமென அச்சம்

## கடலில் இருந்தும் கரையொதுங்கும் சடலங்கள்



லிபியாவின் டெர்னா நகரில் ஏற்பட்ட பேரழிவு வெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18,000 தொடக்கம் 20,000 வரை அதிகரிக்கக் கூடும் என்று அந்த நகர மேயர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அழிவுற்றிருக்கும் நகரத்தின் பகுதிகளை பார்க்கும்போது உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று நகர மேயர் அப்துல் மனம் அல் கைதி, ‘அல் அரபியா’ தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட டெர்னாவின் ஆற்றங்கரைக்கு அருகில் இருந்த பல அடுக்குமாடி கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதோடு, சுனாமி அலை போன்ற வெள்ளப்பெருக்கில் மக்கள், வாகனங்கள் மற்றும் வீடுகள் அனைத்தும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ தகவல்களின்படி ஏற்கனவே 5,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தவிர 10,000 பேர் வரை காணாமல்போயுள்ளனர். கரையோரங்களில் இருந்து உடல்கள் தொடர்ந்தும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

கடலுக்கு அடித்துச் செல்லப்பட்ட பலரது சடலங்கள் தொடர்ச்சியாக கரையொதுங்கி வருவதாக தப்ரூக்கை தளமாகக் கொண்ட லிபியாவின் கிழக்கு அரசாங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்குவதில் லிபியாவின் இரு போட்டி அரசுகளும் ஒருங்கிணைந்து செயற்படுவதாக ஐ.நா தெரிவித்துள்ளது. கிழக்கு மற்றும் மேற்கு அரசுகள் சர்வதேச உதவிகளை கோரி இருப்பதோடு இரு தரப்பும் மற்ற தரப்புடன் பேசி வருவதாக ஐ.நா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

லிபியாவின் நீண்ட கால ஆட்சியாளராக இருந்த முஅம்மர் கடாபி 2011 ஆம் ஆண்டு பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அந்த நாட்டில் அரசியல் பிளவு நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவின் மீட்பு நடவடிக்கைகளுக்கு எகிப்து, துனீஷிய, துருக்கி, இத்தாலி மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகள் உதவி வருகின்றன.

இரு அணைகள் உடைப்பெடுத்து பாரிய அளவில் திடீர் வெள்ளம் ஒன்று ஏற்பட்ட இந்த அனர்த்தத்தில் மீட்புக் குழுவினர் வீதிகள், இடிந்த கட்டடங்கள் மட்டுமன்றி வெள்ள நீர் அடித்துச் செல்லப்பட்ட கடற்கரைகளிலும் தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

மலைப் பகுதியில் இருந்து பாய்ந்த வெள்ள நீர் நகர் ஊடாக கடலை அடைந்துள்ளது. இதன்போது 23 அடி உயரத்திற்கு அலை ஏற்பட்டு எதிர்ப்படும் அனைத்தையும் அடித்துச் சென்றிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவை சங்க தூதுக்குழுவின் தலைவர் யான் பிர்டஸ் குறிப்பிட்டுள்ளார்.

நகர வீதிகள் சேற்றில் புதைந்திருப்பதோடு மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான கார்கள் தலைகீழாக புரட்டிப்போடப்பட்டும் கூரைகள் மீதும் காணப்படுகின்றன. ஒரு கார் வண்டி உயர்ந்த கட்டடத்தின் இரண்டாவது மாடியின் முகப்பு பகுதியில் சிக்கியுள்ளது.

லிபியாவில் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய போதுமான இடம் இல்லை. அது மட்டுமன்றி, சடல்களை வைக்க மருத்துவமனைகளிலும் இடமில்லை என்று கூறும் அளவுக்கு சடலங்கள் குவிந்து வருகின்றன. இதனால் பாரிய புதைகுழிகளில் உடல்கள் புதைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) தாக்கிய டானியல் புயலை அடுத்தே வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் வீதிகள் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளும் சேதமடைந்துள்ளன. இதனால் மீட்புக் குழுவினர் டெர்னா நகரை அடைவதில் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

டெர்னா நகரை நாட்டின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியால் இணைக்கும் டெர்னா நதிக்கு மேலால் போடப்பட்டிருக்கும் பாலமும் உடைந்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகள் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி காலி பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்குட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.06.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 05.10.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதி மற்றும் கிளையில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| ஏல விற்பனை செய்யப்படும் திகதி | 07.10.2023 (சனிக்கிழமை) |
| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | காலி கோட்டை கிளை |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | காலி கோட்டை, அம்பலங்கொட, எல்பிட்டிய, பத்தேகம, உடுகம, ஹிக்கடுவ, பலப்பிட்டிய, காலி பிரதான வீதி, அஹங்கம ஊரகஸ்மன்ஹந்திய, பட்டபொல, இமதுவ, தலகஸ்வல, வந்துரம்ப கொக்கல, கராப்பிட்டிய |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | வஞ்சாவல, கிந்தோட்ட, பெட்டிகலவத்த, அம்பலங்கொட, பிரதான வீதி. வத்துகெதர, கரந்தெனிய, பிட்டிகல, குருந்துகஹ, நெலுவ, ரத்கம. கேணாபீனுவல, குமாரகந்த, கொஸ்கொட, களுவெல்ல, பின்னதுவ, மீட்டியகொட, யக்கலமுல்ல, போகஹகொட, நாகொட |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்து செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்து செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**காலி.**
**தொலைபேசி இல. 091-2223563, 091-2223564, 091-2234174**

PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## இலங்கை போக்குவரத்து சபை

# சாரதிகள்/நடத்துநர்கள் பதவிக்கு சேர்த்துக்கொள்ளல்

### கௌரவமான, தரமான போக்குவரத்து சேவையின் மகத்தான பங்குதாரர்களாவதற்கு எம்மோடு இணையுங்கள்

இலங்கை போக்குவரத்து சபை, நாடளாவிய ரீதியில் பரந்து விரிந்துள்ள 107 டிப்போக்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட பிரதேச வேலைத்தளங்கள், சாரதி பாடசாலைகளைக் கொண்ட 26000 இற்கு மேற்பட்ட ஊழியர் எண்ணிக்கையினர் கடமையாற்றுகின்ற அரச பயணிகள் போக்குவரத்து நிறுவனமாவதுடன் எமது நிறுவனத்தில் சகல பிரதேசங்களிலும் உரித்தான டிப்போக்களில் வெற்றிடமாகக் காணப்படும் சாரதிகள் மற்றும் நடத்துநர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்காணும் தகைமைகள் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடம் காணப்படும் பிரதேசங்கள்**

| பிரதேசம் | சாரதி | நடத்துநர் |
|---|---|---|
| கொழும்பு | 112 | 45 |
| களுத்துறை | 70 | 26 |
| கம்பஹா | 74 | 22 |
| வடமேல் | 82 | 35 |
| சப்ரகமுவ | 82 | 33 |
| கண்டி | 80 | 30 |
| நுவரெலியா | 46 | 25 |
| ருஹுணு | 80 | 34 |
| ரஜரட்ட | 90 | 35 |
| ஊவா | 66 | 32 |
| வடக்கு | 64 | 34 |
| கிழக்கு | 66 | 30 |

**01. சாரதி பதவி (ஒப்பந்த அடிப்படை)**

**கல்வித் தகைமைகள் மற்றும் வேறு தகைமைகள்**

i. க.பொ.த (சா/தர) பரீட்சையில் 06 பாடங்களில் 02 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் (இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில்)

ii. 18-45 வயதிற்கு இடைப்பட்டிருத்தல்

iii. 03 வருடங்களுக்கு மேற்பட்ட செல்லுபடியாகும் கனரக வாகன அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல்

iv. குறைந்தபட்ச நிறை 46 கி.கி.ஆக இருத்தல்

v. உயரம் 5 அடி 3 அங்குலம்

vi. சிறந்த ஆரோக்கியமுடையவராக இருத்தல்

vii. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கனரக வாகன (பயணிகள் போக்குவரத்து விரும்பத்தக்கது) சாரதியாக பெற்றுள்ள அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**02. நடத்துநர் பதவி (ஒப்பந்தம்)**

**கல்வித் தகைமைகள் மற்றும் வேறு தகைமைகள்**

i. க.பொ.த (சா/தரம்) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 06 பாடங்களில் 02 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் (இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில்)

ii. 18-45 வயதிற்கு இடையில் இருத்தல்

iii. குறைந்தபட்ச நிறை 46 கி.கி.ஆக இருத்தல்

iv. உயரம் 5 அடி

v. சிறந்த ஆரோக்கியமுடையவராக இருத்தல்

vi. நடத்துநர் பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் கொண்டிருத்தல் விசேட தகைமையாகும்.

**பொதுவான நிபந்தனைகள் மற்றும் வழங்கப்படும் சலுகைகள்**

- ஊழியர் சேமலாப நிதிக்காக ஊழியரின் பங்களிப்பு 08%ஆவதுடன் ஊழியரால் 12% பங்களிப்பு வழங்கப்படும். ஊழியர் பொறுப்பு நிதிக்கு ஊழியரால் 03% பங்களிப்பு வழங்கப்படும்.
- மாதாந்தம் ரூ.30,000/- ஒப்பந்தக் கொடுப்பனவு மற்றும் மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்படும்.
- சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்பு வேலைச்சுற்று அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்
- சேர்த்துக்கொள்ளல் - நேர்முகத்தேர்வின் பின்னர் நடத்தப்படும் செயன்முறைப் பரீட்சை மற்றும் தொழில்சார் பாடநெறியின் அடிப்படையில் சபை ஒழுங்குகளின் பிரகாரம் இடம்பெறும்.
- சேர்த்துக்கொள்ளல் பிரதேச மட்டத்தில் இடம்பெறுவதுடன், ஒரு விண்ணப்பதாரி தாம் விரும்பும் மூன்று (03) பிரதேசங்களுக்கு விண்ணப்பித்தல் வேண்டும் அத்துடன் நியமிக்கப்பட்ட பின்னர் சேவை நிலையங்கள் மாற்றப்படமாட்டாது.

மேற்படி பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை "பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கை போக்குவரத்துச் சபை, இல.200, கிருல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு - 05" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 2023.09.30ம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். கடிதம் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் பிரதேசத்தை குறிப்பிடுவதுடன் நேர்முகத்தேர்வின் போது பாடசாலையை விட்டு செல்லும் சான்றிதழ் (மாணவர் செயற்பாட்டு அறிக்கை) கட்டாயமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மாதிரிப்பத்திரத்திற்கு அமைவாகாத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை போக்குவரத்து சபை**
**இல.200, கிருல வீதி, நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு - 05**

விண்ணப்பிக்கும் பதவி: ..........................................................

01 (அ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் : ..........................

(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................

02. முகவரி : ..........................................................

03. i. பிறந்த திகதி : ..........................................................

ii 2023.09.30ம் திகதி வயது : ...................... வருடம்.... ......................... மாதம் .......................திகதி ............

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ......................

05. சமயம் :..........................................................

06. இனம் :..........................................................

07. i. நீங்கள் இலங்கை பிரஜையா என்பது :....................

ii. அவ்வாறாயின் பதிவின் மூலமா பரம்பரையிலா என்பது :..........................................................

08. மாகாணம் :..........................................................

மாவட்டம் :..........................................................

அருகில் உள்ள இபோச டிப்போ :.................................

1. விண்ணப்பிக்கும் பிரதேசம் (முன்னுரிமை அடிப்படையில்)

1.

2.

3.

09. கல்வித் தகைமைகள்

i. க.பொ.த (சா/தரம்)

வருடம் : ..........................................................

பரீட்சை எண் :..........................................................

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| | | |

i. க.பொ.த (உ/தரம்)

வருடம் : ..........................................................

பரீட்சை எண் :..........................................................

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| | | |

10. நிறை (கிலோ) : ..........................................................

11. உயரம் அடி........................ அங்குலம் :....................

12. தொலைபேசி இலக்கம் வீடு :............ கைப்பேசி ..........

13. i. சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் (பொருந்துமாயின் மட்டும்) ..........................................................

ii. அனுமதிப்பத்திர வகுதி :..........................................

iii. செல்லுபடியாகும் காலம்:......................................

14. i. நடத்துநர் அனுமதிப்பத்திர இலக்கம் (பொருந்துமாயின் மட்டும்) :......................................

ii. விநியோகித்த நிறுவனம் :........................................

15. i. இதற்கு முன்பு இலங்கை போக்குவரத்து சபையில் சேவையாற்றி இருக்கிறீர்களா?: ................................

ii. அவ்வாறாயின் அது பற்றிய தகவல்களை விவரமாகக் குறிப்பிடுங்கள் : ................................

மேற்படி விபரங்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானதும் சரியானதும் ஆகும் என உறுதி செய்வதோடு பிழையான தகவலை வழங்கினால் அது பற்றி சபையினால் மேற்கொள்ளப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவதாகவும் உறுதி செய்கிறேன்

**திகதி :** ..........................................................

..........................................................
**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

**ச.வ.-பி 4/2011**

# 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் 10(1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர், சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்பிற்காக எவையேனும் பண்டங்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தலில் ஈடுபடுகின்ற ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குனர், இதற்கான அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட மூன்று கட்டங்களிலும் அவ்வட்டவணையின் நிரல் 2 இன் பதிவுக்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்டவாறாக இதற்கான தொடர்புபட்ட ஏதேனும் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு அவ்வட்டவணையின் நிரல் 3 இன் பதிவுக்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டுமென இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.

**தவிசாளர்**
**பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை**

**கொழும்பு**
**17 மே 2023**

**அட்டவணை**

| கொடுக்கல் வாங்கலின் கட்டங்கள் | செயற்பாடு | நிபந்தனைகள் |
|---|---|---|
| முற் கொள்வனவு கட்டம் | (1) நியாயமான வியாபாரம், விளம்பரஞ் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகள் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குனர்-<br>(அ) எவையேனும் பண்டங்களை விளம்பரஞ் செய்யும் போது, ஏமாற்றும் தன்மையான, பிழைவழியுய்த்தலான அல்லது போட்டியற்ற தன்மையான ஏதேனும் நடைமுறையில் ஏதேனும் பிரதிநிதித்துவமோ அல்லது நீக்கமோ அல்லது ஈடுபாடோ செய்தலாகாது<br>(ஆ) விற்பனையின் நீட்சி அல்லது முனைவு பண்டங்களுக்கான ஏதேனும் விசேட முனைவு உட்பட, அல்லது இலவச முன்னோட்டம், தெளிவான மற்றும் நேரடி பொருள் கொண்டுள்ள முறையில் அத்தகைய முனைவு அல்லது இலவச முன்னோட்டத்திற்கான தகுதியின் தேவைப்பாடுகள் மற்றும் அத்தகைய முனைவு அல்லது முன்னோட்டத்தில் விபரிக்கப்படாத எவையேனும் மேலதிக விதிப்பனவுகள் தொடர்பாக பாவனையாளருக்கு அறிவித்தல் வேண்டும்<br>(இ) முக்கிய நிபந்தனைகள் குறித்துரைக்கப்பட்டுள்ள உரையில் இலகுவாக வேறுபடுகின்ற, வாசிக்கப்படுகின்ற மற்றும் கிரகிக்கின்றதான ஏதேனும் முனைவு அல்லது விற்பனை தொடர்பான அத்தகைய நிபந்தனைகளை உறுதிப்படுத்துதல் வேண்டும்<br>(ஈ) அத்தகைய பண்டங்களுக்கான தளத்தின் மீது வெளிக்காட்டப்பட்ட விலையானது, ஒரு பண்டத்தின் உண்மையான கொள்வனவு விலையாகவுள்ளது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்<br>(உ) விளம்பரங்களில் போலியான அல்லது பிழைவழியுய்தலான விலைகுறித்தல் கோரல்களை எதிர்க்கின்ற பொறுப்புத்துறப்புக்களை பயன்படுத்துதலாகாது அத்துடன்<br>(ஊ) ஏதேனும் வர்த்தக செயற்பாட்டை கொண்டு செல்வதில் ஏற்புடையற்பாலதானவிடத்து, 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றியொழுகுதல் வேண்டும். |
| | (2) கோரப்படாத மின்னஞ்சல்கள், குறுஞ்செய்தி சேவைகள் முதலியன | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது எவரேனும் தள இயக்குனர்- கோரப்படாத வர்த்தக மின்னஞ்சல் தகவல்கள், குறுஞ்செய்தி சேவைகள் முதலியனவற்றைப் பெறக்கூடிய அல்லது பெறவியலாத தேர்வினைத் தெரிவு செய்வதற்கு பாவனையாளர்களை அனுமதிப்பதற்கான வினைத்திறனான மற்றும் இலகுவாக பயன்படுத்தக்கூடிய நடவடிக்கை முறைகளை விருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |
| | (3) பாவனையாளர் பரிசீலனைகள் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது எவரேனும் தள இயக்குனர்<br>(அ) பாவனையாளர்களின் பரிசீலனைகளை சேகரிப்பதற்காகவும் வெளியிடுவதற்காகவும் நியாயமானதும் மற்றும் வெளிப்படையானதுமான தரமதிப்பீடு மற்றும் பரிசீலனைப் பொறிமுறையினைக் கொண்டிருத்தல் வேண்டும்<br>(ஆ) பாவனையாளர்களின் தரமதிப்பீடு மற்றும் பரிசீலனை மீதான போலியான தரமதிப்பீடுகள் மற்றும் போலியான பரிசீலனைகளை வெளியிடுதலாகாது<br>(இ) தரமதிப்பீடு மற்றும் பரிசீலனை பொறிமுறையின் மீது தரமதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகளை வெளிக்காட்டுவதற்கு மூன்றாந் திறத்தவர்களை வாடகைக்கு அமர்த்துதலாகாது<br>(ஈ) பாவனையாளர்களினால் வெளிக்காட்டுவித்த தரமதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகளுக்காக வழங்கப்பட்டுள்ள எவையேனும் ஊக்குவிப்புகள் தெளிவான மற்றும் துலாம்பரமான முறையொன்றில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் அத்துடன் அவர்களுக்கு ஊக்குவிப்புக்கள் முறையொன்றில் வெளிப்படுத்துதல் வேண்டும் அத்துடன்<br>(உ) பாவனையாளர்களின் நேர்மறையான அல்லது எதிர்மறையான தன்மையைப் பொருட்படுத்தாது அவர்களால் வெளிக்காட்டப்பட்ட எல்லா தரமதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகள் வேண்டுமென்பதுடன் எதிர்மறையான பரிசீலனைகள் மற்றும் தரமதிப்பீடுகளை ஊக்கப்படுத்துவதற்கு முயற்சித்தலாகாது. |
| | (4) தகவல்களின் வெளிப் படையா னதன்மை | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது எவரேனும் தள இயக்குனர்<br>(அ) பிழைவழியுய்யாத முறையில் பண்டங்களை அல்லது தரமதிப்பீடு உள்ளிட்ட வணிக செயற்பாடு தொடர்பான எல்லாத் தகவல்களையும் வெளியிடுதல் வேண்டும்<br>(ஆ) அத்தகைய இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குனருடன் தொடர்புகொள்வதற்கு பாவனையாளர்களுக்கு முறையான மற்றும் அணுகத்தக்க தொடர்பாடல் பொறிமுறையொன்றினை தாபித்தல் வேண்டும். |
| | (5) தரவு சேகரித்தல் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குனர்-<br>(அ) பாவனையாளர்களின் தனிப்பட்ட தரவுகளை பெறுகின்றபோது, அவர்களுக்கு அந்தரங்கதன்மையான கூற்றொன்றினை அனுப்புதல் வேண்டும்.<br>(ஆ) பாவனையாளர்கள், சுயவிபரக்கோவையில் செய்யப்பட்டுள்ள தங்களுடைய தனிப்பட்ட தரவுகளை இற்றைப்படுத்தும் பொருட்டு பரிசீலனை செய்வதற்கும் மாற்றம் செய்வதற்கும் இயலச்செய்கின்ற அத்தகைய தரவுகளை அணுக்கம் செய்வதற்கு அவர்களுக்கான நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டும். |
| கொள்வனவு கட்டம் | (1) கட்டளையை உறுதிசெய்தல் | ஏதேனும் இ-வர்த்தக உருவம் அல்லது தளமொன்றின் இயக்குனர்<br>ஏதேனும் கட்டளையை உறுதிசெய்வதற்கு முன்னராக கட்டளை பற்றிய சாராம்சத்தை பரிசீலனை செய்வதற்கான சந்தர்ப்பமொன்றினை பாவனையாளர்களுக்கு வழங்குதல் வேண்டும். |
